விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii


சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 26 செவ்வாய்க்கிழமை (08.05.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 141

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# தீர்வுக்கான தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு பங்கேற்க வேண்டும்

## சம்பந்தன், சுமந்திரன் விருப்பம்

(கொழும்பு), இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக அரசு கூட்டவுள்ள தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்க வேண்டும் என்பதில் அதன் தலைவர் இரா.சம்பந்தன் உறுதியாக உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.



இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஜெனிவாவில் நிறைவேறியிருந்த போதிலும் தெரிவுக்குழு மூலமாகவே இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்பதில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மிகவும் விடாப்பிடியாக உள்ளார்.

எனவே, ஜனாதிபதி கூட்டவுள்ள தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு பங்குபற்றுவதன் மூலம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ள சந்தர்ப்பத்தை பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தை கூட்டமைப்பு பிரதிநிதிகள் மத்தியில் இரா.சம்பந்தன் முன்வைத்து வருவதாகவும், இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆதரவு தெரிவித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராஜா, சுரேஸ் பிரேமச்சந்திரன், சிவஞானம் சிறிதரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்கக் கூடாது என்பதில் உறுதியாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஜெனிவா தீர்மானத்திற்கு முன்னதாக இரா.சம்பந்தனை தனியாக அழைத்துப் பேசிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, கூட்டமைப்பின் சார்பில், தெரிவுக்குழுவில் இடம்பெறவுள்ள பிரதிநிதிகளின் பெயர் விபரங்களை தருமாறு கேட்டிருந்தார்.

இந்நிலையில் (24ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவை மாற்றம் மீண்டும் ஒத்திவைப்பு

அமைச்சரவை மாற்றம் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் 21ஆம் திகதி இவ் அமைச்சரவை மாற்றம் மீண்டும் மேற்கொள்ளப்படவிருந்தது. (24ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் மீள்குடியமர்வுக்காக 10 ஆயிரம் குடும்பங்கள் பதிவு

யாழ்ப்பாணத்தில் மீள்குடியமர்வுக்காக சுமார் 10 ஆயிரம் குடும்பங்கள் பிரதேச செயலகங்களில் தம்மைப் பதிவு செய்து கொண்டுள்ளன.

உயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்களே இவ்வாறு தமது பெயர்களைப் பதிவு செய்து கொண்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

இவர்களில் அநேகமானவர்கள் தென் பகுதியிலும் வெளிநாடுகளிலும் வசித்து வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உயர் பாது (24ஆம் பக்கம் பார்க்க)

**அன்பு வாசகர்களே!**

உங்கள் வலம்புரியில் இன்று முதல்
'உயிர்மீண்ட காளை மாடு'
தொடர்

நாளை முதல் சிவல்புரி
சிங்காரம் எழுதும்
'வியாழ மாற்றம்'

வாசிக்கத் தவறாதீர்கள்

## நிலையான பொருளாதாரத் திட்டம் அரசிடம் இல்லை;சாடுகிறது ஐ.தே.க

(கொழும்பு)

பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் இருந்து நழுவிச் செல்லக்கூடிய வகையிலேயே அரசாங்கம் செயற்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய கட்சியின் ஊடகப் பேச்சாளர் கஜந்த கருணாதிலக இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொருட்கள் மற்றும் சேவைகளின் கட்டணங்கள் அதிகரிக்கும்போது, நிலையான பொருளாதார கொள்கைகளை கடைப்பிடிப்பதில்லை. உள்நாட்டு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கிலேயே பால்மாக்களின் விலைகளை அதிகரிப்பதாக அரசாங்கம் கூறி வருகின்றது.

அதுபோல கோதுமை மாவின் விலையை அதிகரிக்கும்போது அரசாங்கம் கூறும் காரணம், உள்நாட்டு நெல் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கின்றோம் என்பதாகும்.

புத்த பகவான் தோன்றிய காலத்தில் ஏழு புத்திஜீவிகள் இருந்தனர். அவர்களில் சஞ்சய பெல்லட்டி புத்த என்பவரும் இருந்தார்.

அவரின் நடவடிக்கைகள் அனைத்தும் பொறுப்புக்களை தட்டிக்கழிக்கும் வகையில் நழுவிச் செல்லக் (24ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படை வீராங்கனையை சுட்டவர் தானும் தற்கொலை

(திருகோணமலை)

கடற்படை வீராங்கனையொருவரை துப்பாக்கியால் சுட்ட கடற்படை வீரரொருவர் பின்னர் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் திருகோணமலை கடற்படைத் தளத்தில் இடம்பெற்றுள்ளது.

நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் டொக்யார்ட் கடற்படைத் தளத்தில் பணியாற்றும் கடற்படைச் சிப்பாய் ஒருவர் கடற்படையின் பெண் அதிகாரி ஒருவரைச் சுட்டுக் கொன்றார்.

அதையடுத்து அந்த கடற்படைச் சிப்பாய் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். தனிப்பட்ட விரோதம் காரணமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக கடற்படை பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய (24ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாண சபைத் தேர்தல் ஜனாதிபதி இன்று முடிவெடுப்பார்

கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பிலான இறுதித் தீர்மானத்தை அரசாங்கம் இன்று எடுக்கவுள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனுடன் அண்மையில் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்தே இத்தேர்தல் குறித்த இறுதித் தீர்மானம் இன்று எடுக்கப்படவுள்ளது.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலை முன்கூட்டியே நடத்துவது தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இன்று மாலை அலரி மாளிகையில் உயர்மட்ட கூட்டம் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் சந்திரகாந்தன், இந்த மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்கள் மற்றும் கிழக்கு மாகாணத்தின் சுதந்திரக் கட்சி அமைப்பாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலை முன்கூட்டியே நடத்தக்கூடாது என அம் மாகாண சபையில் அண்மையில் ஏகமனதாக தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருந்தது.

அதேவேளை ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது இத்தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கு (24ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனிவாத் தீர்மானம் நிறைவேற நவநீதம்பிள்ளையே காரணமாம்! எதிர்ப்பை அரசு வெளியிடும்

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு எதிராக உத்தியோகபூர்வமாக எதிர்ப்பை வெளியிட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் கடந்த கூட்டத்தொடரில் அமெரிக்காவின் தலைமையில் முன்வைக்கப்பட்ட இலங்கை மீதான தீர்மானம் தொடர்பில் நவநீதம்பிள்ளையும், அவரது செயலக அதிகாரிகளும் முக்கிய பங்காற்றியுள்ளதாக குற்றம் சுமத்தியே அரசாங்கம் இந்த எதிர்ப்பை வெளியிட முடிவு செய்துள்ளது.

அரசாங்கத்தின் சார்பில் நவநீதம்பிள்ளைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கான பணிகளை ஜெனிவாவில் உள்ள இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி தமரா குணநாயகம் மேற்கொண்டு வருவதாக தெரியவந்துள்ளது என கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

அத்துடன்,ஐ.நாபொதுச்சபைமற்றும்அதன் சாசனங்களின் (24ஆம் பக்கம் பார்க்க)

மே 8, இன்று உலக செஞ்சிலுவை செம்பிறை தினம்....!
World Red Cross Red Crescent Day
YOUTH ON THE MOVE
முன்னேற்றத்தில் இளைஞர்கள்
"அதீத செஞ்சிலுவைப் பணியில் நல்லதொரு எதிர்காலத்தை நோக்கி"
SRI LANKA RED CROSS SOCIETY
International Federation of Red Cross and Red Crescent Societies
(C-6560)




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சம்பந்தன் சிங்கக் கொடி ஏந்தியது சரி என்றால்

# அரசுடன் இணைந்த நான் துரோகியா?

# பியசேன எம்.பி. கேள்வி



(கொழும்பு)

இலங்கையின் தேசியக் கொடியான சிங்கக் கொடியை சம்பந்தன் ஏந்தியது சரி என்றால் அபிவிருத்திக்காக அரசுடன் இணைந்த என்னை துரோகி எனக் கூறுவது எந்தவகையில் நியாயமானது?

இந்தக் கேள்விக்கு சுமந்திரன் என்ன பதில் கூறப்போகிறார்? இவ்வாறு கேட்டுள்ளார் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாகிப் பின்னர் அரசு பக்கம் மாறியுள்ள பொடியப்பு பியசேன.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

முள்ளிவாய்க்காலில் தமிழீழ விடுதலைப் போராட்டம் மௌனிக்கப்பட்டப் பின்னர் சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்புக் கட்சி தமிழினத்தை விற்றுவிட்டது.

அக்கட்சிக்குள் உள்ளோர் ஒற்றுமையுடன் இருப்பதில்லை. ஆளுக்காள் ஒவ்வொரு கருத்துக்களை கூறிவருபவர்கள். இதனையடுத்துத்தான் நான் அரசுடன் இணைந்தேன்.

சம்பந்தன் சிங்கக்கொடியை ஏந்திய விவகாரத்தால் கூட்டமைப்பின் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூறும் மாற்றுக் கருத்துக்களிலிருந்து அந்தக்கட்சியின் ஒற்றுமை எப்படியிருக்கின்றது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

ரணிலின் குள்ளநரி தந்திரம் என்று அரிய நேத்திரன் கூறுகிறார். சம்பந்தனின் செயலுக்காக மாவை மன்னிப்புக் கோருகிறார். ஆனால், சம்பந்தன் மன்னிப்புக் கோர வேண்டிய அவசியம் இல்லையென்று கூறுகிறார்.

இது இவ்வாறு இருக்க பத்திரிகை ஒன்றுக்கு அளித்த செவ்வியில் சுமந்திரன், ஒன்றுபட்ட நாட்டின் தேசியக் கொடியை கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஏந்தியதில் என்ன தவறு இருக்கின்றது. என்று கேள்வியெழுப்பியுள்ளார்.

இதிலிருந்து சம்பந்தன் ஐயாவின் குழுவினரின் ஒற்றுமை எவ்வாறு இருக்கின்றது என்பது தெட்டத்தெளிவாகின்றது. கூட்டமைப்பு எம்.பிக்கள் ஒவ்வொருவரும் ஒற்றுமையுடன் இருப்பதில்லை. அவர்கள் தங்கள் பதவிகளை தக்கவைத்துக் கொள்வதற்காக ஆளுக்காள் ஒவ்வொரு கருத்துக்களை கூறிவருகின்றனர். தமிழினத்தை விற்று வருகின்றனர்.

கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் எம்.பி. சுமந்திரனிடம் நான் ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகின்றேன். அதாவது, உங்கள் கட்சிக்குள் இருந்த பகைமையை அடுத்து தமிழ் பிரதேசங்களின் அபிவிருத்தியை கருத்தில் கொண்டு நான் அரசுடன் இணைந்தேன் இதனையடுத்து என்னை தமிழினத் துரோகி என்று சொன்னீர்கள்.

ஆனால், தற்போது உங்கள் தலைவர் சம்பந்தன் ஐயா யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் முன்னிலையில் சிங்கக்கொடியை ஏந்தி கடும் விமர்சனத்துக்குள்ளாகியுள்ளார். இதனை நீங்கள் தவறு இல்லையென்று கூறு கிறீர்கள். ஆனால், அரசுடன் இணைந்த என்னை ஏன் துரோகியெனக் கூறுகிறீர்கள்? இது எந்த வகையல் நியாயமானது? இவ்வாறு கேட்டுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் பியசேன. (ந-8)

## பாம்பு தீண்டி குடும்பஸ்தர் பலி

(தர்மபுரம்)

விஷப்பாம்பு தீண்டியதில் குடுப்பஸ்தர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 2 மணியளவில் விசுவமடு புன்னைநீராவிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த அ. செல்வநாயகம் (வயது 55) என்பவரே பாம்புக்கடிக்கு இலக்காகி தர்மபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்தவர் ஆவார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இவர் புன்னைநீராவி கமக்கார அமைப்புக்களின் தலைவராக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-3,252)

## கிளி.பல்கலை வளாகத்திற்கு அமைச்சர்கள் விஜயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ்.பல்கலைக்கழக பொறியியல் பீடம் மற்றும் விவசாய பீட வளாகத்தை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க ஆகியோர் நேற்றைய தினம் சென்று பார்வையிட்டுள்ளனர்.

மேற்படி வளாகத்தில் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் காணியை பார்வையிட்டதுடன் மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டிட புனரமைப்புப் பணிகள் குறித்தும் ஆராய்ந்துள்ளனர்.

500 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள இவ் வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட வேண்டிய கட்டிடங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இதில் ஈ.பி.டி.பி.நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், இலங்கைக்கான இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் மகாலிங்கம், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் உட்பட துறை சார்ந்த அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

மேற்படி புனரமைப்புப் பணிகள் வெகு விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

## வடக்கிலுள்ள இந்தியப் பிரஜைகளுக்கு யாழிலுள்ள தூதரகம் விடும் அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியாவின் கொன்சுலேற் ஜெனரல் இலங்கையின் வடமாகாணத்திலுள்ள இந்திய பிரஜைகளுக்குள்ள குறைகள் மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நிகழ்வுகள் மேல் கவனம் செலுத்துவதற்காக பின்வரும் பொறிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படும் என அறியத்தருகின்றார்.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியாவின் கொன்சுலேற் ஜெனரல் அலுவலகத்தில் கொன்சுலர் ஜெனரலை ஒவ்வொரு மாதமும் வரும் முதலாவதும், மூன்றாவதும் செவ்வாய்க்கிழமைகளில் மாலை 4-5 மணிக்கிடையில் சந்திக்க முடியும். கொன்சுலர் ஜெனரலை சந்திக்க விரும்புபவர்கள் தாங்கள் விவாதிக்கப்போகும் விவகாரம் பற்றி ஒரு சுருக்க விபரத்துடன் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அலுவலர்களுக்கு குறைந்தது ஒரு நாள் முன்னதாக அறிவித்தல் தரப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஸ்ரீ.அ. இராஜமாணிக்கம், கொன்சல் (CPV) +94 021 2220995 (வேலை நாட்களில்) +94 0212220504, ஸ்ரீ. ஜோஸ் றெபேட், உதவி கொன்சுலர் அலுவலர், +94 021 2220504 (வேலை நாட்களில்), இந்திய கொன்சுலேற் ஜெனரல், யாழப்பாணம் (வரவேற்பு கூடம் - வேலை நாட்களில்) +94 021 2220504-05, இந்திய பிரஜைகளின் விபரங்களை பதிவு செய்து மேற்குறிப்பிட்ட அலுவலர்களுக்கு அறிவிக்கும்படி வரவேற்பு கூடத்தில் கடமையில் இருக்கும் அலுவலர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அனைத்து இந்திய பிரஜைகளும் கொழும்பு இந்திய உயர்ஸ்தானிகராலய இணையத்தள முகவரி www.hoicolombo.org இதனூடாக நேரடியாக பதிவு செய்ய வேண்டப்படுகிறீர்கள்.

இவ் இணையத்தளத்தின் முகப் பக்கத்தில் உள்ள பதிவு செய் என்ற பகுதியின் மேல் கணனி சுட்டியை அழுத்தியதும் கீழ் நோக்கி இறங்கி வரும் கட்டத்தில் உள்ளடங்கியிருக்கும் மூன்று தேர்வுகளில் இரண்டாவது தேர்வான 'இந்திய பிரஜைகளை பதிவு செய்தல் படிவம்' ஐ தெரிவு செய்து கேட்கப்பட்ட விபரங்களை பூர்த்தி செய்க. இதற்கு மேலதிகமாக இந்திய பிரஜைகள் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய கொன்சுலேற் ஜெனரல் அலுவலகத்திற்கு தங்களின் தனிப்பட்ட ஈடுபாடுகளுக்கும், கொன்சல் அல்லது உதவி கொன்சுலர் அலுவலரிடம் பதிவு செய்யவும் வருகை தருவது வரவேற்கப்படுகிறது. (ந)

## காரை கசூரினா கடற்கரையில் மதம் 'மாற்றல்' பிரசாரம்

## உல்லாசப் பயணிகள் அதிருப்தி

(நவாலி)

காரைநகர் கசூரினா கடற்கரை பகுதியில் உல்லாசப் பயணிகளுக்கென அமைக்கப்பட்ட மண்டபத்தில் மதமாற்றம் சார்ந்த நிகழ்ச்சிகளை நடத்துவதால் உல்லாசப் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காரைநகர் கசூரினா கடற்கரைப்பகுதியில் உள்ள உல்லாசப் பயணிகள் தங்கும் மண்டபத்தில் மதம் மாற்றும் அமைப்பு ஒன்று தமது மதம் சார்ந்த நிகழ்சிகளை நடத்தியுள்ளது. அத்துடன் ஒலி பெருக்கி மூலம் தமது மதப் போதனைகளையும் நடத்தியுள்ளது.

இதனால் உல்லாசப் பயணிகள் மரநிழல்களிலேயே தங்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இதற்கான அனுமதி பெறப்பட்டதா பெறப்படவில்லையா என அறியமுடியாதுள்ளது.

எனவே உரிய தரப்பினர் உல்லாசப் பயணிகளுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் மதம் சார்ந்த நிகழ்சிகளை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படக்கூடாது என உல்லாசப்பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-3,26)

## கிராம சேவையாளர் தாக்கப்பட்டார்

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்கள் நடத்திய தாக்குதலில் கிராம சேவகர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று பகல் 11 மணியளவில் மிருசுவில் பாம் பகுதியில் இடம் பெற்றுள்ளது. கொடிகாமம் மற்றும் மிருசுவில் பாம் பகுதிக்குரிய கிராம சேவையாளரான மிருசுவிலைச் சேர்ந்த ஞானேஸ்வரன் (வயது 57) என்பவரே அச்சம்பவத்தில் படுகாயமடைந்தவராவார்.

இரண்டு மோட்டார் சைக்கிளில் தலைக்கவசம் அணிந்து வந்த 4 பேர் கொண்ட குழுவினரே இவரை அவரவது அலுவலகத்திற்கு முன்பாக வைத்து கொட்டன்களால் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

படுகாயமடைந்த கிராம சேவகர் அம்புலன்ஸ் மூலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார்.

இச்சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-85)

## விழிசிட்டியில் திருவிழா

தெல்லிப்பழை விழிசிட்டி ஞான வைரவர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று செவ்வாய்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் நடைபெறவுள்ளதாகவும் தினமும் பிற்பகல் 3 மணிக்கு திருவிழாக்கள் ஆரம்பமாகும் எனவும் ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ந-9)

## மட்டக்களப்பில் மினி சூறாவளி

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஊத்துச்சேனை மற்றும் வடமுனை ஆகிய கிராமங்களில் நேற்று திங்கட்கிழமை மாலை வீசிய மினி சூறாவளியால் அக்கிராமங்களில் மக்கள் குடியிருந்த தற்காலிக குடிசைகள் தேசமடைந்துள்ளதுடன் அக்கிராமங்களிலிருந்த மக்கள் இடம் பெயர்ந்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவி பணிப்பாளர் எஸ்.இன்பராஜன் தெரிவித்தார்.

மீள்குடியேற்ற கிராமங்களில் வீசிய மினி சூறாவளியினால் இக்கிராமங்களில் இருந்து 80 குடும்பங்கள் இடம் பெயர்ந்து ஊத்துச்சேனை அரசினர் தமிழ் கனிஷ்ட பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இக் குடும்பங்களுக்கு சமைத்த உணவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் சேத விபரங்கள் குறித்த தகவல்கள் திரட்டப்பட்டு வருவதாகவும் உதவி பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி கிராமங்களில் வசித்து வந்த மக்கள் கடந்த கால போர்ச்சூழல் காரணமாக இடம் பெயர்ந்து பின்னர் தற்காலிக குடிசைகளில் வசித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-8)

கற்க. கற்பவை கற்க. கற்பவை, கசடறக் கற்க.
YAALH ENGLISH ACADEMY
ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
- உத்தியோகத்தர்க்கு
- உயர் கல்வி மாணவர்க்கு
- A/L படித்தவர்க்கு
- பிறநாடு செல்பவர்க்கு
- தாய்மார்க்கு
- பாடசாலை மாணவர்க்கு
விபரங்கள் + பெயர் பதிவு : 077 3212 711 மூலம்
வகுப்பிட அனுசரணை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி : யாழ்நகர் (8284)

அறை வாடகைக்கு
Chundukuli பாடசாலைக்கு அருகில் அமைதியான சூழலில் கௌரவமான இடத்தில் வேலை பார்க்கும் ஒரு பெண் பிள்ளைக்கு Room வாடகைக்கு உண்டு. (8294)
தொடர்பு: 0750828308



# இன்று ஒரு தகவல்

## கழுதையும் கற்றுக் கொடுக்கும்

ஒரு சராசரி மனிதனுடைய இயல்பு என்ன? இன்பம் வந்தால் துள்ளிக்குதிப்பான். துன்பம் வந்தால் துவண்டு போய் மூலையிலே இருந்து விடுவான். “இவன்தான் சராசரி மனிதன்.

ஆனால், ஒருவன் இன்பம் வந்தால் அதற்காக மகிழ்ச்சி அடைவதில்லை... துன்பம் வந்தால் அதுக்காக சோர்ந்து போவதுமில்லை என்று வைத்துக்கொள்வோம். அப்படி இருந்தால் அவன் சாதாரண மனிதன் இல்லை.

ஒரு ஊரிலே ஒரு ஞானி இருந்தார். அவரைத் தேடி ஒருவன் வந்தான்.

“ஐயா! ஞானத்திலே சிறந்தது எது?” என்று கேட்டார்.

இதற்கு அந்த ஞானி சொன்னார் “இன்பத்தினால் மகிழ்ச்சி அடையாமலும் துன்பத்தினால் சோர்வடையாமலும் இருக்கிறதுதான் அது” என்றார்.

“ சரி சுவாமி...அப்படிப்பட்ட ஞானம் உங்களுக்கு எப்படி வந்தது? ” என்று இவன் கேட்டான்.

“அதை ஒரு கழுதையிடமிருந்து நான் கற்றுக் கொண்டேன்” என்றார்.

இவருக்கு ஒன்றுமே புரியவில்லை. ஒரு மாதிரியாக இருந்தார். இதை அவர் புரிந்துகொண்டார்.

“ நீங்கள் நாளைக்குக் காலையிலே ஆசிரமத்திற்கு வாருங்கள்... புரியும்படியாக கூறுகிறேன்” என்றார்.

“ சரி” எனக் கூறிவிட்டு புறப்பட்டார்.

மறுநாள் விடியற் காலையிலேயே ஆச்சிரமத்திற்கு வந்து சேர்ந்தார். ஞானி அவரை அழைத்து உட்கார வைத்துச் சொன்னார்... சிறிதுநேரத்திலே இந்த வழியாக ஒரு கழுதை போகும். அதைக்கவனத்தில் வைத்துக்கொள்” என்றார்.

இவருக்கு ஒன்றுமே புரியவில்லை. ஒரே குழப்பமாக இருந்தது. இருந்தாலும் ஞானி கூறிய மாதிரியே அமர்ந்திருந்தார்.

சிறிது நேரத்திலேயே அந்த வழியாக ஒரு கழுதைபோனது... அதனது முதுகு நிறைய அழுக்குமூட்டைகள்... அதனை ஒரு சலவைத் தொழிலாளி கூட்டிச் சென்றான்.

சற்றுத்தூரத்திலே ஒரு ஆறு... அங்கே போய் துணியெல்லாம் சுத்தப்படுத்திவிட்டு மாலைநேரமாக மூட்டையை சுமந்து கொண்டு போகும் அந்தக் கழுதையைக் கவனித்தார்.

“ சாயங்காலம் வரும்வரை நீங்கள் இங்கேயே இருக்க வேண்டும்” என்றார். அதேமாதிரி இவரும் இருந்தனர்.

“ சாயங்காலம் வந்தது. அந்தக்கழுதை தனது முதுகிலே சலவை செய்யப்பட்ட துணி மூட்டையை அது பாட்டுக்குச் சுமந்து போய்க்கொண்டிருந்தது.

பெரியவருக்கு ஒன்றுமே புரியவில்லை. பொறுமையாக இருந்தார்.

“சரி சுவாமி... இந்தக் கழுதைக்கும் உங்கள் ஞானத்திற்கும் என்ன தொடர்பு? ”என்று கேட்டார்.

“ ஐயா... இந்தக்கழுதை இதேமாதிரி தினமும் காலையிலே அழுக்கு மூட்டைகளைச் சுமந்து ஆற்றிற்குப் போகிறது. மாலையிலே வெண்மையான சுத்தமான துணிகளைச் சுமந்து கொண்டு திரும்பி ஊருக்குப்போகிறது.

காலையிலே இது போகும்போது முதுகிலே அழுக்கு மூட்டைகளைச் சுமந்து போவது அதற்கு வருத்தம் இல்லை.

சாயங்காலம் திரும்பிவரும்போது சுத்தமான துணிகளை சுமந்து வருகிறோமே என்ற மகிழச்சியும் அதற்கு இல்லை.

இதைப்பார்த்துத்தான் நானும் அதேமாதிரி ஞானத்தைக் கற்றுக்கொண்டேன்” என்றார்.

அதனாலே யார் கற்றுக்கொடுக்கிறார்கள் என்பது முக்கியமல்ல. எதைக்கற்றுக்கொள்கிறோம் என்பதுதான் சிறந்ததாகும்.

ஒரு சினிமாவைப் பார்க்கிறோம். ஒரு அருவி பாய்ந்து கொண்டிருக்கிற மாதிரி காட்சி வருகிறது. அந்த அருவி வழியாக தண்ணீர் வழிகிறது. படம் முடிந்தவுடன் பார்த்தீர்கள் என்றால் அந்தத் திரை நனைந்தா இருக்கும்.

ஒரு படத்திலே தீப்பிடித்து எரியும் காட்சியைப் பார்க்கிறோம். காட்சி முடிந்ததும் அந்த வெண்திரையே கருகிப்போய் இருக்குமா?

படத்திலே வரும் தண்ணீரும் நெருப்பும் அந்தத் திரையை பாதிப்பதில்லை.

நாம் அந்தத் திரை மாதிரி இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அந்தப்பக்குவம் ஏற்பட்டுவிட்டால் இன்பமும் துன்பமும் நம்மை எதுவுமே செய்யாது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழர்களைக் கொன்று குவித்ததில் மத்திய அரசுக்கும் பங்கு உண்டு-வைகோ

அப்பாவி தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். இது உலகத் தமிழர்களிடம் வேதனையை உருவாக்கியுள்ளது என ம.தி.மு.க. செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

ம.தி.மு.கவின் 19ஆம் ஆண்டு ஆரம்பவிழாவையொட்டி திருவான்மியூரில் பொதுக்கூட்டம் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் மதுவின் பிடியில் இளைஞர்கள் உள்ளனர். இளைஞர்களை முன்னேற்றப்பாதையில் அழைத்துச்செல்ல மதுவை ஒழிக்கவேண்டும். கடந்த ஆட்சியில் தொடர்ந்த அதேதிருட்டு இந்த ஆட்சியிலும் தொடர்கிறது. யாருக்கும் பாதுகாப்பு இல்லை. கொலை, கொள்ளைச் சம்பவங்கள் தொடர்ந்து நடந்து வருகிறது. ஒரு பவுண் நகைக்காக வயதான மூதாட்டியின் கழுத்தை அறுத்துச் சென்று விடுகின்றனர்.

அப்பாவித்தமிழர்களைக்கொன்று குவித்ததற்கு மத்திய அரசுதான் காரணம் .இதில் மத்திய அரசில் அங்கம் வகித்தவர்களும் குற்றவாளிகள் தான். இந்த வருடத்தில் தேர்வு பயத்தால் 19 மாணவர்கள் தற்கொலை செய்துள்ளனர். இது தவிர்க்கப்பட வேண்டும்.ம.தி.மு.க. 19ஆவது வருடத்தில் அடியெடுத்து வைத்துள்ளது. ஏற்கனவே பல இன்னல்களையும் சோதனைகளையும் சந்தித்துவிட்டோம். இனி நாங்கள்எழுச்சிபெறுவோம். தமிழகத்தில்மாற்றம்வரும். அந்த மாற்றத்தில் ம.தி.மு.க மகுடம் சூட்டும் இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் கே.கழக குமார், வேளச்சேரி பகுதிச் செயலாளர் சு.செல்வ பாண்டியன், பாலவாக்கம் சோமு, , மாநில மகளிர் அணிச் செயலாளர் குமரி விஜயகுமார், ஜீவன், தரமணி, ரவி, மூர்த்தி, செங்குட்டுவன்,தமிழரசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-2)

# வானிலையில் திடீர் மாற்றம்

## மழை பெய்யும்

வானிலையில் திடீரென மாற்றம் ஏற்பட்டிருப்பதால் தென்மேற்கு கரையோரப் பிரதேசங்களில் அடுத்து வரும் இரண்டொரு தினங்களுக்கு காலை வேளையில் மழை பெய்யும் என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் வானிலையாளர் சமிந்திர டி சில்வா தெரிவித்துள்ளார்.

வானிலையில் ஏற்பட்டிருக்கும் இத்திடீர் மாற்றம் காரணமாக தென்கிழக்கு, வடக்கு மற்றும் மன்னார் குடா கடற் பரப்புக்கள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும் எனவும் அவர் கூறினார்.

அதேவேளை ஊவா, மத்தி, வடக்கு, கிழக்கு ஆகிய மாகாணங்களில் பிற்பகலிலோ மாலை வேளையிலோ இடி மின்னலுடன் மழை பெய்யும். இச்சமயங்களில் திடீரென காற்றின் வேகம் அதிகரிக்கும். அத்தோடு இடி மின்னலும் கடுமையாகக் காணப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான சமயங்களில் இடி, மின்னல் பாதிப்புக்களிலிருந்து தவிர்ந்து கொள்ளுவதில் ஒவ்வொருவரும் கூடிய கவனம் செலுத்துவது அவசியம் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 200 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 35-40 | 40 | 50 |
| தக்காளி | 120 | 120 | 120-140 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 30 | 30 |
| கோவா | 15 | 30 | 40 |
| கரட் | 40 | 40 | 80 |
| பூசணி | 20 | 20 | 40 |
| புடோல் | 45 | 40 | 60 |
| வாழைக்காய் | 15-20 | 20 | 40 |
| சின்ன வெங்காயம் | 40-70 | 40-90 | 50-80 |
| பெரிய வெங்காயம் | 75 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 160 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 50-60 | 50 | 60 |
| லீக்ஸ் | 100 | 90 | 120 |
| பீற்றூட் | -- | 60 | 90 |
| கறிமிளகாய் | 40 | 60 | 100 |
| முருங்கைக்காய் | 150 | 160 | 200-300 |
| போஞ்சி | -- | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | -- | 180 | -- |
| கீரை - 1 பிடி | 10-12 | 20 | 25-30 |
| தேசிக்காய் | 100 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 15-20 | 30 | 18-20 |

# இராசி பலன்

*08.05.2012*
*(சித்திரை 26, செவ்வாய்க்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு*
*திருதியை பின்னிரவு 5.52 மணிவரை*
*கேட்டை பின்னிரவு 1.51 மணிவரை*
*இராகுகாலம் 2.54-4.24 மணிவரை*
*சுபநேரம் 10.24-11.54 மணிவரை*
*சித்தாமிர்தம்.*

**மேடம்** குழப்பங்கள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை, உறவினர் வழியில் சுப விரயங்கள் ஏற்படலாம்.

**இடபம்** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள்,அதிர்ஷ்டகரமான நாள், எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும், கௌரவமான நாள்,மகிழ்ச்சிகரமான செய்திகள் வந்து சேரும் நாள்.

**மிதுனம்** வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்,காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரும், மனதில் உற்சாகமும் தன்னம்பிக்கையும் துளிர்விடும் நாள்,தொழில் நன்மையுண்டு.

**கடகம்** விருந்தினர் வருகையுண்டு, கல்வி நலன் கருதி ஒரு தொகையை செலவு செய்யும் சூழ்நிலை உருவாகும், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிங்கம்** சிந்தித்து செயற்பட்டு சிறப்படைய வேண்டிய நாள், தாய்வழி அனுகூலமுண்டு, தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**கன்னி** உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்ட முன்வருவர்,இனிய அனுபவங்கள் ஏற்படலாம்,அந்நியர் சந்திப்பால் நன்மையுண்டு, தன்னம்பிக்கையோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள்.

**துலாம்** எதிர்பாராத தனவரவுகள் இல்லம் தேடி வரலாம்,பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைத்து மகிழ்வீர்கள், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் கிடைக்கலாம்.

**விருச்சிகம்** குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, ஆன்மீக சிந்தனை மேலோங்கும், பயணத்தால் பலன் கிடைக்கும், நினைத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை எடுப்பீர்கள்.

**தனுசு** தொழிலில் எதிர்பாராத இடமாற்றம், ஊர் மாற்றம் என்பன வந்து சேரலாம், நண்பர்கள் வழியில் சுப விரயங்கள் ஏற்படலாம்,திட்டமிட்ட பயணமொன்றில் திடீர் மாற்றங்கள் செய்யும் சூழ்நிலை ஏற்படலாம்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம்,தொழில் ரீதியாக புதிய முயற்சிகள் கைகூடும், தனவரவு திருப்திகரமாக அமையும்,வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள்.

**கும்பம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள்,தொழில் நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றியளிக்கும், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும், வாக்கு மேன்மையுண்டு.

**மீனம்** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும், தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள், திடீர் பயணங்களால் பலன் உண்டு, எதிரிகள் விலகுவர்.

வளவன்

# மருதங்கேணிக்கு 63 வருடங்களின் பின்னர் மின்சார வசதி கிடைத்தது

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி மற்றும் தாழையடி பிரதேசங்களுக்கு 63 வருடங்களுக்குப்பின் கடந்த வியாழக்கிழமை முதல் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கில் மேற்குறித்த பிரதேசங்களுக்கு 1948 ஆம் ஆண்டுக்கு முன்னர் மின்சாரம் வழங்கப்பட்டதாகவும் அதன் பின் மாறிமாறி வந்த அரசாங்கங்கள் வடமராட்சி கிழக்கு பிரதேசத்தை பின்தங்கிய பிரதேசமாகவே கருதியது. இதனால் அப்பகுதி மக்கள் மின்சாரத்தின் பயனை அடைய முடியாதவர்களாகவே வாழ்ந்து வந்துள்ளனர்.

கடந்த காலயுத்தத்தினால் சொல்லொணா துயரங்களை அனுபவித்த மக்கள் கடந்த 2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தினாலும் பேரிழப்புக்களை சந்தித்தனர்.

தற்போது அரச நிறுவனங்கள் மற்றும் ஆலயங்கள், தேவாலயங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்ட போதிலும் மக்களின் வீடுகளுக்கான மின்சாரம் வழங்குதல் இன்னும் பூர்த்தியாகவில்லை.

அப்பகுதி மக்களின் மின் இணைப்பு வேலைகளை பூர்த்தி செய்த வீடுகளுக்கு வடமராட்சி மின்சார சபையினரால் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு மிகவிரைவில் மின்சாரம் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-3-24)

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட குருநகர் I பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ. ஞானஜோதி அறிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை புதன்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை குருநகர் சி.டி.எம். எச்.இற்கு முன்பாகவும் பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை செபஸ்ரியார் கோவில் அருகாமையிலும் வைத்து வழங்கப்படவுள்ளது.

(அ-9)




# கிரிக்கெட்போட்டி

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழத்தின் அணிக்கு 10 ஓவர் 11 பேர் கொண்ட கிரிக்கெற் போட்டிகள் எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சியில் 32 அணிகள் இப்போட்டியில் பங்குபற்றவுள்ளன. (அ-3-24)

# பதிவை மேற்கொள்ளலாம்

(சாவகச்சேரி)

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் 53 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கைதடி வளர்மதி விளையாட்டு கழகமும் தென்மராட்சிக்கு உட்பட்ட விளையாட்டு கழகங்களுக்கிடையிலான செற் அப் முறையிலான கரப்பந்தாட்டம், கிரிக்கெட் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் தமது பெயர் விபரங்களை வளர் மதி விளையாட்டுக்கழக செயலாளருடன் தொடர்பு கொண்டு நாளை மறுதினம் வியாழக்கிழமைக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-29)

# உதைபந்தாட்ட போட்டி

(கரவெட்டி)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான ஆண்களுக்கான 15, 17, 19 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்ட போட்டி இன்றும் நாளையும் நாளை மறுதினமும் வடமராட்சியில் இடம்பெறவுள்ளது.

இதில் 15 வயது பிரிவினருக்கான போட்டிகள் மாலுசந்தி மைக்கல் விளையாட்டு கழக மைதானத்திலும் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளது. 17 வயது பிரிவினருக்கான போட்டிகள் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்திலும் திக்கம் இளைஞர் விளையாட்டு கழக மைதானத்திலும் நடைபெறவுள்ளது.

19 வயது பிரிவினருக்கான போட்டிகள் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்திலும் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுகழக மைதானத்திலும் நடைபெறவுள்ளது. (அ-3-24)

# தென்மராட்சி கல்வி வலய தமிழ் தினப்போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு ,

**இசைக்குழு-I (6-9 வரை)**

கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., மட்டுவில் வடக்கு சந்திர மௌலீசா ம.வி., சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை.

**நடனம் தனி பிரிவு -II**

மோ. தனுசிகா (மிருசுவில் அ.த.க.பாடசாலை), இ. சியானுயா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), சோ. நிவேதிகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி),

**நடனம் தனி பிரிவு III**

ஈ.வித்தகி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஆ.யசோதினி (மீசாலை வீரசிங்கம் ம.க.), இ. பிரியா (நாவற்குழி ம.வி.), த.பிறேமினி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி)

**நடனம் - தனி பிரிவு IV**

ஜெ.கம்சனா (சாவகச்சேரி ம.க.), லோ. சங்கீர்த்தனா (மீசாலை வீரசிங்கம் ம.க.), த.துஷ்ஜனா (உசன் இராமநாதன் ம.வி.)

**நடனம் தனி பிரிவு V**

லோ. மயூரி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சி.கிருசாந்த் (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), வி.யானுஷா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி),

**நடனம் குழு (6-9)**

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி , மிருசுவில் அ.த.க.பாடசாலை, சாவகச்சேரி மகளிர் கல்லூரி

**நாட்டிய நாடகம் திறந்த போட்டி**

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ,மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி,

**இசை- தனி பிரிவு- II**

க.ரதன் (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.), வே. நிலக்ஷன் (உசன் இராமநாதன் ம.வி.), ர.திலக்ஷன் (மட்டுவில் சந்திரமௌலீசா வித்தி,

**இசை - தனி பிரிவு III**

ந. கானப்பிரியா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), செ. துயானி (மட்டுவில் சந்திர மௌலீசா வித்தியாலயம்), உ.சுரெப்தா (வரணி ம.வி.)

**இசை-தனி பிரிவு -IV**

ஏ.சயிந்தா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), செ.ஜெனிஸ்கா (உசன் இராமநாதன் ம.வி), வி. மதர்சினி (விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம்

**இசை - தனி (பிரிவு V)**

சிவ. அகிலா (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), நி.சிவரஞ்சினி (கைதடி முத்துக் குமாரசாமி ம.வி.) பா. நிரோஷா (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி). (அ-3-29)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் கட்டமைப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதாலும் நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கோண்டாவில் பிரதேசத்தின் மேற்குப் பகுதி, குளப்பிட்டிப்பிரதேசம், கொக்குவில் பிரதேசத்தின் ஒரு பகுதி, நாச்சிமார் கோவிலடி, புன்னாலைக்கட்டுவான், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# இராணுவ காவலரண்கள் 12 அகற்றப்பட்டன



(பருத்தித்துறை)

பருத்தித்துறை மருதங்கேணி வீதியில் இருந்த 12 இராணுவ காவலரண்கள் அகற்றப்பட்டுள்ளன.

நாகர்கோவில் பிரதேச பகுதியில் இருந்து செம்பியன்பற்று வரை இருந்த காவலரண்களே அகற்றப்பட்டுள்ளன. முன்னர் இராணுவ நடவடிக்கையின் போது அமைக்கப்பட்ட காவலரண்களே தற்போது அகற்றப்பட்டுள்ளன.

எனவே தற்போது மக்கள் இவ்வீதியில் இலகுவாக பயணம் செய்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-3-10)



அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் இந்து ஆலயங்களும் இந்து நிறுவனங்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகள், இடையூறுகள் தொடர்பாக ஆராயும் அவசர மாநாடு நேற்று இந்து மாமன்றத்தின் இந்து ஆராய்ச்சி நிலையத்தில் இடம்பெற்றது. இதில் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் ஆகியோர் உரையாற்றுவதையும் மாநாட்டில் கலந்து (படங்கள் :- அலுவலகச் செய்தியாளர்)

# கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் இடம்பெறும் என்ற நம்பிக்கை வலுவடைந்துள்ளது?

## அமைச்சர் தினேஷ் தெரிவிப்பு



தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக அமைக்கப்பட்டுள்ள பாரா ளுமன்ற தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஐக்கிய தேசிய கட்சியும் கலந்து கொள்ளும் என்ற எமது நம்பிக்கை மேலும் வலுவடைந்துள்ளது.

குறித்த இரண்டு கட்சிகளும் பாராளு மன்ற தெரிவுக் குழுவுக்கு தமது பிரதிநிதிக ளின் பெயர்களை வழங்குவார்கள் என்று தொடர்ந்து நம்புகின்றோம் என்று ஆளும் கட்சியின் பிரதமகொறடாவும் அமைச்சரு மான தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

எனவே தேசிய பிரச்சினைக்கு சகலரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வைக் காண்பத ற்கு எதிர்க்கட்சிகள் விரைவாக பாராளுமன்ற தெரிவுக்குழுவில் கலந்து கொள்ளவேண்டும் என்று மீண்டும் கோரிக்கை விடுக்கின்றோம் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக அரசாங்கத்தினால் அமைக்க ப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக்குழுவின் நிலைமை குறித்து விபரிக்கையிலேயே அமை ச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இவ்விடயம் குறித்து மேலும் கூறி யதாவது,

அரசியலமைப்பின் பிரகாரம் தேசியக் கொடிக்கும் தேசிய கீதத்துக்கும் கௌரவம் செலுத்தப்படவேண்டும். அந்த வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தேசியக் கொடிக்கு கௌரவம் அளித்துள்ளதுடன் பேச்சுவார்த்தை நடத்தி அரசியல் தீர்வைக்காண தயார் என்றும் குறிப்பிட்டுள்ளார். தமிழ் மக்களுக்கு பிரச்சி னைகள் உள்ளன என்றும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

எது எவ்வாறு இருப்பினும் தேசிய பிரச்சி னைக்கு சகல தரப்பினரும் ஏற்றுக் கொள் ளக்கூடிய அரசியல் தீர்வை காண்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஐக்கிய தேசி யக் கட்சியும் பாராளுமன்ற தெரிவுக்குழுவில் அங்கத்துவம் வகிக்க வேண்டியது அவசியமா கும்.

எனவே பாராளுமன்றத்தில் நம்பிக்கை வைத்து அரசாங்கத்தினால் அமைக்கப்பட் டுள்ள பாராளுமன்ற தெரிவுக்குழுவில் இடம் பெறுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் மீண்டும் கூறுகின் றோம்.

அதாவது இந்த இரண்டு கட்சிகளும் பாரா ளுமன்ற தெரிவுக்குழுவில் இடம்பெறும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. அதேவேளை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் எதிர்க்கட்சிகளின் தலை வர்கள் தெரிவித்துள்ள கருத்துக்களும் அந்த நம்பிக்கையை வலுவடையச் செய்கின்றது என்றார். (அ-2)

## வெசாக் பூரணை தினம் ஐ.நா. சபை அமர்வில்

(கொழும்பு)

வருடாந்த சர்வதேச வெசாக் பூரணை தினத்தை இலங்கை ஐக்கிய நாடுகள் சபையின் பொது அமர்வில் கொண்டா டவுள்ளது.

இந்த நிகழ்வில் பல தூதுவர்கள் ஐக்கிய நாடுகளில் சிரேஷ்ட அதிகாரிகள், பிரதி நிதிகள் மற்றும் புலம்பெயர்ந்து பலர் கல ந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டு ள்ளது.

தற்போது வெளிநாட்டு பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ள ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் வெசாக் பூரணை தினத்திற்கான'தனது வாழ்த்துச் செய்தியினை அனுப்பியுள்ளார். (அ-2)

# இந்துக்களுக்கு பாதிப்பு ஏற்படும்போது நடவடிக்கை எடுக்க இந்துமாமன்றம் தயார்

## அகில இலங்கை இந்து மாமன்ற பொதுச் செயலாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்த நாட்டில் எந்த இடத்தில் வாழ்கின்ற இந்துக்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டால் அதைத் தடுக்க அகில இலங்கை இந்து மாமன்றம் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளும் என அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொதுச் செயலாளர் க.நீலகண்டன் தெரிவித் துள்ளார்.

இந்து ஆலயங்க ளும் இந்து நிறுவனங் களும் எதிர்நோக்கும் பிரச்சினைகள், இடை யூறுகள் தொடர்பாக ஆராயும்அவசரமாநாடு நேற்று திங்கட்கிழமை அகில இலங்கை இந்து மாமன்ற இந்து ஆராய்ச்சி நிலைய மண்டபத்தில் இடம் பெற்றது .

இதில் தலைமை யுரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் எந்த மூலையில் இந்துக் கள் வாழ்ந்தாலும் அவர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டால் அதைத் தடுக்க அகில இலங்கை இந்து மாமன்றம் தயாராகவுள்ளது.

இந்துக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை களை தயங்காது அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கு தெரியப்படுத்துங்கள். உரிய தரப்பிடம் அது தொடர்பாக எடுத்துரைத்து தீர்வினைப் பெற்றுத் தர நாம் தயாராகவுள் ளோம்.

இந்து ஆலயங்கள் எதிர்நோக்கும் பிரச் சினைகள், இந்து மக்கள் எதிர்நோக்கும் பிரச் சினைகளை எமக்குத் தெரியப்படுத்துங் கள்.

கடிதங்கள் மூலமாக எமக்கு அனுப்பி வைக்க முடியும். அவ்வாறு தகவல்கள் வழங் கப்படும் போது இந்து மதம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை குறைப்பதற்கு எம்மால் நடவடிக்கை எடுக்க முடியும்.

மன்னாரில் உள்ள திருக்கேதீஸ்வரத்தில் திடீரென புத்தர்சிலை நிறுவப்பட்டுள்ளது. இது தொடர்பாக அப்பகுதி மக்கள் எமது மன்ற த்திடம் முறையிட்டனர்.

அத்தோடு ஆலய திருப்பணிச் சபை யினரும் எமது கவனத்திற்கு அந்த விடய த்தைக் கொண்டு வந்ததோடு இது தொடர்பாக இந்து மாமன்றத்திற்கு பூரண ஒத்துழைப்பும் வழங்குவதாக தெரிவித்துள்ளனர். இது தொடர் பாக நாம் ஜனாதிபதியின் கவனத்திற்கு இரா ணுவத் தளபதி மற்றும் இந்திய உயர்ஸ்தா னிகர் கவனத்திற்கு கொண்டு வந் துள்ளோம்.

வடக்கில் இந்து மக்கள் பல பிரச்சினை களை எதிர்கொண்டு வருகின்றனர். அத னைத் தடுக்க அகில இலங்கை இந்து மாமன் றம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

அண்மையில் கூட காளை மாட்டின் விவ காரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இறுதியில் நகுலேஸ்வரம் ஆலயத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

இந்தக் காளை மாட்டை வெட்டுவதற்கு யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகு மார் தடை விதிப்பதற்கு செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் தான் காரணம்.

மேலும் இந்த வெசாக் தினத்தில் திறக் கப்பட இருந்த திருக்கேதீஸ்வரத்தில் நிறுவப் பட்டுள்ள புத்தர் சிலையை திறக்க விடாது அகில இலங்கை இந்து மாமன்றம் செய ற்பட்டது.

அரசியல் செல் வாக்கு இன்றி இந்த நாட்டில் இந்து மக்கள் வாழ்ந்து கொண்டிருக் கின்றனர்.

இதனால் பாரிய நெருக்கடியை எதிர் கொள்ள வேண்டியுள் ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)


## திருநாள் திருப்பலியும் நிகழ்வுகளும்



முல்லை. இரணைப்பாலை புனித பற்றிமா அன்னை ஆலய திருநாளை முன்னிட்டு இரணைப் பாலை சென் அன்ரனீஸ் விளையாட்டுக்கழகத் தினால் இரணைப் பாலை பொது அமைப் புக்களின் அனுசரணையுடன் விளை யாட்டுப் போட்டியும், கலை நிகழ்வுகளும் நடாத் தப்படு கின்றது. அன்னையின் திருநாள் திருப்பலி 13.05.2012 காலை 7 மணிக்கு ஒப்புக் கொடுக்கப் படும். அதனை தொடர்ந்து விளையாட்டு நிகழ்வு களும் இடம்பெறும்.

காலை நிகழ்ச்சி

01. ஆண்களுக்கான 70Km தூர சைக்கிள் ஓட்டம்
02. பெண்களுக்கான 30Km தூர சைக்கிள் ஓட்டம்
03. ஆண்களுக்கான 15Km தூர மரதன் ஓட்டம்

மாலை மைதான நிகழ்வுகளும் இரவு கலை நிகழ்வுகளும் இடம்பெறும். விளையாட்டுப் போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் 12.05.2012 இற்கு முன்னர் தமது விண்ணப்பத் தினை மேற்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-
0773454583
0779688422
0770365895

தகவல்:-
சென் அன்ரனீஸ்
விளையாட்டுக்கழகம்.

(8402)





ஜெய்குருதேவ்

ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின்

வாழும் கலை பயிற்சி

மூச்சுப்பயிற்சி, பிரணாயாமம், சுதர்சன கிரியா , தியானம், யோகா

08.05.2012 அறிமுகவுரை -5.00மணி

இடம்: நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபம்.

பயிற்சி: 09.05.2012 - 13.05.2012 வரை

நேரம்:- 5 மணி -7.30 மணி வரை

தொ.பே-0770474757

(8417)

# உயிர் மீண்ட காளை மாடு 1

## சைவத்தமிழர்களின் வாழ்வில் இரண்டறக்கலந்த இடபம்

'காளைமாடு' விவகாரம் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல. தமிழ்மக்கள் புலம் பெயர்ந்துள்ள வெளிநாடுகளிலும் பரவலாய் பேசப்பட்ட- அவதானிக்கப் பட்ட சமகால முக்கியத்துவம் வாய்ந்த சம்பவமாகிவிட்டது.


யாழ்ப்பாணத்துக் 'காளைமாடு' விவகாரம் இந்தளவுதூரம் நாடு கடந்து பேசப்படும் அளவிற்கு முக்கியத்தும் ஏதும் உண்டா? என்று கேட்பவர்களும் இருக்கவே செய்வர். அவ்வாறான கேள்விக்கு விளக்கம் கொடுக்காமல் -காளை மாடுகள் முக்கியத்துவம் பெற்ற சம்பவங்களை நினைவுபடுத்தாமல் யாழ்ப் பாணத்துக் காளைமாடு உயிர் பிழைத்த கதையைக் கூறுவது பொருத்துடைய தல்ல.



சைவத்தமிழுக்கும் நந்திக்கும் நிறை யவே தொடர்புண்டு. தமிழர்களின் அடையாளச் சின்னமாக 'நந்தி' சுட்டப்படுவதும் இங்கு நோக்குதற்குரியது.

சைவசமயத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானின் வாகனமாக இடபம் இருப்பதும் அந்த இடபமே தமிழினத்தின் பெருமைக்குரிய அடையாளச்சின்னமாக விளங்குவதும் சைவத்துக்கும் தமிழுக்கும் இடையிலான இரண்டறக்கலந்த தொடர்பை நிரூபிப் பதாகும்.

காளை என்றும் நந்தி என்றும் இடபம் என்றும் அழைக்கப்படும் எருது மாடு சைவ மக்களின் வழிபாட்டிற்குரியதாக விளங்குவதன் காரணமாகவும் பெற்ற தாய்க்கு அடுத்த படியாக பால் தந்து உயிர்காக்கும் பசுக்கள்



தெய்வீகத்தன்மை பொருந்தியவையாக இருப்பதும் பசுச் சாணத்தில் இருந்து சிவசின்னமாகிய திருநீறு பெறப்படுவதாலும் ஒட்டு மொத்தத்தில் 'மாடு' சைவமக்களின் வழிபாட்டுக்குரியதாயிற்று.

கூடவே வைஷ்ணவத்தில் காத்தற் கடவுளாகிய கிருஸ்ணபரமாத்மா கோபி கிருஸ்ணனாக கோகுலத்தில் பசுக்களின் பாலுண்டு வளர்ந்ததான கதைகளும் சைவத்தையும் வைஸ் ணவத்தையும் உள்ளடக்கிய இந்து சமயத்தில் 'மாடு' என்பது வழிபாட்டிற்குரிய-வணக்கத்திற்குரியதாயிற்று.

### எருதை விளித்துப் பாடிய ஞானசம்பந்தக் குழந்தை

தோணிபுரம் என்றழைக்கப்படும் சீர்காழிப் பதியில் சிவபாதவிருதயர் நீராடுகின்றார். தந்தையைக் காணாத அவரின் மூன்று வயதான சம்பந்தக் குழந்தை அம்மையே அப்பா என்று அழுகின்றான். திருமஞ்சக் குளத்தில் நீராடும் சிவபாதவிருதயருக்குத் தன்மகன் அழும் குரல் கேட்கவில்லை.

ஆனால், அம்மையும் அப்பனும் ஆகிய பார்வதி பரமேஸ்வரனுக்கு குழந்தையின் அழுகை கேட்கின்றது.

சிவனும் அம்மையும் இடபவாகனத்தில் வந்து சம்பந்தக்குழந்தைக்குப் பால் கொடுத்தேகுகின்றனர்.

நீராடிவிட்டுத் திரும்பிய சிவபாத விருதயருக்கு, ஞான் சம்பந்தக் குழந்தை தனக்குப் பால் தந்த வர்களை அடையாளம்காட்டுகின்றது.

**தோடுடைய செவியன் விடை யேறியோன் தூவெண்மதிசூடி .....**

சம்பந்தக்குழந்தைக்கு ஞானப்பால் கொடுக்க வந்த சிவனும் அம்மையும் தனித்து வரவில்லை. எருதுவாகனத் திலேயே வந்துதித்தனர்.

இதன்காரணமாக தேவாரத் திருமுறையின் முதலாவது தேவாரத்தில் 'எருது' இடம் பெற்றுள்ளமை மூலம் சைவசமயத்தில் அதற்கான முக்கியத்துவம் இலங்கப்படுகிறது.

தோடுடைய செவியன் விடை யேறியோன் என்ற தேவாரத்தின் ஊடாக ஞானசம்பந்தக் குழந்தை அம்மை அப்பனோடு இடபத்தையும் வழிபடு பொருளாகக்காட்டி நிற்பது வியப்பிற்குரியது.

இதற்கப்பால் ஞானப்பால் பருகிய பின்னரே இத் தேவாரம் பாடப்பட்டிருப்பதால் இடபத்தை வழிபடு பொருளாகப் பிரகடனம் செய்வதற்குச் சிவனும் அம்மையும் சித்தம் கொண்டே ஞான சம்பந்தர் மூலமாக 'விடை'யையும் தேவாரத்தில் உள்ளடக்கிப் பாடவைத்தனர் என்றும் கூறிக் கொள்வது பொருளுடையதாகும்.

தோணிபுரத் தோன்றலாகிய ஞானசம்பந்தக் குழந்தை அழுததன் காரணம் என்ன என்பதற்கு சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில்.

**வேதநெறி தழைத்தோங்க**<br>
**மிகு சைவத்துறை விளங்க**<br>
**பூதபரம்பரை பொலிய**<br>
**புனிதவாய் மலர்ந்தழுத....**

என்கின்றார்.

வேதநெறி தழைத்தோங்கவும் மிகு சைவத்துறைவிளங்கவும் பூதபரம்பரை பொலியவுமே ஞானசம்பந்தக் குழந்தை அழுதது.

சம்பந்தக்குழந்தை அழுதால் சிவ்ன்,அம்மை, இடபம் ஆய மூவரும் பூலோகத்திற்கு வருவர். இவ்வாறு இவர்கள் மூவரும் வருவதன் மூலம் சேக்கிழார் குறிப்பிட்ட அம்சங்கள் நடந்தேறும்.

ஆக சிவன், அம்மை ஆகியோரோடு இடபமும் வழிபடப்பெறும் போதே இப் பூவுலகம் உய்வடையும் என்பதை மேற்போன்ற நிகழ்வு உறுதி செய்கின்றது.

சிவனை வழிபடுதற்குரிய விரதங்களுள் பிரதோச விரதம் என்பது சிறப்புக்குரியது. பிரதோச விரதகாலத்தில் சிவலிங்கப் பெருமானை பலிபீடத்தில் இருக்கக்கூடிய நந்தியின் இரு கொம்புகளுக்கூடாக வழிபாடாற்றுகின்ற முறையானது, சைவமக்களின் வழிபாட்டில் 'இடபம்' கொண்டுள்ள மகத்துவத்துக்கு சான்றாகும்.இதனை சைவ உலகம் அறிந்ததாயினும் இப்போது அவைவெறும் எழுத்தியல் வடிவமாகவே உள்ளன என்பதையும் இங்கு கூறித்தான் ஆகவேண்டும்

(வளரும்)

**விதுரன்**

# சிறுபான்மை மக்கள் மத்தியில் நம்பிக்கை துளிர்விடும் வகையில் அரசு செயற்படவேண்டும்

## தீர்வுக்கான கூட்டமைப்பின் ஆர்வத்தை பயன்படுத்துங்கள் என்கிறார் தயாசிறி



(கொழும்பு)

**பெரும்பான்மை மக்களுடன் நாட்டின் சிறுபான்மை மக்கள் இணைந்து செயற்படும் வகையிலும் சிறுபான்மை மக்கள் மத்தியில் நம்பிக்கைகள் துளிர்விடும் வகையிலும் நல்லிணக்க வேலைத் திட்டங்களை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.**

ஆனால், தமிழ் மக்களுக்கு சந்தேகம் ஏற்படும் விதத்தில் செயற்படுவதன் மூலமும் முஸ்லிம் பள்ளிவாசல்களை உடைக்க முயற்சிக்கும் வகையிலும் நடவடிக்கைகள் இடம்பெறுமானால் நல்லிணக்கம் என்பது கேள்விக் குறியாகவே மாறிவிடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசியல் தீர்வு செயற்பாடுகள் மற்றும் தற்போதைய நிலைமைகள் குறித்து விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் கூறியதாவது,

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினதும் தமி ழ்த்தேசியக் கூட்டமைப்பினதும் தலைவர்கள் இணைந்து தேசியக்கொடியை தூக்கிப் பிடித்தனர். அத்துடன் அரசாங்கத் துடன் பேச்சு நடத்தி ஐக்கிய இலங்கைக்குள் தேசியப் பிரச்சினைக்கு தீர்வுகாண தயார் என்று கூட்டமை ப்பின் தலைவரும் கூறியிருந்தார். இதனைத் தான் நாங்கள் எதிர்பார்த்தோம்.

ஆனால், இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் எம்முடன் இணைந்து செயற்பட தயாராக இருக்கும் போது அவர்களின் நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தும் வகையில் அரசாங்கம் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்.

அதாவது, தமிழ் மக்களுக்கு பெரும்பான்மை மக்கள் தொடர்பில் நம்பிக்கை ஏற்படும் வகையில் அரசாங்கத்தின் நல்லிணக்க வேலைத்திட்டங்கள் அமைய வேண்டும்.

மாறாக தம்புள்ளயில் முஸ்லிம் பள்ளிவாசல்களை உடைக்க முயுற்சிப்பதன் மூலமும் தமிழ் மக்களுக்கு சந்தேகம் ஏற்படும் விதத்தில் நடந்துகொள்வதன் ஊடாகவும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் முடியாது.

தமிழ் மக்களின் மனங்களை வெல்லவும் முடியாது.

எனவே, அரசாங்கம் இதனை கருத்திற் கொண்டு மக்களுக்கு இடையில் புரிந்துணர்வு ஏற்படும் வகையிலும் நம்பிக்கைகள் துளிர்விடக்கூடிய வகையிலும் வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம்.

அத்துடன் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கானகூட்டமைப்பின் ஆர்வத்தையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இதேவேளை, நாட்டின் தேசியக் கொடி என்பது சிங்கள, தமிழ், முஸ்லிம் என அனைத்து இன மக்களுக்கும் சொந்தமானதாகும்.

(அ-2)

# ஐரோப்பிய ஒன்றிய எம்.பிக்கள் குழுவினர் வடக்கு-கிழக்கு அபிவிருத்தி குறித்து ஆராய்வு

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவினர் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்த சந்திப்பின் போது யுத்தத்தின் பின்னரான நாட்டின் அபிவிருத்தி வேலைத் திட்டம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி விடயங்கள் குறித்து விரிவாக பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன.

தாம் கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளுக்கு விஜயம் செய்ததாகவும் அதன் போது ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்களை பார்வையிட்டதாகவும் விவசாய மக்கள் இதன் மூலம் நன்மையடைந்துள்ளதாகவும் ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற குழுவின் பிரதிநிதி ஜின் லம்பார்ட் இந்த சந்திப்பின் போது தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வடக்கு, கிழக்கின் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளதாக சந்திப்பின் போது கருத்து வெளியிட்ட அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உட்கட்டமைப்பு வசதிகள், வாழ்வாதார வசதிகள், மற்றும் சுதந்திரமாக வாழ்வதற்கான சூழல்என்பவை தொடர்பிலும் விவசாயச்செய்கைகள், மரக்கறி உற்பத்தி, மீன்பிடித்துறை, பாற்பண்ணை உற்பத்தி என்பவை கிழக்கு மாகாணத்தில் அதிகரித்துள்ளதாகவும் அதன் நன்மைகளை அனுபவித்து வருவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சில இடங்களில் பால் வர்த்தகத்தில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் சில நிறுவனங்கள் பால் சேகரிப்பை மேற்கொள்வதை மறுத்து வருவதாகவும் இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துவிட்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் பாடசாலை மாணவர்களுக்கு பால் வழுங்கப்படவுள்ளதகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் போது அரசாங்கம் சுற்றாடல் பாதுகாப்புக்கு அதிக முக்கியத்துவம் வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

• சுற்றாடல் அதிகார சபையின் அனுமதி இல்லாமல் அபிவிருத்தி திட்டங்களை முன் கொண்டு செல்ல முடியாது. ஹோட்டல்கள் அமைக்கப்படும் போது கடற்கரைகள் பாதுகாக்கப்படுகின்றன. மேற்கு நாடுகளில் இருந்து சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் அதிகளவில் கற்றுக் கொண்டுள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஆணைக்குழு பற்றிய அறிக்கை அடுத்த வாரம் சமர்ப்பிக்கப்படும்

## முஸ்லிம் காங்கிரஸ் அறிவிப்பு

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பிலான கட்சியின் நிலைப்பாட்டு அறிக்கை அடுத்த வாரமளவில் சமர்ப்பிக்கப்படும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை பற்றிய தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டுமென அரசாங்கம் கோரியிருந்தது.

இதன்படி தமது கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு அடுத்த வாரத்தில் முன்வைக்கப்படும் என கட்சி தெரிவித்துள்ளது.

கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான குழுவொன்று நல்லிணக்க ஆண்ணைக்குழு முன்மொழிவுகள் பற்றி ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அறிக்கை தொடர்பில் ஆராயும் பணிகள் இன்றையதினம் பூர்த்தியாகும் எனக் குறிப்பிடப்படுகிறது. நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் முஸ்லிம் சமூகம் தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படவில்லை என ஏற்கனவே முஸ்லிம் காங்கிரஸ் குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# நாணயங்களை கொள்ளையடித்த சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

தமிழீழ விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளில் பயன்படுத்துவதற்காக 35, 795, 400 ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயத்தை கொள்ளையடித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 12 சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்கும்படி கொழும்பு பிரதான நீதவான் கட்டளையிட்டுள்ளார்.

வெளிநாட்டு நாணயத்தை கொள்ளையடித்தனர் என்ற குற்றச்சாட்டில் இவர்களை கைது செய்த பொலிஸார் பின்னர் புலிகளுக்கு நிதி வழங்கவே இக்கொள்ளையை நடத்தினர் என நீதிமன்றில் தவறான தகவல் வழங்கி சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்க செய்துள்ளனர் என்று இவ்வழக்கு முன்பு விசாரிக்கப்பட்ட போது இந்த 12 சந்தேக நபர்கள் சார்பில் தோன்றிய சட்டத்தரணி கூறினார்.

பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட தடுப்பு கட்டளையின்படி முதலில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டனர். இந்த கட்டளை தற்போது காலாவதி ஆகிவிட்டபடியாலும் புதிய தடுப்பு கட்டளையை பாதுகாப்பு அமைச்சு பிறப்பிக்காதபடியாலும் சந்தேக நபர்களை தடுத்து வைக்க முடியாது என சட்டத்தரணியிடம் வாதிட்டார். ஆயினும் சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்கு மாறு நீதவான் ரஷ்மி சிங்கப்புலி உத்தரவிட்டார். (அ-2)

# ஆயுதங்களை ஒப்படைக்குமாறு வவுனியா பொலிஸார் அறிவிப்பு

(வவுனியா)


வீடுகளில் கத்தி, வாள் போன்ற ஆயுதங்களையும் மற்றும் மண்வெட்டி பிடிகள், வெற்று சாராயப் போத்தல்கள் என்பவற்றை வைத்திருப்பவர்கள் அவற்றை பொலிஸாரிடம் அல்லது தமது கிராமத்தில் உள்ள ஆலய பரிபாலன சபைத்தலைவர்களிடம் ஒப்படைக்குமாறு பொலிஸார் வவுனியாவில் அறிவித்துள்ளனர்.

ஒலிபெருக்கி மூலமான இந்த அறிவித்தல் வவுனியா பண்டாரிக்குளம், பட்டாணிச்சி புளியங்குளம், குருமன்காடு, வைரவபுளியங்குளம், தோணிக்கல் போன்ற பகுதிகளில் விடுக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

கத்தி, வாள் மற்றும் ஆயுதங்களாக பயன்படுத்தத்தக்க பொருட்கள் கொள்ளைகள், களவுகளின் போது அச்சுறுத்தலுக்காகவும் தாக்குதல்களை நடத்துவதற்காகவும் பயன்படுத்தப்பட்டிருப்பதாகவும் இதனையடுத்தே பொலிஸார் இந்த அறிவித்தலை விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)


# அதிசய உலகம்...

## கணனி விளையாட்டில் வல்லவனான பூனை



கணனி விளையாட்டு என்றாலே எல்லோருக்கும் அலாதிப் பிரியம்தான். ஐந்தறிவு ஜீவன்கள் கூட இதற்கு விதிவிலக்கு அல்ல என்பதை நிரூபிக்கும் விதமாக இந்த பூனைகள் கணனி விளையாட்டில் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றன.

## கானம் இசைக்கும் அதிசய யானை



யானைகள் பிளிறும் என்பது யாவரும் அறிந்த விடயமே. ஆனால், அவற்றுள் சில விதவிதமான இசையை வெளியிடக் கூடியவை என்றால் நம்புவீர்களா?

ஆம், இந்தியாவில் உள்ள சாந்தி எனப்படும் பெண் யானை ஒன்று ஒலியெழுப்பும் போது பல்வேறு இசைகளில் சத்தம் உருவாக்குகின்றதாம். இதனால் அது வசிக்கும் சூழலைச் சுற்றி எந்த நேரமும் கச்சேரிதானாம்.

## உலகின் மிக சிறிய குழந்தை



பிரேசில் நாட்டைச் சேர்ந்த அலெக்சாண்டிரா (வயது-32 )என்ற பெண்ணிற்கு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் குறைப் பிரசவமாக 360 கிராம் எடை 27 செ.மீற்றர் நீளமுள்ள குழந்தை பிறந்தது.

கரோலினா என்று பெயரிட்டுள்ள இந்தக் குழந்தை உலகில் மிகச்சிறிய குழந்தையாக கருதப்படுகிறது. தற்போது இக்குழந்தையின் எடை 3.3 கிலோவாக அதிகரித்ததையடுத்து மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பியுள்ளது.

## சுவிட்சர்லாந்தில் காணப்படும் உண்மையான ரொக்கெட் மனிதன்



சுவிட்சர்லாந்து நாட்டை சேர்ந்த யூவிஸ் ரோசி என்பவர் வானத்தில் ரொக்கெட் மனிதராக பறந்து சாதனை நிகழ்த்தி வருகிறார்.

பிரேசில் நாட்டில் உள்ள ரியோடி ஜெனிரோ நகரில் அவர் ஜெட் சக்தியுடன் கூடிய சாதனத்தின் உதவியுடன் அங்குள்ள கடற்கரை பகுதிக்கு மேல் பறந்து செல்வதை படத்தில் காணலாம்.


யா/ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
வருடாந்த பொதுக்கூட்டம்

தலைமை:- திரு.வி உமாபதி (சிரேஷ்ட எந்திரி)
காலம்:-20.05.2012 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்:- மு.ப. 9.00 மணி
இடம்:-சிவபாதசுந்தரம் மாநாட்டு மண்டபம், விக்ரோறியா கல்லூரி, சுழிபுரம்.

பிரதம விருந்தினர்
வைத்தியகலாநிதி இ. சுரேந்திரகுமாரன் (MBBS,MD)
தலைவர், சமுதாய மருத்துவத்துறை
மருத்துவபீடம்,யாழ் பல்கலைக்கழகம்

நிகழ்ச்சி நிரல்
1. இறைவணக்கம்
2. தலைவர் உரை
3. செயலாளர் அறிக்கை
4. பொருளாளர் அறிக்கை
5.பிரதம விருந்தினர் உரை
6. சபையோர் குறிப்புரை
7. புதிய நிர்வாகசபை தெரிவு
8. நன்றியுரை
9. கல்லூரி கீதம்

அனைத்து பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.
புதிய அங்கத்தவர்களை இணைந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
08.05.2012 (சி-6559) செயலாளர்.


## ஹெரோயினுடன் இரு சிறுவர்கள் கைது

அநுராதபுரம் பிரதேசத்தில் ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் 17 வயதான இரண்டு சிறுவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 20 கிராம் ஹெரோயினை பொலிஸார் கைப்பற்றியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித்ரோஹண குறிப்பிட்டுள்ளார்.

அநுராதபுர பிராந்திய விசாரணை பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த போதை பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் பெண்ணொருவர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிடுகிறார்.

இதேவேளை, உடவல -சங்கபால பிரதேசத்தில் 105 சட்டவிரோத சிகரெட்களை வைத்திருந்த சந்தேக நபர் விசேட அதிரடி படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் குறித்து பிரதேசத்தில் உணவகம் ஒன்றை நடத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(அ-2)

## கனேடியப் பிரஜையின் உடல் பரிசோதனையின் பின் கனடாவுக்கு

கிளிநொச்சியில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட கனேடிய பிரஜையின் உடலை உடற்கூற்றுப்பரிசோதனையின் பின்னர் கனேடிய தூதரகத்தின் ஊடாக கனடாவிற்கு அனுப்பி வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் பிறந்து கனடாவில் பிரஜா உரிமை பெற்று வசித்து வந்த இவர் தனது ஊரிற்கு வந்திருந்த சமயம் இனந்தெரியாத நபர்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். இவரது மரணம் தொடர்பில் கனேடியத் தூதரக அதிகாரிகள் நேற்று சம்பவம் இடத்திற்கு நேரடியாகச் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சம்பவத்தில் அந்தோனிப்பிள்ளை மகேந்திரராஜா என்பவரே வெட்டி படுகொலை செய்யப்பட்டவராவார். கடந்த 5 ஆம் திகதி இரவு 8.15 மணியளவில் தனது வீட்டில் இருந்து அயல் வீடொன்றிற்குச் சென்ற போது இவர் இனந்தெரியாதோரால் கழுத்தில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

உடற்கூற்றுப் பரிசோதனை நேற்று முன்தினம் கிளிநொச்சி வைத்தியசாலையில் இடம் பெற்றது. குறித்த நபர் நீண்ட நேரம் தன்னைக் காப்பாற்றுவதற்காக போராடி பின்னர் குறித்த நபர் கீழே விழுந்த பின்னரே கழுத்தில் வெட்டிக் கொலை செய்யப்பட்டதாக முதற்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது அத்துடன் கறுப்புத் துணியால் முகத்தைக் கட்டிய சிலர் மரணமானவரின் வீட்டில் நடமாடியதாக அயலவர்கள் தெரிவித்துள்ளதாக தெரியவருகிறது. கிளிநொச்சி பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-2)


மரண அறிவித்தல்



பலாலியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட பேரின்பநாதன் பேரின்பராஜ் (நிக்சன்) அவர்கள் 27.04.2012 வெள்ளிக்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னார் பேரின்பநாதன் (செல்வராசா) மோட் சலங்காரம் (சிந்தா) தம்பதியரின் பாசமிகு மகனும், விமலா(ஜேர்மனி), மஞ்சு (மாதகல்), நேசன் (சுவிஸ்), ரூபன் (கனடா), காலஞ்சென்ற இருதயராஜ், நிசான் (மலேசியா), சிந்து, சுகஞ்யா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், டேவிற்ஜோசப் (ஜேர்மனி), லீனஸ் (மாதகல்), சுபாஜினி, யூஜினி (கனடா) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான அலெக்சாண்டர் ஆரோக்கியம், சவரிமுத்து குணகுந்தம்மா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் ஜேர்மனியில் 09.05.2012 நாளை புதன்கிழமை நடைபெற உள்ளது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

முகவரி:-
தெனி ஒழுங்கை
கடற்கரை வீதி,
பருத்தித்துறை.

(8413)

தகவல்:-
குடும்பத்தினர்.

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 124



தமது பாதுகாப்புக்காக தினமும் ஆட்சியாளர்களின் அலுவலகம் முன்பாக இறைஞ்சி நிற்கும் யூதமக்கள்

சோவியத் துருப்புகளுக்கு முதலாவது, மூன்றாவது பதிலடிகள் குறிப்பாக கடுமையானவையாக இருந்தன. கொமார்னோ பிரதேசத்திலிருந்து தொடுக்கப்பட்ட முதல் அடியின் பயனாய் பாசிஸ்டுகளால் பெரும் இழப்புக்களை விலையாகக் கொடுத்து துனாய் ஆற்றின் வலது கரையோரமாக 25-37 கி.மீ. தூரம் முன்னேறி எஸ்தெர்கோமிற்கு கிழக்கே, பிச்கே-பன்ஹிடாவிற்கு வடக்கேயிருந்த எல்லையை அடைய முடிந்தது. ஆனால், சோவியத் போர்வீரர்களின் வீரம், அவர்கள் தற்காப்பில் காட்டிய உறுதி, சேம படைகளை, குறிப்பாக டாங்கிகளையும் பீரங்கிப்படையையும் திறமையாக பிளவிடத்தில் மாற்றியமைத்தது ஆகியவற்றின் பயனாய் எதிரி தடுத்து நிறுத்தப்பட்டான். பிரதான படைத்தலைமையகத்தின் கட்டளையின்படி துனாய் ஆற்றின் வடக்கு கரையோரமாக 2-வது கார்டு படையால் தொடுக்கப்பட்ட தாக்குதல் எதிரியின் முதல் பதிலடியை முறியடிப்பதில் பெரும் பங்காற்றியது. இத்துருப்புகள் கொமார்னோ பிரதேசத்திற்கு, அதாவது எதிரியின் பக்கவாட்டிற்கும் பின்னணிக்கும் வந்ததானது தாக்குதலை நிறுத்துமாறு எதிரியை நிர்ப்பந்தித்தது.

சிறிது தெற்கே தள்ளி தொடுக்கப்பட்ட இரண்டாவது பதிலடியும் பாசிஸ்டுகள் எதிர்பார்த்த வெற்றியை அளிக்கவில்லை. 5 நாள் தாக்குதலில் இவர்களால் 6-7 கி.மீ. தூரம் மட்டுமே முன்னேற முடிந்தது. மூன்று டாங்கி டிவிசன்களின் தாக்குதலை 20-வது கார்டு துப்பாக்கிப்படை கோர்பஸோடு கூட்டாகச் சேர்ந்து முறியடித்தது, எதிரி தற்காப்பிற்கு மாறிச் செல்லுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டான்.

ஒரு வாரம் கழித்து பலட்டோன் ஏரிக்கு வடக்கே இருந்த பிரதேசத்திலிருந்து தொடுக்கப்பட்ட மூன்றாவது பதிலடி மிகப் பலமானதாயும் ஆபத்தானதாயுமிருந்தது. எதிரியின் முக்கிய தாக்குதல் படைத் திரட்டில் 560 டாங்கிகளும் திடீர்த் தாக்குதல் பீரங்கிகளும் இருந்தன. குறுகிய காலகட்டத்தில் பாசிச ஜேர்மனியத் துருப்புகள் துனாபேந்தெலே பிரதேசத்தில் துனாயை அடைந்து, ஆற்றின் மேற்கு கரையிலிருந்த 3-வது உக்ரேனிய சேனையின் துருப்புகளை இரண்டு பிரிவுகளாப்பிளந்தன. துருப்புகளை வழிநடத்துவது மிகச் சிக்கலானது.

பிரதான படைத் தலைமையகம் ஜனவரி 22 ஆம்திகதி விடுத்த கட்டளையின்படி, தோன்றிய கடினமான நிலையை அகற்றுவதற்கான உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2-வது உக்ரேனிய சேனையிலிருந்து பெரும் சக்திகள் 3-வது உக்ரேனிய சேனைக்கு அளிக்கப்பட்டது. பிளவு மண்டலத்திற்கு

கரமான தற்காப்பு நடவடிக்கைகளுக்கான காரணங்களாகும்.

வெளிப்போர்முனையில் 3-வது உக்ரேனிய சேனையின் உக்கிரமான இராணுவ நடவடிக்கைகளோடு சேர்ந்து அதேசமயம் புடாபெஸ்டில் சுற்றிவளைக்கப்பட்ட எதிரிபடைத் திரட்டை ஒழித்துக்கட்டுவதற்கான சண்டைகளும் தொடர்ந்தன. இச்சண்டைகள் சிக்கலான சூழ்நிலைகளில் நடைபெற்றன. ஆஸ்திரியாவிற்கு ஜேர்மனியின் தென்பிரதேசங்களுக்கும் இருந்த குறுகியவழிகளையும் நுழைவாயில்களையும் மூடி பாதுகாத்த புடாபெஸ்ட்- இதனால் இதுபெரும் போர்த்தந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது- எதிரியால் பலத்த தற்காப்புப் பிரதேசமாக மாற்றப்பட்டது. நகரத்தில் 110 எதிர்ப்பு மையங்களும் 200 க்கும் மேற்பட்ட ஆதார நிலையங்களும் தோற்றுவிக்கப்பட்டன. சாதாரணமாக எதிர்ப்பு மையங்கள் தொழிற்சாலைகள், ஆலைகள், இருப்புப்பாதை நிலையங்கள், புகைவண்டி நிலையங்

புடாபெஸ்ட் கோட்டைக்கு ஆருகே ஆற்றின் மீதாக அமைந்த சங்கிலிப்பாலம்- விமானக்காக்ககலக்க மன்ப



சாதனங்களையும் கொண்டு செல்வதற்கு பாதாள இரயில், பூமியடி குழாய் அமைப்புகள், பாதாள சேம நிலவறை போன்ற பூமியடி அமைப்புகளை எதிரி பரவலாகப் பயன்படுத்தினான். ஒவ்வொரு தெருவையும் ஒவ்வொரு நகரப் பகுதியையும் பல வீடுகளையும் பாசிஸ்டுகள் நீண்டகாலத் தற்காப்பிற்கு மாற்றியிருந்தனர்.

சுற்றி வளைக்கப்பட்ட எதிரியை ஒழித்துக் கட்டுவது 4-5 துப்பாக்கிப் படை கோர்பஸ்கள் அடங்கிய 2-வது உக்ரேனிய சேனையின் புடாபெஸ்ட் துருப்புத் தொகுதியால் நிறைவேற்றப்பட்டது. சோவியத் துருப்புகள் தொடர்ந்தாற்போல் எதிரியின் ஆதார நிலையங்களை ஒழித்தன. தெருக்களையும் நகரப்பகுதிகளையும் ஒன்றன்பின் ஒன்றாக கைப்பற்றின. ஜனவரி 18 ஆம்திகதி நகரத்தின் கிழக்குப்பகுதியாகிய பெஸ்டும் பெப்ரவரி 13 ஆம்திகதி மேற்குப் பகுதியாகிய புடாவும் முற்றிலுமாக விடுவிக்கப்பட்டன. 1,38,000 க்கும் அதிகமான பாசிஸ்டுகள் சிறைப்பிடிக்கப்பட்டனர். புடாபெஸ்டை விடுவிப்பதற்கான சண்டைகளில் ருமேனிய யூனிட்டுக்களும் புடாபெஸ்ட் ஹங்கேரிய வாலன்டரி ரெஜிமென்டும் போரிட்டன. இதுபெரும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.

புடாபெஸ்ட் போர்த்தந்திர திசையில் சோவியத் துருப்புகளின் தீவிர நடவடிக்கைகள், பெருமளவு துருப்புகளை,. குறிப்பாக, டாங்கி மற்றும் மோட்டார் துருப்புகளை தென் மேற்குப் போர்க்களத்திற்கு அனுப்புமாறு ஹட்லரின் படைத் தலைமையை நிர்ப்பந்தித்தன. இது புடாபெஸ்ட் நடவடிக்கையின் முக்கியமான ஒரு முடிவாகும். இதன் விளைவாய் சோவியத்- ஜேர்மனியப் போர்முனையில் இயங்கிய ஜேர்மனிய டாங்கி, மோட்டார் டிவிசன்களின் பாதிப்


## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு

வடக்கேயும் தெற்கேயும் இரண்டு முக்கிய தாக்குதல் பிரிவுகள் அமைக்கப்பட்டன. ஜனவரி 27 ஆம்திகதி தாக்குதலைத் தொடங்கிய இவை பெப்ரவரி 7 ஆம் திகதி எதிரியின் கடும் எதிர்ப்பைச் சமாளித்து வெளிப் போர்முனையில் பதிலடிகளுக்கு முன்னிருந்த அதே எல்லையைப் புனர்நாட்டின.

இவ்வாறாக முற்றுகையை உடைத்து துனாயில் தற்காப்பை புனர்நாட்ட எதிரி மேற்கொண்ட முயற்சிகள் குலைக்கப்பட்டன.

சோவியத் துருப்புகளின் நன்கு இயங்கும் திறன், சேமப் படைகளை ஆபத்தான இடங்களுக்கு, உரிய நேரத்தில் அனுப்பியது. எதிரி தாக்கக் கூடிய திசைகளில் விரைவாக தற்காப்பு எல்லைகளை அமைத்தது. இரண்டு சேனைகளின் வான்படைகளும் பரஸ்பரம் இணைந்து செயற்பட்டது. மற்றும் சோவியத் போர்வீரர்கள் காட்டிய வீரம் ஆகியவைதான் சோவியத் துருப்புகளின் வெற்றி

புடாபெஸ்ட் கோட்டைக்கு ஆருகே ஆற்றின் மீதாக அமைந்த சங்கிலிப்பாலம்- விமானத்தாக்குதலுக்குப் பின்பு



கள், பெரும் கட்டடங்கள் உட்பட ஓர் அல்லது ஒரு சில வட்டாரங்களை உள்ளடக்கியிருந்தன. ஒன்று, இரண்டு வீடுகளை உள்ளடக்கிய ஆதார நிலையங்கள் எதிர்ப்பு மையங்களுக்கு இடையிலிருந்தன. சக்திகளையும்

பகுதி கர்ப்பாத்திற்குத் தெற்கே விடப்பட்டது. கர்ப்பாத்திற்கு வடக்கே, பிரதான வார்ஸா- பெர்லின் திசையில் செஞ்சேனை தாக்குதலில் இறங்கிய தருணத்தில் இது நடந்தது.

(தொடரும்)

# நாட்பட்ட நீரிழிவு நோயினால் உண்டாகும் பாதிப்புகள்

**கேள்வி 14:- நீரிழிவு நோயாளி சாப்பிடுவதில் குறிப்பிட்ட நேரத்தைப் பின்பற்ற வேண்டுமா?**

பதில்:- நீரிழிவு நோயாளி சாப்பிடுவதைப் பொறுத்தமட்டில் பின்வரும் நேரங்களைப் பின்பற்ற வேண்டும்.

காலை சிற்றுண்டி- 8-9 மணி

மதிய உணவு- 1-2 மணி

இரவு உணவு- 8-9 மணி

**கேள்வி 15:- எந்தெந்த நேரத்தில் தேநீர் அருந்த வேண்டும்?**

பதில்:- ஒரு நாளைக்கு இரண்டு முறை தேநீர் அருந்தலாம். காலை 10-11 மணி மற்றும் மாலை 4-5 மணி. இதுவே உகந்த நேரங்களாகும்.

**கேள்வி 16:- நீரிழிவு நோயாளிகளைப் பொறுத்தமட்டில் கலோரிகளின் அவசியம் என்ன?**

பதில்:- பொதுவாக கலோரிகள் என்பவை சக்தியுடன் தொடர்புடையவையாகும். ஒரு நோயாளிக்கு சக்தி என்பது அத்தியாவசியத் தேவையாகும். கலோரிகள் அளவு கூடினால் அது நோயாளிக்கு பல பிரச்சினைகளை உண்டாக்கும்.

**கேள்வி 17:- நீரிழிவு நோயாளி ஒரு நாளைக்கு எவ்வளவு கலோரிகள் கொண்ட உணவினைச் சாப்பிட வேண்டும்?**

பதில்:- நீரிழிவு நோயாளி ஒரு நாளைக்கு ஆயிரத்து 500 முதல் ஆயிரத்து 800 கலோரிகள் கொண்ட உணவினைச் சாப்பிட வேண்டும். இதனால் உடல் எடை அதிகரிக்காது. அதேசமயம் உடலில் போதிய சக்தி இருக்கும்.

**கேள்வி 18:- நமது உணவிலுள்ள வேதிப் பொருட்களில் ஒரு கிராமில் எத்தனை கலோரிகள் உள்ளன?**

பதில்:- நமது உணவிலுள்ள மாச்சத்து, புரதம் மற்றும் கொழுப்புச்சத்திலிருந்து நமது உடல் தேவையான சக்தியைப் பெறுகிறது.

ஒரு கிராம் மாச்சத்தில் (Carbohydrate) 4.1 கலோரிகள்

ஒரு கிராம் புரதச்சத்தில் (Protein) 4.0 கலோரிகள்

ஒரு கிராம் கொழுப்புச் சத்தில் (Lipid) 9.3 கலோரிகள் உள்ளன.

**கேள்வி 19:- நீரிழிவு நோயாளி எடுத்துக் கொள்ளும் கலோரிகளில் வயது வித்தியாசம் உண்டா?**

பதில்:- 50 வயதிற்கு மேற்பட்ட நோயாளிகள் தாங்கள் எடுத்துக் கொள்ளும் கலோரிகளில் 10% குறைத்துக் கொள்ள வேண்டும். இதனை மனதிற் கொண்டு தங்கள் வயதிற்கேற்ப கலோரிகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

**கேள்வி 20:- கடினமாக உழைப்பவர்கள் கலோரிகளை குறைத்துக் கொள்ள வேண்டுமா? அல்லது அதிகரித்துக் கொள்ள வேண்டுமா?**

பதில்:- பொதுவாக இருந்த இடத்தில் இருந்தபடி பணி புரிபவர்கள் ஒரு நாளைக்கு ஒரு கிலோவிற்கு 5-10 கலோரிகளைக் குறைத்துக் கொள்ளலாம். அதேசமயம் கடினமாக உடல் உழைப்பில் ஈடுபட்டிருப்பவர்கள் கலோரிகளை அதிகரித்துக் கொள்ள வேண்டும்.

**கேள்வி 21:- நீரிழிவு நோயாளிக்கு மரக்கறி சூப் நல்லதா?**

பதில்:- ஆம். நீரிழிவு நோயாளிக்கு மரக்கறி சூப் மிகவும் நல்லது. கரட்,பசளைக்கீரை, சுரைக்காய்,நூல்கோல், முட்டைக்கோஸ் முதலியவற்றை பொடிப்பொடி துண்டுகளாக நறுக்கி அதிலிருந்து சாறு எடுக்க வேண்டும். அதில் ஒரு சிட்டிகை உப்பு கலந்து குடித்தால் நீரிழிவ் நோயாளி ஆரோக்கியமுடன் இருப்பார்.

**கேள்வி 22:- நீரிழிவு நோயாளிக்கு பழச்சாறு நல்லதா?**

பதில்:- நீரிழிவு நோயாளி பழச்சாறு அருந்தக்கூடாது. பழங்களில் சீனி அளவு அதிகம் இருப்பதால் அது உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கும். மாறாக அவர்கள் குறிப்பிட்ட பழங்களைச் சாப்பிடலாம்.

**கேள்வி 23:- நீரிழிவு நோயாளி எந்தெந்த சமையல் எண்ணெயைப் பயன்படுத்த வேண்டும்?**

பதில்:- நீரிழிவு நோயாளி பின்வரும் சமையல் எண்ணெய்களைப் பயன்படுத்தலாம்.

சூரியகாந்தி, சோயூாபீன், நல்லெண்ணெய், கடலை எண்ணெய், கடுகு எண்ணெய், பருத்திக் கொட்டை எண்ணெய், சோள எண்ணெய், ஒலிவ் எண்ணெய்.

**கேள்வி 24:- நீரிழிவு நோயாளி எப்படிப்பட்ட சமையல் எண்ணெய் மற்றும் செறிவூட்டப்பட்ட கொழுப்பினைப் பயன்படுத்தக்கூடாது?**

பதில்:- சுத்தமான நெய், வனஸ்பதி, தேங்காய் எண்ணெய், வெண்ணெய், கிறீம் முதலியற்றை நீரிழிவு நோயாளி பயன்படுத்தக்கூடாது.

**கேள்வி 25:- ஒரு மாதத்தில் எந்த அளவு நெய் அல்லது எண்ணெயினை ஒரு நீரிழிவு நோயாளி பயன்படுத்தலாம்?**

பதில்:- நீரிழிவு நோயாளிக்கு நெய்யும் எண்ணெயும் நலம் பயப்பவை அன்று. இதனை மனதிற்கொண்டு ஒரு மாதத்தில் அரை கிலோ எண்ணெய் அல்லது நெய்யினைப் பயன்படுத்தலாம்.




**06**

**கேள்வி 26:- நீரிழிவு நோயாளி ஹோர்லிக்ஸ், போர்ன்விட்டா போன்றவற்றை சாப்பிடலாமா?**

பதில்:- நீரிழிவு நோயாளி ஹோர்லிக்ஸ், போர்ன்விட்டா, பூஸ்ட், மால்டோவா, புரோட் டீனெக்ஸ் போன்றவற்றை சாப்பிடக் கூடாது. அவற்றில் சீனி ஏராளம் இருக்கிறது.

**கேள்வி 27:- நீரிழிவு நோயாளி ஊறுகாய் சாப்பிடலாமா?**

பதில்:- இனிப்பு கலந்த எலுமிச்சை, நூல்கோல், கரட், காலிஃப்ளவர் ஊறுகாய்களை நீரிழிவு நோயாளிகள் சாப்பிடக் கூடாது.

## டாக்டர்.A.K.ஜிங்கான்

**கேள்வி 28:- சீனிக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படும் இனிப்பு மாத்திரைகளை தொடர்ந்து பயன்படுத்தினால் ஏதேனும் தீங்கு நேருமா?**

பதில்:- இனிப்பு மாத்திரைகளை நீண்ட காலம் அளவிற்கதிகமாகப் பயன்படுத்தினால் சோர்வு, சோம்பல், பலவீனம், படபடப்பு, தூக்கமின்மை, ஞாபக மறதி போன்றவை உண்டாகும்.


நீண்ட காலம் அளவிற்கதிகமாக இனிப்பு மாத்திரைகளைப் பயன்படுத்திய பல நீரிழிவு நோயாளிகளுக்கு காக்கை வலிப்பு நோய் கூட வந்திருக்கிறது.

**கேள்வி 29:- நீரிழிவு நோயாளி உப்பு அதிகம் சேர்த்துக் கொள்ளலாமா?**

பதில்:- நீரிழிவு நோயாளி ஆரோக்கியமாக இருப்பதற்கு உப்பு அவசியம். ஆனால், அதிகளவு உப்பு சேர்த்தால் உயர் இரத்த அழுத்தம் வரும். இவ்வாறு நேர்ந்தால் நீரிழிவு நோயை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியாது. அதனால் நீரிழிவு நோயாளிகள் உப்பை அளவுடன் பயன்படுத்த வேண்டும்.

(தொடரும்)

# இரத்த அழுத்தத்தை குணமாக்கும் சீரகம்



ஆரம்பநிலை இரத்த அழுத்த நோய் குணமாகும் திராட்சைப் பழச்சாறுடன் சிறிது சீரகத்தைப் பொடித்து பருக வேண்டும். மத்தியதர இரத்த அழுத்த நோய் இருப்பவர்களுக்கு திராட்சைப் பழச்சாறுடன் சிறிது சீரகத்தைப் பொடித்து சாப்பிட்டு வர இரத்த அழுத்தம் அதிகரிக்காது. சிறிது சீரகம், நல்ல மிளகு பொடித்து எண்ணெயிலிட்டுக் காய்ச்சி, அந்த எண்ணெயை தலையில் தேய்த்துக் குளித்தால், கண் எரிச்சல், கண்ணிலிருந்து நீர் வடிதல் நீங்கும்.

அகத்திக் கீரையுடன் சீரகம், சின்ன வெங்காயம் சேர்த்து கசாயம் செய்து அத்துடன் கருப்பட்டி பொடித்திட்டு சாப்பிட்டால் மன அழுத்தம் மாறும். ஆரம்ப நிலை மனநோய் குணமாகும். சீரகம், சுக்கு, மிளகு, தனியா, சித்தரத்தை இவ் ஐந்தையும் சேர்த்துக் தூளாக்கி வைத்துக் கொள்ளவும். இதில் இரண்டு சிட்டிகை வீதம் தினம் இரண்டு வேளையாக சாப்பிட்டால் உடல் அசதி நீங்கி புத்துணர்ச்சி ஏற்படும்.

சீரகத்தை லேசாக வறுத்து அத்துடன் கருப்பட்டி சேர்த்துச் சாப்பிட்டு வர நரம்புகள் வலுப்பெறும். நரம்புத் தளர்ச்சி குணமாகும். சிறிது சீரகத்துடன் இரண்டு வெற்றிலை, நான்கு நல்ல மிளகு சேர்த்து மென்று தின்று ஒரு டம்ளர் குளிர்ந்த நீர் பருகினால் வயிற்றுப் பொருமல் வற்றி நலம் பயக்கும். சீரகத்துடன் மூன்று பற்கள் பூண்டு வைத்து நன்றாக அரை த்து எலுமிச்சை சாறில் கலந்து குடித்தால் குடல் கோளாறுகள் குணமாகும்.

ஓமத்துடன் சிறிது சீரகம் இட்டு கசாயம் செய்து சாப்பிட்டால் அதிக பேதி போக்கு நிற்கும். பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைபடுதல் நோய்க்கு சிறிது சீரகத்துடன் சின்ன வெங்காயம் வைத்து நன்றாக அரைத்து பசும் பாலில் கலந்து குடித்துவர நல்ல பலன் கிடைக்கும். சிறிது சீரகத்துடன் கீழ்க்காய் நெல்லிவைத்துஅரைத்துஎலுமிச்சைசாறில்சேர்த்துப் பருகி வர கல்லீரல் கோளாறு குணமாகும்.

திராட்சைப் பழச்சாறுடன் சிறிது சீரகத்தைப் பொடித்திட்டு பருகினால் ஆரம்ப நிலை இரத்த அழுத்த நோய் குணமாகும்.

மத்தியதர இரத்த அழுத்த நோய் இருப்பவர்களுக்கு மேலும் இரத்த அழுத்தம் அதிகரிக்காது தடுக்கும். சிறிது சீரகம், நல்ல மிளகு பொடித்து எண்ணெயிலிட்டுக் காய்ச்சி அந்த எண்ணெய்த் தலையில் தேய்த்துக் குளித்தால் கண் எரிச்சல், கண்ணிலிருந்து நீர் வடிதல் நீங்கும்.

# மலச்சிக்கல் எவ்வாறு ஏற்படுகிறது?

மலம் கழிக்கும் பழக்கத்தில் ஏற்படும் மாற்றத்தினை மலச்சிக்கல் என்று கூறுவர். கழிக்கும் மலத்தின் அளவு குறைவது, மலம் கடினமாகுதல், மலம் கழிக்கும் முறைகள் குறைவது அல்லது மலம் கழிக்கும் போது அதிகளவு கஷ்டத்துடன் மற்றும் வலியுடன் மலம் கழிப்பது மலச்சிக்கல் எனலாம்.

இப்பழக்கம் ஒவ்வொரு நபருக்கம் வேறுபடும். ஒரு வாரத்திற்கு 3 முதல் 12 முறை மலம் கழிப்பது இயல்பான மலம் கழிக்கும் முறை எனலாம்.

**இதற்கான அடையாளங்கள்:-**

✦ வயிறு உப்புகை மற்றும் வயிற்றில் ஏற்படும் அசெளகரியங்கள்.

**காரணங்கள்:-**

✦ நார்ச்சத்து குறைவாக உள்ள உணவு உட்கொள்ளுதல்

✦ டிஹைறட்ரேஷன் (உடலின் நீர் அளவு குறைதல்)

✦ ஜீரண உறுப்புகளின் (குடல்) இயங்கு தன்மை குறைதல்

✦ சில மருந்துகளை உட்கொள்ளுவதால் ஏற்படக்கூடியவை

✦ பெருங்குடலில் ஏற்படும் புண்

உதாரணம்:- பெருங்குடல் புற்றுநோய்

✦ தைரோய்டு ஓமோன் குறைவாக சுரத்தல் (ஹைறப்போதைராய்டிஸம்)

✦ சுண்ணாம்புச்சத்து குறைவாக உள்ள நிலை/பொட்டாசியம் குறைவாக உள்ள நிலை

**சிகிச்சை முறைகள்:-**

உணவில் நார்ச்சத்துள்ள பொருளை அதிகமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதாவது,

✦ முழு தானிய உணவுகளை உட்கொள்ள வேண்டும்

✦ பச்சை காய்கறிகள் மற்றும் பழங்கள் அதிகமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

✦ போதுமான அளவு தண்ணீர் அருந்த வேண்டும்

✦ பிரச்சினைகள் தொடர்ந்து விடாப்பிடியாக இருக்கும் போது மருத்துவரை அணுக வேண்டும்.

**நார்ப்பொருள் உணவு**

Food sources of fiber include whole wheat, bran, fresh or dried fruits, and vegetables



Thanks:- fitness.resourcesforattorneys.com

# அன்பை கொண்டாடுதல்



## ஆன்மீகம் 49

### வன்முறை

தீவிரவாதத்துக்குச் சரியான தீர்வுகளாவன...

♦ வாழ்க்கையைப்பற்றிய பரந்த பரிமாணங்களை மனதில் புகுத்துதல்

♦ இனம், ஜாதி, மதம், தேசியம், இவற்றைவிட உயிர்களை அதிகம் மதித்தல்.

♦ நட்பு, கருணை, ஒற்றுமை, உயர்த்திக்கொள்ளுதல் ஆகியவற்றை ஏற்படுத்தக்கூடிய, மனித மதிப்பீடுகளைப் புரிய வைக்கக்கூடியதான கல்வி முறையை அளித்தல்.



♦ மன அழுத்தத்தையும், இறுக்கத்தையும் நீக்கக்கூடிய வழிகளை போதித்தல்.

♦ அமைதியாகவும், அஹிம்சை முறையிலும், மிகமேன்மையான குறிக்கோள்களை மட்டுமே அடைவதற்கு உரிய நம்பிக்கையை ஊட்டுதல்.

♦ ஆன்மீக மார்க்கத்தில் அவர்களை உயர்த்தி, அழிக்கும் நோக்கத்தை மனதிலிருந்து களைந்து விடுதல்.

**கேள்வி:** தீவிரமானதானது, உடலுக்குக் கொடூரம் இழைப்பதையும் தாண்டி, கலாசார, பொருளாதார தீவிரவாதமாகவும் இருக்கமுடியுமா?

ஆமாம். இருக்கும். பொருளாதாரத் தீவிரவாதத்திற்கு தீர்வாவது, உள்நாட்டுப் பொருளையே நேசி; உலக அளவில் யோசி என்பதாகும். காலாசார தீங்கிற்குத் தீர்வானது, உங்கள் பார்வையை விரிவுபடுத்துங்கள்! வேர்களை ஆழப்படுத்துங்கள் என்பதாகும்.

**கேள்வி:** தீவிரவாதத்தின் பின் விளைவுகளை ஒருவர் எப்படி சமாளிக்கலாம்?

நம்பிக்கையும் பிரார்த்தனையும் தான்! ஒரு அழிவு ஏற்படும் பொழுது, கோபம் என்பது தவிர்க்க முடியாதது. நீங்களும் தாறுமாறாக பதிலுக்குப் பதில் செயற்படாமல் இருக்க, முன்னெச்சரிக்கையாக இங்கு அறிவு அல்லது புத்திசாலித்தனம்தான் தேவைப்படுகிறதே தவிர உணர்ச்சிக் கொந்தளிப்புகள் அல்ல. ஒரு தவறு, மற்றொரு தவறால் திருத்தப்பட முடியாது. பல்வழி கலாச்சாரங்கள், பல்வழி மதபோதனைகள், ஆன்மீக மேம்பாடு இவற்றை உலகின் ஒவ்வொரு பகுதியிலும் ஆதரிக்கப்பாடுபடவேண்டும். ஏனெனில், எங்காவது ஒரு சிறுபகுதி மக்களை அறியாமையில் உழல விட்டுவிட்டாலும் அது உலகிற்கே பாதுகாப்பானது அல்ல.

தீவிரவாதமோ, அஹிம்சையோ அதனதன் செயல்களைப் பொறுத்தது அல்ல. ஆனால், அதன் பின்னே உள்ள நோக்கத்தைப் பொறுத்தது ஆகும். தீவிரவாதம் அல்லது கொடுமையின் ஆதாரம் யாதெனில் கோபம், துராசை, வெறுப்பு, பொறாமை, பேராசை, ஏமாற்றம் மற்றும் எதிர்க்கும் குணம் ஆகியனவாகும்.

ஒரு அறுவை சிகிச்சை நிபுணர் ஒரு மனிதனின் வயிற்றைக் கத்தியால் கிழித்து, வைத்தியம் செய்கிறார். ஒரு கொலைகாரனும் வயிற்றில் குத்துகிறான். செயல் ஒரே மாதிரி இருந்தாலும், மருத்துவர் உயிரைக் காக்க அச்செயலைச் செய்கிறார். ஆனால், கொலைகாரன் அழிப்பதற்காக அச்செயலைச் செய்கிறான். ஹிம்சையோ, அஹிம்சையோ செயலால் தீர்மானிக்கப்படுவதில்லை. மாறாக அதனதன் நோக்கத்தினால் தீர்மானிக்கப்படுகிறது.

சில சமயங்களில் போர் கூட, அது கோபம், பொறாமை, பேராசை, வெறுப்பு இல்லாத பட்சத்தில் அஹிம்சையாகத்தான் கருதப்பட வேண்டும். அதன் நோக்கம் மக்களை நல்வழிப்படுத்துவதற்காக இருந்தால், வேறு எந்த வழியிலும் அவர்களை மாற்றமுடியாத பட்சத்தில் அத்தகைய போரும் அஹிம்சை தான். *தர்மம் செய்வதுகூட ஒரு கொடுமைதான், அது நியாயமானதாக அன்றி ஒருவருடைய சுயகௌரவத்தையும் நீக்கி, அவரை அடிமைப் படுத்துவது போன்று அளிக்கப் படும் பட்சத்தில் அந்த தர்மமும் ஒரு ஹிம்சையைச் சார்ந்தததுதான்.*

**பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்**


சரியான கொள்கையை நிலை நாட்டும் பட்சத்தில் நடத்தப்படும் போர் கருணையான செயலாகத்தான் கொள்ளப்பட வேண்டும்.

(தொடரும்)

# உங்கள் கைரேகை பலன்கள் 49

**7.** புத்தி இரேகையின் இறுதியின் கிளை கீழேநோக்கிச் சந்திர மேட்டில் போயிருந்தால், எவ்வளவுக்குக் கற்பனா சக்தியுண்டோ அவ்வளவுக்குக் கிரியாம்சத்திலும் நடப்பவர் என்பதைக்குறிக்கும். கற்பனையையும் செய்கையையும் தம் மனக்கண்ணே காண்பர். கிளைகளின் இரேகை முனைகள் கூராயிருக்குமாயின் நல்லதென்றறியலாம்.

கூரில்லாவிடில் செய்கிற காரியங்களில் அடிக்கடி தவறு உண்டாகும். சிந்தனையானது காரியத்தில் சில சமயம் சித்திபெறாது. பேசுவதொன்றும் செய்வதொன்றுமாக முடிவதால் பொய்யரென்றும் சொல்லப்படும். இதர கிரக அமைப்புகள் மாறுபட்டிருக்குமாயின் பொய்யே பேசுபவராவர்.



கட்டுக்கதையாகச் சொல்லாமல், எப்பொழுதும் பொய் பேசுவதே தொழிலாயிருப்பர்.

**8.** புத்தி இரேகையின் முனை மூன்று சிறு கிளைகளோடு அமைவதுண்டு. இந்த மூன்று முறையே புதன், செவ்வாய், சந்திரன் முதலிய மூன்றும் கிரகச் சார்பிலிருப்பதை அறியலாம். இந்த இரேகைக் குறி சிலாக்கியமானது.

மூன்றும் ஒன்று சேர்வதால் எடுத்த காரியத்திலெல்லாம் ஜெயமுண்டாவதைக் குறிக்கும். அபிலாசையிலீடுபடாமல் சோம்பலுக்குட் படுவராயின், பலனற்றுப்போம். ஊக்கமுள்ளோருக்கு முடிவில் விசேட இலாபத்தைக் கொடுக்கும்.


புத்தி இரேகையின் குணானுபவம் அதன் அமைப்பிலிருக்கிறது. அழுத்தமானதும் திடமான சிந்தனைக்குரியதுமான மனோ தர்மத்தைப் புத்தி இரேகை புலப்படுத்திவிடும். நீண்ட புத்தி இரேகை நன்கு பதிந்து தங்குதடையற்று அமைந்திருக்குமாயின் அது சிறந்த மனோசக்தி, தன்னடக்கம், நல்ல ஞாபகம், ஒரே நாட்டம், கலக்கமற்ற மனோ விலாசம், திடமான தேகாரோக்கியம், தேக பலம் முதலியவைகளைக் குறிக்கும். நன்கு பதிந்து இரேகை சுலபமாய் எதையும் அறிந்துகொள்ளக் கூடியதையும், பாரபட்சமற்றுப் புத்தி தராசு நுனி போலிருந்து வருவதையும் விளக்குவதாகும். மற்றும் அது நினைத்த காரியத்தை செய்து முடிக்கும் வல்லமையையும் காட்டுவதாகும். புத்தி

## புத்தி இரேகையின் குறைகளும் பலாபலன்களும்

இரேகை பதிந்தும் நீண்டும் இருப்பின் அகன்ற மனோ விலாசத்தை அது குறிக்கும். நீண்ட புத்தி இரேகையில் எவ்விதக்குற்றங்குறை காணப் பட்டாலும் களங்கமற்றே விளங்குவர்.

**சக்தி .**

புத்தி இரேகை பதிந்திருக்குமானால் அதற்கு விசேட பலனுண்டு என்பது இதனால் விளங்குகிறது. நீண்ட இரேகை அகன்ற மனோ அளவைக் குறிக்கிறது. அது நன்கு பதிந்திருக்கும் தன்மை குணத்தைக் காட்டுகிறது. இரேகை நன்கு பதிந்தும் நீளமாயுமிருந்தால் அது நிதானம், ஆழ்ந்த யோசனை இவை களைக் குறிப்பதாகும். இத்தகையோர் துடுக்காய்ப்



பேசார்கள். அவசரப்பட்டு அபிப்பிராயமும் சொல்வார்கள். யோசித்து முடிவுக்கு வந்த தீர்மானத்தை நிறைவேற்றுவார்கள். குறிப்பிட்ட காரியத்திலேயே நாட்டமாய் இருந்து பல நுட்பங்களையும் நன்குணர்வர். ஆபத்து நேர்ந்த காலத்தும் ஏதும் நடவாததுபோலவே நிதானமாயும் சாந்தமாயும் இருப்பர். தன்னடக்கமும் பொறுமையும் விசேடித்து நிற்கும். கட்டை விரல் பலத்தும் புத்தி இரேகை நன்கு பதிந்திருந்தால், அவை அமைதி, நிதானம், மற்றவர்கள் அவ்விதக் கையை உடையவர்களை எதிர்க்க முடியாத நிலை முதலியவைகளைக் குறிக்கும். அகலமான கட்டை விரல் மற்றவர்களைத் தன்வசப்படுத்தும் சக்தியுமுள்ளது. இத்துடன் பதிந்து புத்தி இரேகையும் இருக்குமாயின் தன்னடக்கம் பெரிதும் உண்டாகும். இவ்விரண்டும் ஒருங்கே அமையப் பெற்றவர்கள் தாங்கள் எக்காரியத் தில் புகுந்தாலும் அதைச் சரிவர நடத்தி முடித்திடுவர்.

புத்தி இரேகை நன்கு பதிந்திருந்தால், மூளை செம்மையாயிருப்பதை அது தெரிவிக்கும். குரு ஆதிக்கம் உள்ளோராயின் ஆள்காட்டி விரலின் மூன்றாம் அங்குலாஸ்தி கனத்திருக்கும். அழுந்தப்பதிந்துள்ள புத்தி இரேகை கணிதத்தில் சளைக்காது வேலை செய்வதைக் குறிக்கும்.

அநேகர் கைகளில் புத்தி இரேகை மெல்லியதாய் காணப்படும் மெல்லிய புத்தி இரேகை ஒழுங்காய் அமைந்திராது. அதனால் மூளை பலனற்றது என்று அறியத்தக்கது. மூளையின் சக்தி துரிதமாய் வேலை செய்யாது புத்தி இரேகை மெல்லியதாய் இருந்தாலும் அறிவாளியாய் இருப்பர். ஆனால் ஆழ்ந்து யோசிக்க முடியாது. நல்ல யுக்திகள் தோன்றும் என்றாலும் பேசியே தீர்ப்பர். மனோ வலிமை இராது. சிந்திக்க நேரிட்டால் களைப்புற்றிடுவர்.

(தொடரும்)

# கடும்போக்குடைய கட்சிகளின் பேச்சுக்கள் எவ்வாறு தீர்வை தரும்?

## ஏமாற்றும் செயல் என்கிறது தமிழ் கூட்டமைப்பு

(கொழும்பு)

**அரசாங்கத்துடன் கூட்டமைப்பு மேற்கொண்டு வந்த இரு தரப்பு பேச்சுவார்த்தைகளில் இணக்கம் ஏற்படாதபோது சிங்கள கடும் போக்குடைய கட்சிகள் அங்கம் வகிக்கக்கூடிய பல்தரப்பு பேச்சுக்களால் எவ்வாறு அரசியல் தீர்வை ஏற்படுத்த முடியும்? என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், பாராளுமன்ற தெரிவுக்குழு இழுத்தடிப்பிற்கும் தமிழ் மக்களை ஏமாற்றுவதற்குமான அரசின் செயற்பாடாகவே கருத முடிகின்றது எனவும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

வட கிழக்கு மாகாணங்கள் இன்றும் இராணுவத் தளங்களாகவே காணப்படுகின்றன. தமிழ் மக்கள் அரசாங்கத்தின் இனப்பிரச்சினைக்கான நடவடிக்கைகளில் நம்பிக்கையற்ற நிலையிலேயே உள்ளனர்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் பல தரப்பு மேடையொன்றில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என்பதை எதிர்பார்க்க முடியாது என்றும் அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

கடந்த செப்டெம்பர் மாதத்துடன் அரசு கூட்டமைப்பு பேச்சுவார்த்தைகள் இடை நிறுத்தப்பட்டன. இதன்போது அரசாங்கத்தின் இணக்கப்பாட்டிலான உறுதி மொழிகளும் உடன்படிக்கைகளும் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை.

அரசியலமைப்பில் காணப்படுகின்ற 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலேனும் அரசியல் தீர்வு ஏற்படுத்தப்படுமென்றால் அதற்கும் அரசின் பங்காளி கட்சிகள் இடம் கொடுப்பதும் இல்லை. அரசாங்கம் முயற்சிப்பதும் இல்லை.

இரு தரப்பு பேச்சுவார்த்தைகளில் அரசாங்கத்தின் பின்வாங்கலின் பின்னர் தமிழ் மக்களிடையே தீர்வுத் திட்டம் தொடர்பில் நம்பிக்கையற்ற நிலையே காணப்படுகின்றது. குறிப்பாக சிங்கள கடும் போக்குடைய கட்சிகளான சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமய மற்றும் அமைச்சர் விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி போன்ற கட்சிகள் அங்கம் வகிக்கக்கூடிய பாராளுமன்ற தெரிவுக் குழுவில் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு திட்டம் ஒரு போதும் வெற்றியளிக்காது.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் அரசு கூட்டமைப்பு இரு தரப்பு பேச்சுவார்த்தையை ஊக்குவிக்க முயற்சிப்பதே அரசியல் தீர்விற்கு அவரால் ஆற்றக்கூடிய பணியாகுமே தவிர பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்குள் கூட்டமைப்பை உள்வாங்குவதில் அல்ல.

எனவே, பாராளுமன்ற தெரிவுக்குழு தொடர்பில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாட்டில் எவ்விதமான மாற்றமும் இல்லை என்றார். (அ-2)

## 4 மாதங்களில் 10 வெளிநாட்டு பிரதிநிதிகள் குழுக்கள் வருகை

கடந்த நான்கு மாதங்களில் பத்து வெளிநாட்டு பிரதிநிதிகள் குழுக்கள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் நிலைமைகள் குறித்து ஆராயும் நோக்கில் வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் இராஜதந்திர பிரதிநிதிகள் இவ்வாறு இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.

இந்தியா, கட்டார், இந்தோனேஷியா, பலஸ்தீனம், இஸ்ரேல், சீஷேல்ஸ், ஒஸ்ட்ரியா, ஜப்பான் மற்றும் ஐரோப்பா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர். இதில் அதிகளவான பிரதிநிதிகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு விஜயம் செய்துள்ளனர். (அ-2)

# ஐ.தே.கவின் யாழ். மேதினத்தில் 6 எம்.பிக்கள் பங்கேற்கவில்லை

## அறிக்கை சமர்ப்பிக்க பணிப்பு

எதிர்க்கட்சிகளின் மேதினக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற போது ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 6 பேர் அதில் பங்கேற்கவில்லை.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சி இம்முறை மேதினத்தை யாழ்ப்பாணத்தில் நடத்தியது. இதன்போது சஜித் பிரேமதாஸ, அவருடைய தந்தை ரணசிங்க பிரேமதாஸவின் சிரார்த்த நிகழ்வின் நிமிர்த்தம் யாழ்ப்பாணத்துக்கு செல்லவில்லை.

திலிப் வன்னியாராச்சியும் இதன் காரணமாகவே யாழ்ப்பாணம் செல்லவில்லை. எனினும் கருஜெயசூரிய, தயாசிறி ஜயசேகர, புத்திக பத்திரண, ரஞ்சித் மத்தும பண்டார, தலதா அத்துகோரளை, அசோக் அபேசிங்க ஆகியோர் காரணங்கள் இன்றியே யாழ்ப்பாணம் செல்ல வில்லை.

ரோசி சேனநாயக்க, சுஜீவ சேரசிங்க ஆகியோர் வெளிநாடு சென்றமையால் யாழ்ப்பாணம் செல்லவில்லை. இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சியின் பல மாகாண மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களும் யாழ்ப்பாண மேதினத்துக்கு செல்லவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்தவர்களின் வருகையின்மை தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு பணித்துள்ளார். (அ-2)

# பாதுகாப்பு அமைச்சிலிருந்து பெறப்பட்ட காட்சிகளையே ஒளிபரப்பு செய்தோம்

## சுயாதீன தொ.கா. சேவையின் தலைவர் தெரிவிப்பு

பாதுகாப்பு அமைச்சிலிருந்து வீடியோ காட்சிகள் பெற்றுக் கொள்ளப்பட்டதாக சுயாதீன தொலைக்காட்சி அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் சிலர் புலிக்கொடி ஏந்திச் சென்றமை தொடர்பான காட்சிகள் பாதுகாப்பு அமைச்சிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டு ஒளிபரப்பு செய்யப்பட்டதாக சுயாதீன தொலைக்காட்சி சேவையின் தலைவர் ரொஸ்மன் சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வீடியோ காட்சிகள் தமது செய்தி அறிக்கையில் ஒளிபரப்பு செய்யப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

மேதினக் கூட்ட நிகழ்வுகள் தொடர்பான செய்தி சேகரிப்பில் சுயாதீன தொலைக்காட்சி சேவை ஈடுபடவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியினர் குறித்த வீடியோ காட்சிகள் தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் ரொஸ்மன் சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறித்த வீடியோ காட்சிகளை பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்தவர்கள் ஒளிப்பதிவு செய்திருந்தால் உடனடியாக சந்தேக நபர்களை கைது செய்திருக்க முடியும் என ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

சந்தேகநபர்களை உடனடியாக கைது செய்து சட்டநடவடிக்கை எடுத்திருக்க முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (அ-2)

# மாகாண சபைகளை கலைக்குமாறு முதலமைச்சர்கள் கோரிக்கை?


மூன்று மாகாணசபைகளை கலைக்குமாறு முதலமைச்சர்கள் கோரிக்கை விடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சப்ரகமுவ, ஊவா மற்றும் கிழக்கு மாகாண சபைகளின் முதலமைச்சர்கள் இவ்வாறு தங்களது மாகாணசபைகளை கலைக்குமாறு ஜனாதிபதியிடம் கோர உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

உத்தியோக பூர்வ காலம் முடிவடைவதற்கு முன்னதாக மாகாண சபைகளை கலைக்குமாறு குறித்த முதலமைச்சர்கள் எழுத்து மூலம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுக்கவுள்ளனர்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதமளவில் குறித்த மாகாணசபைகளை கலைப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆளும் கட்சியின் மீதான மக்கள் நம்பிக்கை வலுவிழக்கவில்லை என்பதை சர்வதேச சமூகத்திற்கு வெளிக்காட்டும் நோக்கில் தேர்தல்களை நடத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது எனக் குறிப்பிடப்படுகிறது. (அ-2)







கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் அரச கால்நடை வைத்தியர் அலுவலகம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கால்நடை வளர்ப்பு கிராமிய அபிவிருத்தி பிரதி அமைச்சர் மைத்திரிபால, பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோர் கட்டடத்தை நாடாவெட்டி திறந்து வைப்பதையும் மு.சந்திரகுமார் பெயர்ப்பலகையை திரை நீக்கம் செய்வதையும் படங்களில் காணலாம்.

## கொழும்பு துறைமுகத்துடன் உல்லாச கப்பல் இணைக்கப்படவுள்ளது

முதன்முதலாக உல்லாசப் பயணிகள் கப்பல் சேவை ஒன்று கொழும்பு துறைமுகத்துடன் எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதல் இணைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தகப்பல்சேவை மூலம் ஒஸ்ரியா, ஜேர்மனி மற்றும் சுவிட்சர்லாந்து நாடுகளை சேர்ந்த 4 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, கொழும்பு துறைமுகத்திற்கு சுற்றுலாப் பயணிகள் கப்பல்கள் அதிக எண்ணிக்கையில் வருகை தருவதில் ஆர்வம் காட்டும் நிலையில் கொழும்பு துறைமுக பயணிகள் இறங்கு துறையின் தரத்தை உயர்த்த கொழும்பு துறைமுக அதிகார சபை தீர்மானித்துள்ளது. (அ-2)



கடந்த வாரம் கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரம சைவச் சிறுவர் இல்லத்திற்கு விஜயம் செய்த கால்நடைவள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி பிரதி அமைச்சர் எச்.ஆர்.மித்திரபால வரவேற்கப்படுவதையும், இல்லச் சிறார்களுடன் அளவளாவுதையும், இல்லத்தில் செயற்படுத்தப்படும் கறவைப் பசுத் திட்டம் மற்றும் சமையல் எரிவாயு உற்பத்தித் திட்டம் ஆகியவற்றைப் பார்வையிடுவதையும், இல்ல மாணவர்களுக்கு வங்கி கணக்கை ஆரம்பிக்கும் முகமாக இல்லச் சிறுமி ஒருவருக்கு காசோலை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## கைபிருப்பு பால்மா முடியும் வரை பழைய விலைக்கே விற்கவேண்டும்

### வர்த்தக அமைச்சர் வலியுறுத்து

பால்மா விலை மறுசீரமைக்கப்பட்டுள்ள போதிலும் ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்டு பொதியிடப்பட்ட பால்மா பக்கெற்றுக்கள் பழைய விலைக்கே விற்பனை செய்யப்பட வேண்டும் என கூட்டுறவு மற்றும் உள்ளூர் வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ வர்த்தகர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

பக்கெற்றின் விலையை மாற்றியோ அல்லது விலையின் மேல் ஸ்டிக்கரினை ஒட்டியோ விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கையினை முன்னெடுக்குமாறு நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக்கிற்கு பணிப்புரை விடுத்திருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

இதன்படி ஏற்கனவே பொதியிடப்பட்ட 400 கிராம் பால்மா பக்கெற்றுக்கள் 264 ரூபாவுக்கும் ஒரு கிலோகிராம் பால்மா பக்கெற்றொன்று 647 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஒரு கிலோ பால்மா பக்கெற்றொன்றின் விலையை 170 ரூபாவால் அதிகரிக்குமாறு தனியார் பால்மா கம்பனிகள் கேட்டுக் கொண்டிருந்த போதிலும் நுகர்வோர் அதிகார சபை 163 ரூபாவால் மாத்திரமே விலையினை மறுசீரமைப்பதற்கு அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கொழும்பு, கண்டி, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் சமையல் எரிவாயு சிலிண்டர்களை மறைத்து வைத்து நுகர்வோர் மத்தியில் தட்டுப்பாட்டை ஏற்படுத்திய 30 வர்த்தகர்கள் மற்றும் 270 சமையல் எரிவாயு சிலிண்டர்கள் பற்றிய தகவல்கள் அம்பலத்திற்கு வந்திருப்பதாகவும் அமைச்சர் இதன் போது சுட்டிக்காட்டினார். (அ-2)

## புகைத்தல் பொருட்களை கடத்திய முஸ்லீம் பெண் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் எடுத்துவர முயற்சிக்கப்பட்ட புகைத்தல் பொருட்களை கட்டுநாயக்க சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் இலங்கையை வந்தடைந்த சவுதி அரேபிய வானூர்த்தியிலேயே குறித்த பெண் இலங்கை வந்தடைந்தார். அவரின் கடத்தல் தொடர்பில் வானூர்தி தள சுங்க அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மக்காவிற்கான பயணத்தை மேற்கொண்டு விட்டு வருகை தந்த 35 வயதான முஸ்லிம் பெண்ணொருவரே இவ்வாறு புகைத்தல் பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

துருக்கியில் தயாரிக்கப்பட்ட 57 சிகரெட்டுக்களும் வேறு சில புகைத்தல் பொருட்களையும் அவர் சட்டவிரோதமான முறையில் எடுத்து வந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-2)

## குடியுரிமை பெறுவதற்கான ஆவணங்களை பொலிஸாரிடம் பெறச் சென்றவர் கைது

(கொழும்பு)

கனடாவுக்கு புலம்பெயர்ந்துள்ளவர்கள் அந்த நாட்டின் குடியுரிமையை பெறுவதற்கு தேவையான ஆவணங்களை பொலிஸாரிடமிருந்து பெற்றுக் கொள்வதற்காக சென்ற தமிழர் ஒருவரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாரிடம் இருந்து சான்றிதழ்களை பெறுவதற்காக அவர் போலி ஆவணங்களை சமர்ப்பித்துள்ளதால் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் 1973 ஆம் ஆண்டு இலங்கை பொலிஸில் இணைந்து 1993 ஆம் ஆண்டு விலகி கனடாவுக்கு சென்று குடியேறியவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்த நபர் வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்திற்கு சென்று கனடாவில் உள்ள ஒருவர் அந்த நாட்டின் குடியுரிமையை பெற தேவையான சான்றிதழ்களை கோரியுள்ளார்.

இதற்காக அவர் சமர்ப்பித்திருந்த ஆவணங்களை ஆராய்ந்த பொலிஸார் அவை போலியானவை என கண்டு பிடித்ததை அடுத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டதாக அறிய வருகின்றது. (அ-2)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.05 08

★ 1450-இங்கிலாந்தில் கென்ட் நகரில் ஆறாம் ஹென்றி மன்னனுக்கெதிராக ஜாக்கேட் என்பவன் தலைமையில் கிளர்ச்சி இடம் பெற்றது.

★ 1821- கிரேக்க விடுதலைப் போர்: கிரேக்கர்கள் துருக்கியர்களை கிராவியா என்ற இடத்தில் இடம் பெற்ற போரில் தோற்கடித்தனர்.

★ 1861-அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பின் தலைநகராக வேர்ஜீனியாவின் ரிச்மண்ட் நகரம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

★ 1886-ஜோன் பெம்பர்ட்டன் கொக்கக்கோலா எனப் பின்னர் பெயரிடப்பட்ட மென்பானத்தைக் கண்டுபிடித்தார்.

★ 1902- கரீபியன் மார்டீனிக் தீவில் பெலே எரிமலை வெடித்ததில் 30 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

★ 1914-பராமவுண்ட் பிக்சர்ஸ் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1933-மகாத்மாகாந்தி ஹரிஜன் மக்களின் நலனுக்காக 21 நாட்கள் உண்ணாநோன்பை ஆரம்பித்தார்.

★ 1942- இரண்டாம் உலகப் போர்: கொக்கோஸ் தீவுகளில் நிலை கொண்டிருந்த பிரித்தானிய இலங்கை இராணுவப் பிரிவை சேர்ந்த இராணுவத்தினர் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இக்கிளர்ச்சி அடக்கப்பட்டு மூவர் தூக்கிலிடப்பட்டனர்.

★ 1945- அல்ஜீரியாவின் சேட்டிஃப் என்ற இடத்தில் நூற்றுக்கணக்கான அல்ஜீரியர்கள் பிரெஞ்சுப் படைகளினால் உயிரிழந்தனர்.

★ 1945-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியப் படைகள் நிபந்தனையின்றி சரணடைந்தன.

★ 1984- லொஸ்ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் விளையாட்டுகளைப் பகிஷ்கரிக்கப் போவதாக சோவியத் ஒன்றியம் அறிவித்தது.

★ 2007- புதிய வட அயர்லாந்து உயர் சபை அமைக்கப்பட்டது.

### பிறப்பு

★ 1916-சுவாமி சின்மயானந்தா, இந்திய ஆன்மீகவாதி (இ.1993)

### இறப்புக்கள்

★ 1947- ரொபேர்ட் ஹோர்விட்ஸ், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

★ 1951-மு.நல்லதம்பி, ஈழத்துப் புலவர்

### சிறப்பு நாட்கள்

★ உலக செஞ்சிலுவை தினம்

★ தென்கொரியா -பெற்றோர் தினம்



★ 1828- செஞ்சிலுவைச் சங்கத்தை நிறுவியவர் ஹென்றி டியூனாண்ட் பிறந்த தினம். (இ.1910)




# சிறுவர் அரங்கம்

94

## அம்புலி மாமா கதைகள்

## பூர்வ ஜென்மமும் புனர் ஜென்மமும்



கமலாபுரத்தில் வசித்து வந்த வீரேசுவர சாஸ்திரி மிகப் புகழ் பெற்ற சோதிடராகத் திகழ்ந்தார். அவர் தேவி திரிபுர சுந்தரியின் பரம பக்தராக இருந்தார். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சூரிய உதயத்தின் போது தேவியை மனதார வழிபட்டுப் பூஜை செய்த பின், தன்னை நாடி வருபவர்களுக்கு சோதிடம் பார்த்து அவர் கூறும் வாக்கு அப்படியே பலித்து வந்தது. அதனால் அன்று திரளான மக்கள் கூட்டம் அவரை நாடி வந்தது.



ஒரு வெள்ளிக்கிழமையன்று, ராமச்சந்திரபுரத்துப் பஞ்சாயத்துத் தலைவரான சீதாபதி அவரைத் தேடி வந்தார். அவருடைய ஜாதகத்தை ஆராய்ந்த பின், சாஸ்திரி அவரை நோக்கி, பூர்வ ஜென்மத்தில் நீங்கள் உங்களுடைய ஊரான ராமச்சந்திரபுரத்தின் மன்னராக இருந்தீர்கள்! நிறைய தான தர்மங்கள் செய்தீர்கள்! அந்த ஊரிலுள்ள மருத்துவசாலை, பள்ளி, கோயில் ஆகிய பலவற்றை நீங்கள் தான் உருவாக்கியவர்! அப்போது உங்கள் பெயர் ராமச்சந்திரன் என்றிருந்தது. இந்த ஜென்மத்திலும் அந்தப் பெயருக்குத் தொடர்பாக சீதாபதி என்றே உங்கள் பெயர் அமைந்துள்ளது என்றார்.

சீதாபதிக்கு அதைக் கேட்டு மட்டிலா மகிழ்ச்சி உண்டாயிற்று. ராமச்சந்திர ராஜாவின் மறுபிறவி என்று தெரிந்து கொண்டதும் மிகுந்த கர்வம் உண்டாகியது.

ஊர் திரும்பியதும், ராமச்சந்திர ராஜா ஊருக்குச் செய்த தான தர்ம காரியங்கள் என்னென்ன என்று கண்டறிந்தார். அவை அனைத்தையும் தனதாக்கிக் கொள்ள முடிவு செய்து, ஊர்ப் பிரமுகர்களை அழைத்தார்.

அவர்கள் வந்து சேர்ந்தவுடன், அவர்களிடம் சோதிடர் சாஸ்திரி தன்னுடைய பூர்வஜென்மத்தைப் பற்றிக் கூறியதை எடுத்துரைத்தார். பின்னர் அவர்களிடம், இதிலிருந்து நான் தான் ராமச்சந்திர ராஜாவின் மறுபிறவி என்று நிரூபணமாகி விட்டது. அதனால் நான் தானமாக அளித்த அனைத்தையும் திரும்பப் பெற்றுக் கொண்டு என்னுடைய ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரப்போகிறேன். இனி, அவற்றின் முழு நிர்வாகப் பொறுப்பும் என்னுடையதாகும்! என்றார்.

அவருடைய பேச்சைக் கேட்ட பிரமுகர்கள் திகைத்துப் போனார்கள். அவர்களுள் வயது முதிர்ந்த ஒருவர்,ஐயா! மன்னராக இருந்த போது எவ்வாறு அப்போதிருந்த மக்களின் தலைவராக இருந்தீர்களோ, அவ்வாறே இன்றும் எங்கள் தலைவராக இருக்கிறீர்கள். ஆனால் மன்னராக இருந்த போது தாங்கள் தானம் செய்தவற்றை இப்போது திரும்பப் பெற நினைப்பது சரியல்ல! என்றார்.


உடனே சீதாபதிக்கு கோபம் பொங்கியெழுந்தது. எது சரி, எது தவறு என்று நீங்கள் எனக்குக் கற்றுத் தர வேண்டாம்! நான் தான் ராமச்சந்திர ராஜாவின் மறுபிறவி! அதனால், நான் கொடுத்த பொருட்கள் மீது எனக்கு முழு உரிமை உண்டு! உங்களிடம் அதைப் பற்றித் தெரிவிக்கலாம் என்று தான் உங்களை அழைத்தேனே தவிர உங்களிடம் அனுமதி கேட்க அழைக்கவில்லை! இது பஞ்சாயத்துத் தலைவரான என் கட்டளை! என்று சீறினார்.

அவரை எதிர்த்து ஒன்றும் கூறத் துணிவில்லாமல் பிரமுகர்கள் மௌனமாக அங்கிருந்து கலைந்தனர். உடனடியாக தான் போன பிறவியில் உருவாக்கிய எல்லாவற்றையும் தன் வசமாக்கிக் கொண்டார். அவற்றின் மூலம் கிடைத்த வருமானத்தைத் தானே அனுபவிக்கத் தொடங்கினார்.

அவருடைய அடாவடிச் செயல்களைப் பொறுக்க முடியாத ஊர்ப் பிரமுகர்கள் ஒன்று கூடி கமலாபுரம் சென்று சோதிடர் சாஸ்திரியைச் சந்தித்தனர். நடந்ததையெல்லாம் விளக்கிய பின்னர் அவரிடம், உங்களுடைய சோதிடம் எவ்வளவு தூரம் உண்மை என்று தெரியாது.


ஆனால், சீதாபதி போன்ற ஒருவரின் மனதில் தேவையில்லாமல் பூர்வ ஜென்மத்தைப் பற்றிக் கூறி அவர் மனதில் ஆணவத்தையும், பேராசையையும் தூண்டி விட்டதால் ஏற்பட்ட விளைவுகளை அந்த ஊர் மக்களாகிய நாங்கள் தான் இப்போது அனுபவிக்க வேண்டியிருக்கிறது. விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்திய நீங்கள் தான் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்! என்று வேண்டினர்.

அவர்கள் கூறியதைக் கேட்டுச் சற்று நேரம் கண்களை மூடிச் சிந்தித்த சாஸ்திரி,



சோதிட சாஸ்திரத்தின் மீது அவநம்பிக்கை கொள்ள வேண்டாம். முற்றும் ஆராய்ந்த பின்னர் நான் சீதாபதியைப்பற்றிக் கூறிய விடயம் உண்மையே! ஆனால் அதன் பின்விளைவுகள் இவ்வாறு இருக்கக் கூடும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. நான் ஏற்படுத்திய சிக்கலை நானே தீர்த்து வைக்கிறேன்! என்றவர் தொடர்ந்து, அடுத்த ஏகாதசியன்று சீதாபதியின் சேவைகளைப் பாராட்டும் விதமாக ஒரு விழாவிற்கு ஏற்பாடு செய்யுங்கள்! அந்த விழாவில் நான் கலந்து கொண்டு அவரை ஆசீர்வதித்து, அவருடைய எதிர்காலத்தைப் பற்றிக் கூறப்போவதாக அவரிடம் சொல்லுங்கள்! உங்களுடைய பிரச்சினை அன்றோடு தீர்ந்து விடும் என்று நம்புகிறேன்! என்று கூறி அவர்களை அனுப்பி வைத்தார்.

கமலாபுரத்திலிருந்து திரும்பிய ராமச்சந்திரபுரத்துப் பிரமுகர்கள் சீதாபதியிடம் தாங்கள் சாஸ்திரியை சந்தித்ததைப் பற்றியும் சாஸ்திரி அவருக்கு விழா ஏற்பாடு செய்யச் சொல்லியிருப்பதையும், அதில் அவரே நேரில் வந்து சீதாபதியை ஆசீர்வதித்து எதிர்காலப் பலன்களைக் கூறுவார் என்றும் சொன்னார்கள். அதைக்கேட்டு



சீதாபதி மகிழ்ச்சியுடன் விழாவிற்குச் சம்மதித்தார்.

ஏகாதசியன்று விழா விமரிசையாக நடந்தது. அதில் பங்கேற்ற சாஸ்திரி சீதாபதியை ஆசீர்வாதம் செய்தபின் உரை நிகழ்த்தினார். சோதிடம் என்பது ஓர் அற்புதமான சாஸ்திரம்! கிரகங்களின் சஞ்சாரத்தை உற்றுக் கவனித்து ஒருவருடைய கடந்த காலத்தையும், எதிர்காலத்தையும் தெளிவாகக் கணிக்க முடியும். பெருமதிப்பிற்குரிய சீதாபதி அவர்கள் போன ஜென்மத்தில் ராமச்சந்திரபுரத்தின் ராஜாவாக இருந்தார் என்றும் அவரே இந்தப் பிறவியில் சீதாபதியாகப் பிறந்திருக்கிறார் என்றும் அவரிடம் ஒரு சமயம் கூறியிருந்தேன். அன்று அவருடைய அடுத்த பிறவியைப் பற்றி நான் விளக்கமாகக் கூறவில்லை. அதை இப்போது கூறப் போகிறேன். சீதாபதி அவர்கள் இந்தப் பிறவியில் காலபைரவரின் அம்சமாகத் தோன்ற வாய்ப்பு உள்ளது. ஆணவத்தையும், அகங்காரத்தையும், பேராசையையும் தவிர்த்து, போன பிறவியில் ராமச்சந்திர ராஜா செய்தது போல் நற்செயல்களும், தான தர்மங்களும் செய்தால் மட்டுமே அடுத்த பிறவியில் காலபைரவரின் கடாட்சத்துடன் மிகச் சிறப்பாக விளங்குவார். ஆனால் பேராசை, ஆணவம் மேலிட்டு அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தினால் அவர் மறுபிறவியில் காலபைரவரின் வாகனமான நாயாகப் பிறப்பார்! என்று கூறி முடித்தார்.

இதைக் கேட்ட சீதாபதியின் மனதில் சஞ்சலம் உண்டாயிற்று! முற்பிறவியில் தான் ராஜா என்று அறிந்தபின்னர் தான் செய்த அடாவடிச் செயல்கள் அவர் நினைவிற்கு வந்தன. இதனால் மறுபிறவியில் காலபைரவரின் வாகனமான நாயாகப் பிறக்க வேண்டும் என்று நினைத்தவுடனே அவரைத் திகில் பற்றிக் கொண்டது.

சாஸ்திரியிடம் வணங்கி விடைபெற்றுக் கொண்டு வீட்டை அடைந்த அவர் அந்தக் கணம் முதல் பூர்வ ஜென்மத்தில் ராஜாவாக இருந்த போது தான் புரிந்த நற்செயல்களைத் தொடர்ந்து புரியத் தீர்மானித்தார். விரைவிலேயே, சீதாபதி மக்கள் போற்றும் தலைவனாக மாறினார்.

# நித்தியானந்தர் பிடியில் மதுரை ஆதீனம்

மதுரை ஆதீனப்பரப்புக்கள் நாளுக்கு நாள் நிமிடத்திற்கு நிமிடம் விஸ்வரூபம் எடுத்தபடியே இருக்கிறது.

இந்தநிலையில் தமிழகத்தில் இருக்கும் ஆதீனகர்த்தாக்களும் மடாதிபதிகளும் மயிலாடுதுறை தருமை ஆதீனமடத்தில் கூடி விதிமுறைகளை மீறி மதுரை ஆதீனகர்த்தராக நித்தி நியமிக்கப்பட்டிருக்கிறார். இதை 10 நாட்களுக்குள் மதுரை ஆதீனம் வாபஸ் பெறாவிட்டால் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுத்தனர்.

இதைத் தொடர்ந்து பத்திரிகையாளர்களை மே 2 ஆம் திகதி காலை 10 மணிக்கு அவசர அவசரமாக ஆதீன மடத்துக்கு அழைத்தார் நித்தி. அவருடன் மதுரை ஆதீனமும் ஜெகஜோதியாய்க் காட்சியளித்தார்.

அப்போது ஆதீனம், நான் ஆதீனத்தை நியமிக்க யாரையும் கேட்க வேண்டியதில்லை. சிவபெருமானின் உத்தரவுபடிதான் இவரை நியமித்தேன். என்னைக் கேட்க எந்த ஆதீனத்துக்கும் உரிமையில்லை என மேலுலகத்தில் இருந்து கடிதம் வந்ததுபோல் திருவாய் மலர்ந்தார். அடுத்து தங்களுக்கு எதிராக குரல்கொடுத்த ஆதீனங்களுக்கு இப்படி கவுன்டர் கொடுக்க ஆரம்பித்தார் நித்தி.

தருமபுர ஆதீனமும் திருப்பனந்தாள் ஆதீனமும்' என்னிடம் தன்னிலை விளக்கம் கேட்காமலே அவதூறு பரப்பி இருக்காங்க. என்னிடம் விளக்கம் கேட்டு அது அவங்களுக்கு திருப்தி அளிக்கலைன்னா நானே ஆதீனப் பொறுப்பை இராஜி

நாமா செய் திருப் பேன். கொலைக் குற்றவாளி க்கு கூட பேச வாய்ப்பு வழங்கப்படுது. அது எனக்கு வழங்கப்படாமலே என்னை கொலைக் குற்றவாளி ஆக்கிவிட்டார் கள். மதுரை ஆதீனமாக சைவ வேளாளர் குலத்தை சேர்ந்தவர்கள் தான் வரமுடியும். நானும் அதே வகுப்பை சேர்ந்தவன் தான் என்று சொல்லும் போதே மதுரை ஆதீனம் இடைமறித்து.... ஏற்கனவே தொண்டை மண்டல முதலியார் வகுப்பை சேர்ந்த 7 பேர் இங்கு ஆதீனங்களாக இருந்திருக்கிறார்கள்.

நித்தியும் அதே முதலியார் வகுப்பை சேர்ந்தவர்தான் என்றார் வேகமாக. இதன்பின் நித்தி என்மீதான தாக்குதல் இந்து மதத்தின் மீதான தாக்குதல். நான் இந்து மதத்திற்கும் சைவ சமயத்திற்கும் அரும்பணி ஆற்றி வருகின்றேன். 10 ஆயிரம் மணி நேரம் ஆன்மீகம்பற்றி பேசி இருக்கின்றேன். இதற்காக அடுத்த ஆண்டு கின்னஸில் இடம் பெறப்போகிறேன் என செம்மாந்த புன்னகையை கசிய விட்டு விட்டு ஆதீனங்கள் எல்லாம் அவங்க சொத்துக்களையும் மடத்தையும் விட்டு விட்டு வரட்டும். நானும் வாறேன். நான் வெளியே வந்த ஒரே மாதத்தில் என்னால் ஒரு புதிய பீடத்தை உருவாக்க முடியும். மற்றவர்களால் முடியுமா? ஆதீனக் கூட்டத்தில் என க்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர் மானத்தை 10 நாட்களில் வாபஸ் பெற வேண்டும். இல்லையேல் என் பக்தர்கள் தருமபுர ஆதீனத்தின் முன் உண்ணாவிரதம் இருப்பார்கள். ஆதீனமாக இருப்பவர்கள் தலைமுடி வைத்திருக்கக்கூடாது என்கிறார்கள். ஆதீனமே உங்களுக்கு இந்த முடிதான் டிரேட் மார்க் என்று சொல்லிவிட்டார்.

அப்புறமென்ன என்றார் மந்தகாசப் புன்னகையோடு. இதற்கிடையே தருமபுர ஆதீனத்தின் சார்பில் அதன் மேலாளர் குருசாமி தேசிகர் மதுரை உயர்நீதிமன்றத்தில் 2 ஆம் திகதி ஒரு ஆட்கொணர்வு மனுவை தாக்கல் செய்தார். அதில் நித்தியின் கஸ்டடியில் ஆதீனம் இருக்கிறார். அவர் சுயநினைவு இல்லாமல் இருக்கிறார் என்று தெரிகிறது. எனவே அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இதேபோல் இந்து மக்கள் கட்சி சோலைக்கண்ணனும் ஆதீனத்தை மயக்கத்திலும் போதையிலும் மூழ்கடித்து வைத்திருக்கிறார் நித்தி. அவரை நித்தியின் பிடியில் இருந்து மீட்பதோடு ஜூன் 5 ஆம் திகதி ஆதீனத்தில் நடக்க இருக்கும் கனகாபிஷேக நிகழ்ச்சிக்கும் தடைவிதிக்க வேண்டும் என்று ஒரு மனுவை தாக்கல் செய்தார்.



நித்தியானந்தாவுடன் மதுரை ஆதீனம்

இந்த இரண்டு மனுவும் விசாரணைக்கு வந்தபோது ஆதீனம் சார்பில் ஒருமனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய ஆதீன ஆட்கள் வந்தனர். அவர்களது மனுவில் என்னை யாரும் சிறைவைக்கவில்லை. என்னை போதையிலோ மயக்கத்திலோ யாரும் ஆழ்த்தவில்லை. நான் நித்தியின் கட்டுப்பாட்டிலும் இல்லை. என்னை யாரும் விலை கொடுத்து வாங்க முடியாது. நான் கோர்ட்டிற்கு வரமாட்டேன். தேவைப்பட்டால் மடத்திற்கு வந்து நீதிபதிகள் என்னை சந்திக்கலாம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. நீதியரசர்கள் சத்யநாராயணா, ஹரிபரந்தாமன் ஆகியோர் அடங்கிய பெஞ் ச்சோ இரண்டு மனுக்களின் மீதான விசாரணையையும் 4 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது.

இந்த நிலையில் ஆதீனத்தில் இருந்து ஆதீனத்துக்கு சேவை செய்து வந்த கஸ்தூரியை துரத்தியடித்து விட்டார்கள். வைஷ்ணவியை திடீரென்று காணவில்லை என்று பரபரப்பான செய்தி அடிபட மடத்தில் இருப்பவர்களோடு நெருங்கிய தொடர்பில் இருக்கும் இந்து மக்கள் கட்சி சோலைக்கண்ணனிடமே இது குறித்து கேட்டோம். அவரோ உண்மைதான் எனக்கும் தகவல் வந்தது. நித்திக்கு முடிசூட்டப்பட்ட ஞாயிற்றுக்கிழமை இரவே நித்தி ஆட்கள் கஸ்தூரியை வலுக் கட்டாயமாக வாடகைக் காரில் ஏற்றி அவங்க சொந்த ஊரான கச்சனத்துக்கு அனுப்பியிருக்காங்க. மறுநாள் இரவு ராஜபாளையத்தை சேர்ந்த ராமராஜன் என்பவருக்கு வைஷ்ணவி போன் பண்ணி மடத்தின் நிலைமை சரியில்லை. ஆதீனத்தை துப்பாக்கி முனையில் நித்தி கும்பல் இயக்கிக்கிட்டிருக்கு. ஆதீனத்தின் உயிருக்கு ஆபத்துன்னு சொன்னதாகவும் எனக்குத் தகவல். இதற்கிடையே நித்தி கும்பலுக்கு பயந்து வைஷ்ணவி தப்பி ஓடிவிட்டார். வைஷ்ணவி காணாமல் போன தகவல் சர்ச்சையைக் கிளப்பியதால் உயிருக்கு பயந்து தப்பி ஓடிய வைஷ்ணவியை மறுபடியும் தேடிப்பிடித்து மடத்துக்கு கொண்டு வந்துட்டாங்களாம். மறுபடியும் நித்தி தரப்பின் சிறைக்கே வந்து விட்ட வைஷ்ணவிக்கிட்ட பேசினாலும் பிரயோஜனம் இல்லை. அவர் நித்தி சொல்றதைத்தான் இனி கிளிப்பிள்ளை போல் சொல்வார் என்றார் எரிச்சலாய்.

நாம் முதலில் அந்த ராஜபாளையம் ராமராஜனை தேடிப்பிடித்து வைஷ்ணவி உங்களுடன் பேசியது உண்மையா? என்றோம்.

ராமராஜனோ ஆதீனத்திடம் மிக நெருக்கமாக நட்பு பாராட்டியவர்களில் நானும் ஒருவன். அடிக்கடி மடத்துக்குப் போவேன். அந்த வகையில் வைஷ்ணவியையும் கஸ்தூரியையும் எனக்குத் தெரியும். திங்கட்கிழமை என்னிடம் பேசியது வைஷ்ணவி அல்ல. அவருடைய தங்கை கஸ்தூரி. அவர் என் லைனுக்கு வந்து நித்தி கும்பல் ஆதீனத்தைக் கத்திமுனையிலும் துப்பாக்கி முனையிலும் மிரட்டி வச்சிருக்காங்க. என் அக்கா

## மர்மங்களை உடைக்கும் கஸ்தூரி- வைஷ்ணவி






வைஷ்ணவியை


விட்டு ஆதீனம் பிரியவேமாட்டார். அப்படி ப்பட்ட அக்காவை கொஞ்சநாள் பிடதி ஆசி ரமத்தில் போய் இருன்னு ஆதீனம் சொல்றாராம். அதனால் அக்கா ரொம்ப பயந்து போய் இருக்கா. ஆதீனம் சுயநினைவை அடிக்கடி இழந்திருறார் என்டும் அவரை நித்தி கும்பல் ஆட்டிப் படைக்குதுன்னும் ஆதீனத்தின் உயிருக்கும் தன் அக்கா வைஷ்ணவி உயிருக்கும் ஆபத்துன்னும் கஸ்தூரி பதற்றமாச் சொன்னாங்க.

(தொடரும்)

நக்கீரன்

# தேசிய தீவிரவாத தடுப்பு மையம் அமைப்பது பற்றி ஆலோசனை...

**தே**சிய தீவிரவாத தடுப்பு மையம் பற்றி டெல்லியில் நடைபெற்ற ஆலோசனையில், ஜெயலலிதா உட்பட்ட 12 மாநில முதல்-மந்திரிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.


ப.சிதம்பரம்

தீவிரவாதத்தை ஒடுக்குவதற்காக, தேசிய தீவிரவாத தடுப்பு மையம் அமைக்க மத்திய அரசு முடிவு செய்தது.

ஆனால், இந்த முடிவு மாநில அரசுகளின் அதிகாரத்தை பறிப்பதாகவும், கூட்டாட்சி தத்துவத்துக்கு எதிராகவும் உள்ளது என்றும் கூறி, பல்வேறு மாநில முதல்-மந்திரிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். அதைத் தொடர்ந்து, தேசிய தீவிரவாத தடுப்பு மையம் (என்.சி.டி.சி) அமைக்கும் முடிவு தற்காலிகமாக நிறுத்திவைக்கப் பட்டது.

இந்த நிலையில் சர்ச்சைக்குரிய தேசிய தீவிரவாத தடுப்பு மையம் (என்.சி.டி.சி) பிரச்சினை குறித்து விரிவான ஆலோசனை நடத்துவதற்காக, மாநில முதல் - மந்திரிகளின் மாநாட்டை கூட்ட முடிவு செய்யப்பட்டது. அதன்படி, டெல்லியில் மே 4 காலை பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில், மாநில முதல்-மந்திரிகள் மாநாடு நடைபெற்றது.

மாநாட்டை தொடங்கி வைத்து பேசிய பிரதமர் மன்மோகன்சிங், மற்றும் உள்துறை மந்திரி ப.சிதம்பரம் ஆகியோர், என்.சி.டி.சி. மாநில உரிமைகளுக்கு எதிரானது அல்ல என்று விளக்கம் அளித்து, இந்த பிரச்சனையில் கருத்து ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர். ஆனால், காங்கிரஸ் அல்லாத முதல்- மந்திரிகள் தேசிய தீவிரவாத தடுப்பு மையம் அமைக்கும் திட்டத்தை ஏற்க முடியாது என்று கூறி, அவர்களுடைய வேண்டுகோளை நிராகரித்துவிட்டனர்.

மாநாடு முடிந்ததும் நிருபர்களுக்கு பேட்டிஅளித்த ப.சிதம்பரம், "தேசிய தீவிரவாத தடுப்பு மையம் அமைப்பது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. மாநாட்டில் முதல்- மந்திரிகள் எழுப்பிய யோசனைகள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டு அதன் அடிப்படையில் மத்திய அரசு இறுதி முடிவை அறிவிக்கும்" என்று தெரிவித்தார்.

முன்னதாக தீவிரவாத தடுப்பு மையம் அமைக்க வேண்டியதன் அவசியத்தை மாநாட்டில் வலியுறுத்தி பேசிய பிரதமர் மன்மோகன் சிங், "இது மத்திய-மாநில அரசுகளுக்கு இடையே உள்ள பிரச்சினை அல்ல; தீவிரவாதத்தை ஒழிப்பதற்கான முயற்சியில் நாட்டின் ஒருங்கிணைந்த அமைப்பாக என்.சி.டி.சி. செயற்படும்" என்று விளக்கம் அளித்தார்.

தீவிரவாதத்தை ஒடுக்குவதில் மத்திய அரசுடன் மாநில அரசுகள் இணைந்து செயற்படவேண்டும் என்று வேண்டுகோள்விடுத்த மன்மோகன்சிங், "மாநில அரசுகளின் தீவிரவாத தடுப்பு நடவடிக்கைக்கு பக்கபலமாகத்தான் என்.சி.டி.சி. செயற்படுமே தவிர எதிராக அல்ல" என்றும் குறிப்பிட்டார்.






தேசிய தீவிரவாத தடுப்பு மையம் அமைப்பதற்கு கடுமையான எதிர்ப்பை தெரிவித்த தமிழக முதல்- அமைச்சர் ஜெயலலிதா, இதுபோன்ற நடவடிக்கைகளின் மூலம் நாட்டை சர்வாதிகார பாதையில் அழைத்துச் செல்வதாகவும் மத்திய அரசு மீது குற்றம் சாட்டினர். இந்த அமைப்பு குறித்து முழுமையாக ஆய்வு செய்வதற்காக, மாநில முதல்- மந்திரிகளை கொண்ட துணைக்குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்றும், அதுவரை என்.சி.டி.சி. அமைக்கும் முடிவை நிறுத்திவைக்க வேண்டும் என்றும், மாநாட்டில் ஜெயலலிதா, வற்புறுத்தினார்.

மத்திய உள்துறை அமைச்சகம் மீது கடும் தாக்குதல் தொடுத்த முதல்- அமைச்சர் ஜெயலலிதா, இந்த மையம் அமைப்பது குறித்த அரசாணையின் நகலைக்கூட அனுப்பி வைக்காமல், தமிழ் நாட்டை அவமதித் துவிட்டதாகவும் குற்றம் சாட்டினார்.

ஜெயலலிதா உட்பட 12 மாநில முதல்- மந்திரிகள் தேசிய தீவிரவாத தடுப்பு மையம் அமைக்கும் திட்டத்திற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

காங்கிரஸ் கூட்டணியில் அங்கம் வகிக்கும் திரிணாமுல் காங்கிரஸ் ஆளும் மேற்கு வங்காளமாநில முதல்- மந்திரி மம்தா பானர்ஜியும், என்.சி.டி.சி. அமைப்பையே தேவையில்லை என்று கூறி, நிராகரித்தார்.

மாநில அரசுகள் ஏற்காததால், இந்த அமைப்புக்கான அரசாணையை உடனடியாக வாபஸ் பெற வேண்டும் என்றும், அரசை அவர் வற்புறுத்தினார். கூட்டாட்சித் தத்துவத்திற்கெதிராக மத்திய அரசு தொடர்ந்து செயற்பட்டு வருவதாகவும், அரசியல் சட்டரீதியாக வரையறுக்கப்பட்ட மத்திய- மாநில - அரசுகளின் அதிகார எல்லையை மாற்றி அமைத்து வருவதாகவும் , குஜராத் மாநில முதல் - மந்திரி நரேந்திர மோடி தாக்குதல் தொடுத்தார். ஒடிசா முதல்- மந்திரி நவீன் பட்நாயக், "உலகின் எந்த ஒரு ஜனநாயக நாட்டின் புலனாய்வு அமைப்புக்கும், என்.சி.டி.சி. க்கு வழங்கப்பட்டிருப்பதுபோல் விரிவான அதிகாரம் வழங்கப்படவில்லை" என்றார்.

உத்தரப்பிரதேசத்தில் முதல்- மந்திரி அகிலேஷ்சிங் யாதவும், "தீவிரவாத தடுப்பு மையம் மாநில உரிமைகளை பறிப்பதாக"க்கூறி, எதிர்ப்பு தெரிவித்தார். மாநாட்டில் அகிலேஷ்சிங் யாதவ் பங்கேற்கவில்லை என்றாலும் அவருடைய உரை மாநாட்டில் படிக்கப்பட்டது.


பாரத ஜனதா முதல்- மந்திரிகளான சிவராஜ்சிங் சவுகான் (மத்திய பிரதேசம்) பி.கே. தமால் (இமாலசலப்பிரதேசம்) ஆகியோரும் என்.சி.டி.சி.க்கு எதிர்ப்பு தெரிவித்தனர். பீகார் முதல்- மந்திரி நிதீஸ்குமார் பேசுகையில் "என்.சி.டி.சி. அதிகாரிகள் சோதனை நடத்தி கைதுசெய்யும் குற்றவாளிகள் மாநில அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுகிறார்கள். மேல் விசாரணையின்போது அவர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப் படவில்லை என்றால், அவர் மீது என்ன நடவடிக்கை எடுப்பது?" என்று கேள்வி எழுப்பினார்.

தேசிய தீவிரவாத தடுப்பு மைய விதிமுறைகளில் சட்ட சிக்கல்கள் இருப்பதாக பஞ்சாப் முதல் - மந்திரி பிரகாஷ்சிங் பாதல் கூறினார். "அரசியல் சட்டத்துக்கும் சட்ட விதிகளுக்கு புறம்பாகவும் என்.சி.டி.சி. அமைக்கப் பட்டு இருப்பதாக," சத்தீஷ்கார் முதல் -மந்திரி ராமன்சிங் விமர்சித்தார்.

காங்கிரஸின் கூட்டணிக் கட்சியான காஷ்மீரின் தேசிய மாநாட்டு கட்சி முதல் -மந்திரி உமர் அப்துல்லாவும், தேசிய தீவிரவாத தடுப்பு மையத்தின் தற்போதைய நிலைக்கு எதிர்ப்பு தெரிவித்தார். "சர்ச்சைக்குரிய ஆயுத பொலீஸ் படை சிறப்பு அதிகார சட்டத்தைப்போல், இதுவும் மிகக் கடுமையானது" என்று அவர் கருத்துத்தெரிவித்தார்.

காங்கிரஸைச் சேர்ந்த அசாம் முதல்- மந்திரி தருகோகாய், என்.சி.டி.சி. யை ஆதரித்தாலும், மாநில அரசுகளுடன் கலந்து பேசிய பின்னரே நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நிபந்தனை விதித்தார். இதேபோல் மேலும் சில காங்கிரஸ் முதல்- மந்திரிகளும் என்.சி.டி.சி. க்கு ஆதரவு அளித் தாலும் அவற்றின் சில விதிமுறை களுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

**நன்றி: இணையம்**


நரேந்திர மோடி

**தமிழக முதல்- அமைச்சர் ஜெயலிலதா உட்பட பன்னிரண்டு மாநில முதல்- மந்திரிகள் கடும் எதிர்ப்பு. பிரதமர் தலைமையில் நடந்த கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.**

# சொந்த இடத்தில் மீள்குடியமர்த்தாவிட்டால் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்போம்!

## பலாலி மக்கள் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

**தம்மை சொந்த இடங்களில் மீள்குடியமர்த்துவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் தாம் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக பலாலியில் இருந்து இடம்பெயர்ந்து வசிக்கும் மக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

தமது மீளக்குடியமர்வு தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவை சந்தித்து பேசிய போதே அவர்கள் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

பலாலியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் சுமார் 30 வருடங்களாக நலன்புரி நிலையங்களிலும் உறவினர் வீடுகளிலும் வசித்து வருகின்றனர். இடம்பெயர்ந்து நீண்ட காலம் கடந்துள்ள போதும் இவர்களை மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் எவையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

வலி. வடக்கில் தற்போது பல பகுதிகளிலும் மக்கள் மீளக்குடியமர்வதற்கு இராணுவம் அனுமதியளித்துள்ளது. எனினும் பலாலிப் பகுதி மக்களின் மீளக்குடியமர்வு தொடர்பில் இதுவரை எந்தத் தகவலும் இல்லை.

இடம்பெயர்ந்து நீண்ட காலமாக தாம் பெரும் இன்னல்களை சந்தித்து வருவதாக அந்த மக்கள் கூறுகின்றனர். எனினும் எமது விடயத்தில் அரசு சற்றேனும் அக்கறை கொள்ளவில்லை என அவர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

சுமார் 200 இற்கும் மேற்பட்ட பலாலி மக்கள் தம்மை உடனடியாக சொந்த இடத்தில் குடியமர்த்துதவற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்திருக்கிறார்கள்.

இந்த விடயத்தில் உடனடியாக கவனம் செலுத்தப்படாவிட்டால் தாம் சாகும்வரை போராட்டத்தை மேற்கொள்ள வேண்டி ஏற்படும் எனவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

இதற்கு பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை குடியமர்த்த கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு உயர் நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வருகிறது.

அதன் தீர்ப்பு விரைவில் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம். அதன் பின்னர் என்ன நடவடிக்கை மேற்கொள்வது என முடிபு செய்யலாம் என்றார். (அ-2)

# வினாடிவினா போட்டியும் கணித நாடக போட்டியும்

(பூந்தோட்டம்)

வவுனியா வலய மட்ட கணித அறிவு வினாடிவினாப் போட்டியின் சிங்கள மொழி மூலப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு மூன்றுமுறிப்பு அரசினர் சிங்கள கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை விண்ணப்பித்த மாணவர்கள் போட்டியில் கலந்து கொள்ள வேண்டும். அத்துடன்வலய மட்ட கணித நாடகப் போட்டி எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தமிழ், சிங்கள மொழிமூலம் நடைபெறவுள்ள இந்நாடகப் போட்டி கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவுகளாக நடைபெறவுள்ளதாக வவுனியா தெற்கு வலய கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார். (அ-3-266)

# சமுதாயத்தில் ஒழுக்கமுள்ள பிரஜைகளை உருவாக்க கல்வி நிறுவனங்கள் உதவ வேண்டும்

## விநோ எம்.பி. சுட்டிக்காட்டு

(செட்டிகுளம்)

தற்காலத்தில் மாணவர்களுக்கு கல்வியை கற்பதற்கு சிறந்த சூழல் காணப்படுவதுடன் பல்கலைக்கழகத்திற்கும் அதிக மாணவர்கள் செல்லக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என வவுனியா நெளுக்குளம் லயா கல்லூரியின் ஆசிரியர் மாணவர்களை கௌரவிக்கும் விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய வன்னி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.விநோநோதராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் உரை நிகழ்த்துகையில், பாடசாலைகளில் மாணவர்கள் கற்பதை போன்று மேலதிக நேரங்களில் தனியார் கல்வி நிறுவனங்களிலும் கல்வியை தொடர்ந்து பல்கலைக்கழகத்திற்கு செல்லும் வாய்ப்பை அதிகரிக்க ஆசிரியர்கள் ஆற்றும் பணி அளப்பரியது. எதிர்கால சமுதாயம் சிறந்த ஒழுக்கமுள்ள பிரஜையாக மலர்வதற்கு கல்வி நிறுவனங்கள் சிறந்த சேவையினை செய்து வருகின்றமை வரவேற்கக் கூடியது எனவும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பான கட்சியின் நிலைப்பாடு அறிவிக்கப்படும்

## ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

உண்மையை கண்டறியும் ஆணைக்குழு அறிக்கை தொடர்பான தமது கூட்சியின் நிலைப்பாடு இன்றைய தினம் வெளியிடப்படும் என ஜாதிக ஹெல உறுமய கட்சி அறிவித்துள்ளது.

ஆணைக்குழு இறுதி அறிக்கை மற்றும் பரிந்துரைகள் தொடர்பில் கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படும் என கட்சியின் மேல் மாகாணசபை உறுப்பினர்கள் உதயகம்மன்பில தெரிவித்துள்ளார்.

785 பக்க அறிக்கையை முழுமையாக ஆராய வேண்டியதன் காரணமாக அரசாங்கம் விதித்த காலக்கெடுவிற்குள் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்த முடியவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் உண்மையை கண்டறியும் ஆணைக்குழு அறிக்கை தொடர்பான தங்களது நிலைப்பாட்டை வெளிப்படுத்துமாறு அரசாங்கம் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆணைக்குழுவின் முழுமையான அறிக்கை தொடர்பான விரிவான கருத்துக்களை வெளியிட காலதாமதம் ஆகக் கூடும் என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் பொதுவான நிலைப்பாட்டை நாளைய தினம் வெளியிட முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# தனி ஈழத்தை விரும்பாத குழுவே இலங்கைக்கு விஜயம் செய்தது

## தொல்.திருமாவளவன் தெரிவிப்பு

இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்கு தனி ஈழத்தை பெற்றுக் கொடுக்க விரும்பாத இந்த விடயத்தில் தமிழர்களுடன் உடன்படாத இந்திய நாடாளுமன்ற குழுவொன்றே இலங்கைக்கான விஜயத்தினை மேற்கொண்டு திரும்பியுள்ளது என்று விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துரைக்கையில், இலங்கை தமிழர்கள் தொடர்பில் கண்டறிவதற்காக இலங்கைக்கு சென்ற இந்திய நாடாளுமன்ற குழு சட்டரீதியான அதிகாரம் இன்றியே இலங்கைக்கான விஜயத்தினை மேற்கொண்டு திரும்பியுள்ளது. இந்த அவர்களது அந்த பயணம் பயனற்ற பயணமாகவே அமைந்துவிட்டது.

இன்றைய சூழ்நிலையில் இந்திய அரசு இலங்கையில் கலாசார சீரழிவுகளை தடுத்து நிறுத்த வேண்டும். இலங்கை இராணுவத்தின் அத்துமீறல்களை தடுக்க வேண்டும். தமிழர் பகுதியிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். இந்திய அரசு உடனடியாக இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று அவர் மேலும் கூறினார். (அ-2)

# சிகரெட் பக்கெற்றை விடவும் உரத்தின் விலை குறைவு!

## ஜனாதிபதி கூறுகிறார்

(கொழும்பு)

சிகரெட் பக்கெற்றை விடவும் ஒரு மூடை உரத்தின் விலை குறைவானது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

7ஆயிரம் ரூபா பெறுமதியான ஒரு மூடை உரத்தை அரசாங்கம் 350 ரூபா என்ற சலுகை விலையில் விவசாயிகளுக்கு வழங்கி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

நெல் உற்பத்தியில் நாடு தன்னிறைவு அடைந்துள்ளது.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய அளவில் நாட்டில் நெல் களஞ்சியப் படுத்தப்பட்டுள்ளது.

உலகில் பால்மா பயன்பாடு வீழ்ச்சியடைந்துள்ளது. திரவப் பாலின் பயன்பாட்டை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

உலக சந்தையில் எரிபொருட்களின் விலை உயர்வடைந்த போதிலும் நாட்டில் எரிபொருள் விலைகள் உயர்த்தப்படவில்லை என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (அ-2)





இலங்கை வங்கி மானிப்பாய் கிளையில் கணக்கு வைத்திருக்கும் சிறார்களுக்கான பிறந்த நாள் பரிசுத்திட்ட பரிசாக செல்வி டனோஜனா இராஜகோபாலுக்கு துவிச்சக்கரவண்டியையும் 18+ வைத்திருக்கும் திருமதி தக்சாயினிக்கு திருமணப்பரிசாக தங்க நாணயத்தையும் மானிப்பாய்கிளைமுகாமையாளர்ஜிசகாதேவன் வழங்குவதனை படங்களில் காணலாம்.

# சங்கிலி அபகரிப்பு

துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த பெண்ணின் தங்கச் சங்கிலியை பின்னால் மோட்டார் சைக்கிளில் வந்த திருடன் அறுத்துச் சென்றுள்ளளான். இச்சம்பவம் நேற்றுக்காலை 8.15 மணியளவில் கோவில் வீதியில் இடம்பெற்றுள்ளது.

ஆசிரியையான குறித்த பெண்ணும் இன்னொரு பெண்ணும் பாடசாலைக்கு சென்று கொண்டிருக்கும் போது குறித்த பகுதியில் மோட்டார் சைக்கிளில் திருடன். இருவரினையும் பின் தொடர்ந்து தங்கச் சங்கிலியை அறுத்துக்சென்றுள்ளான். இச் சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸில் முறையிடப்பட்டுள்ளதோடு அறுத்துச் செல்லப்பட்டதாக கூறப்படும் தங்கச் சங்கிலி இரண்டு இலட்சம் ரூபா பெறுமதி உடையது எனவும் பாதிக்கப்பட்டவர்களால் தெரிவிக்கப்படுகிறது. (அ-4)

# ஈரானிடமிருந்து எண்ணெய் இறக்குமதி செய்யாதீர்!



ஈரானின் அணுசக்தி திட்டங்கள் குறித்து சந்தேகம் கொண்டுள்ள அமெரிக்கா, உலக அரங்கில் அந்நாட்டைத் தனிமைப்படுத்தும் முயற்சியில் தீவிரமாக இறங்கியிருந்தது. ஈரானிடம் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடுகளிடம் பேசி இறக்குமதியைக் குறைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவில் ஹிலாரி வலியுறுத்து

(கொல்கத்தா)

**ஈரானிடமிருந்து அதிகளவில் எண்ணெய் இறக்குமதி செய்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று இந்தியாவிற்கு வந்த ஹிலாரி கிளின்டன் கூறியுள்ளார். ஆசிய நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ள அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கொல்கத்தாவின் கிழக்கு பகுதியில் உள்ள டவுன் ஹாலில் நடைபெற்ற கூட்டத்தில் இதனை தெரிவித்துள்ளார்.**

இந்நிலையில் இந்தியாவிற்கு வந்த ஹிலாரி இந்தியா, சீனா மற்றும் துருக்கி நாடுகள் ஈரானிடம் இருந்து இறக்குமதி செய்யும் எண்ணெயின் அளவைக் குறைத்துக் கொள்ளும்படி மிகவும் அழுத்தமாக வெளிப்படையாக அமெரிக்கா கோரியதை நினைவுபடுத்தினார்.

இந்தியா அதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருவது மகிழ்ச்சி அளிப்பதாகவும் இருப்பினும் இந்தியா ஈரானிடமிருந்து முழுமையாக எண்ணெய் இறக்குமதியை நிறுத்த முயற்சிக்க வேண்டும் என அமெரிக்கா எதிர்பார்ப்பதாகவும் கூறினார். மேலும் அந்நிய முதலீடு பற்றி என்ன முடிவு எடுக்கப்படும் என்று எதிர்பார்ப்புகள் மேலோங்கிய வண்ணம் இருக்கின்றன.

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் மூன்று நாட்கள் சுற்றுப் பயணமாக இந்தியா வந்தார். மூன்று ஆசிய நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஹிலாரி வங்கதேசம் வழியாக கொல்கத்தா விமான நிலையத்தில் வந்து இறங்கினார். (அ-2)

# பெட்டி பெட்டியாக நகைகள், கட்டுக்கட்டாக பணம்

## மதுரை ஆதீனத்தில் பறிமுதல்!

### நித்தியானந்தாவுக்கு விழுந்த முதல் அடி!

மதுரை ஆதீனத்திலிருந்து மூன்று பெட்டிகள் நிறைய தங்க நகைகள் மற்றும் கிரீடங்களையும் கட்டுக்கட்டாக பணத்தையும் பறிமுதல் செய்தனர் வருமான வரித்துறை அதிகாரிகள். இவை கணக்கில் வராதவை என்பதால் உரிய விளக்கம் அளிக்குமாறு ஆதீனத்துக்கு அதிகாரிகள் உத்தரவிட்டனர்.

இந்த நிலையில் மதுரை ஆதீனத்தின் செயற்பாடுகள் கடும் விமர்சனங்களைக் கிளப்பின. இந்த ஆதீனத்துக்கு எதிராக தமிழகத்தில் மிச்சமிருக்கும் 17 ஆதீனங்களும் கிளம்பின . நித்தியானந்தாவை நீக்கக்கோரி நீதிமன்றங்களில் வழக்குகள் நடக்கின்றன.

ஆதீனத்தை அரசே கையகப்படுத்தி நிர்வகிக்க வேண்டும் என்றும் கோரிக்கைகள் எழுந்துள்ளன. புகார்கள் வந்தால் அவ்வாறே செய்யப்படும் என அரசு வழக்கறிஞரும் மதுரை நீதிமன்றத்தில் கூறினார்.

இந்தப் பின்னணியில் நேற்றுக் காலை 8. மணி முதல் மதுரை ஆதீன மடத்தில் வருமான வரித்துறை அதிகாரிகள் அதிரடி சோதனை மேற்கொண்டனர். இந்த சோதனைக்கு மதுரை ஆதீனம் அருணகிரி முழு ஒத்துழைப்பு அளித்தார். மடத்தின் பல அறைகளிலும் சோதனை நடத்தியதில் ஏராளமான தங்க, வைர நகைகள் , கிரீடங்கள், செங்கோல்களை எடுத்தனர் அதிகாரிகள்.

இதேவேளை, எம்மீது அவதூறு பரப்பினால் மானநஷ்ட ஈடு வழக்கு தொடருவேன் என்று பட்டாபிஷேக விழாவில் நித்தியானந்தா தெரிவித்தார்.

மதுரை ஆதீனத்தின் 293 ஆவது இளைய ஆதீனமாக நித்தியானந்தாவை மதுரை ஆதீனம் அருணகிரிநாதர் அறிவித்தார். இதையடுத்து நித்தியானந்தா இளைய ஆதீனமாக பெங்களூரில் பொறுப்பேற்றார். திருவண்ணாமலை கிரிவலப்பாதையில் உள்ள ஆசிரமத்தில் நித்தியானந்தாவிற்கு பட்டாபிஷேக விழா கடந்த 5 ஆம் திகதி இரவு சித்திரா பௌர்ணமியில் நடந்தது.

அதன்பின் நித்தியானந்தா கருத்துத் தெரிவிக்கையில், எனக்கு எதிராக பல ஆதீனங்கள் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்துள்ளனர். கொலை கைதியிடம் கூட விசாரணை செய்வார்கள். ஆனால், என்னிடம் எதுவும் கேட்காமல் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்துள்ளனர். இப்போது கூட என்னை அழைத்து விளக்கம் கேட்டால் கண்டிப்பாக சொல்வேன். என்மீது தொடர்ந்து அவதூறு பரப்பினால் மானநஷ்ட ஈடு வழக்கு தொடருவேன் என்றார். (அ-2)



அமெரிக்க ஐக்கிய செயலாளர் ஹிலாரி கிளின்டன் வங்கதேச சுற்றுப்பயணத்தில் நோபல் பரிசு பெற்ற முகமது யூனிசைச் (இடது) சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

## அரசின் திட்டப்படிதான் எனது பயணம் அமைந்தது

### ஜனாதிபதி பிரதீபா பட்டேல்


இந்தியாவின் புகழையும் பெருமையினையும் சர்வதேச அளவில் வெளிப்படுத்தும் விதமாகத்தான் நான் வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்டேன். என்னுடைய பயணம் அரசு திட்டப்படிதான் உள்ளது என ஜனாதிபதி பிரதீபா பட்டேல் கூறினார்.

டி.வி.சனல் ஒன்றிற்கு ஜனாதிபதி பிரதீபா பட்டேல் அளித்த பேட்டி என்னுடைய ஐம்பது வருட பொதுவாழ்க்கையில் ஒரு எம்.எல்.ஏவாக, ஒரு அமைச்சராக , மாநில ஆளுநராக, தற்போது ஜனாதிபதியாக பொறுப்பேற்று இந்திய மக்களுக்காக என்னால் முடிந்த சேவை செய்துவிட்டேன். இந்தியாவின் புகழை சர்வதேச அளவில் வெளிப்படுத்தவும் வர்த்தக உறவுகளை மேம்படுத்தவே நான் வெளிநாட்டு பயணம் மேற்கொண்டேன். அதுவும் எனது பயணம் அரசின் திட்டப்படி தான். இதில் எனது தனிப்பட்ட பயணம் எதுவும் இல்லை என்றார். (அ-2)




# அதிநவீன தற்காப்பு கவச ஏவுகணை தயாரானது

(புதுடில்லி)



அதிநவீன தற்காப்பு கவச ஏவுகணையை இந்தியா தயாரித்துள்ளது. இரண்டு நகரங்களில் இதை விரைவில் நிறுவவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் இரண்டு நகரங்கள், அந்நிய நாட்டினர் ஏவுகணை தாக்குதலில் இருந்து தப்பிக்கவுள்ளன.

எதிரி நாட்டில் இருந்து ஏவப்படும் ஏவுகணைகளை தடுக்கும் வகையிலான தற்காப்பு கவச ஏவுகணையை மத்திய இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (டி.ஆர்.டி.ஓ.) தயாரித்துள்ளது. இதன் சோதனை வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கழகத் தலைவர் வி.கே.சரஸ்வத் கூறியதாவது, ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்தில் இருந்து ஏவப்படும் ஏவுகணையை தாக்கி அழிக்கும் தற்காப்பு கவசத்தின் சோதனை வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளது. எதிர்வரும் 2016 இல் இது 5 ஆயிரம் கி.மீ.தூரத்தில் இருந்து ஏவப்படும் ஏவுகணையை தாக்கி அழிக்கக்கூடிய வகையில் மேம்படுத்தப்படும். மிக விரைவில் நாட்டின் இரண்டு இடங்களில் இது நிறுவப்படும். அந்த இரண்டு நகரங்கள் எவை என இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இதற்கான கட்டமைப்பு வசதிகள் எங்கு உள்ளதோ அந்த நகரங்களில் இது நிறுவப்படும். பிரித்வி ஏவுகணைகளை ஏவி அது இலக்கை அடையும் முன் அழிக்கிறதா என்ற முறையில் பரிசோதித்து பார்க்கப்பட்டது.சோதனை வெற்றிகரமாக நடந்துள்ளதன் மூலம் இதுபோன்ற ஏவுகணை தற்காப்பு கவசத்தை வைத்திருக்கும் ஏவுகணை தொழில்நுட்பத்தில் தலை சிறந்த நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இணைந்துள்ளது என அவர் கூறியுள்ளார். (அ-2)

# யாழ்ப்பாணத்தில் செஞ்சிலுவைச் சங்கம்

## மனிதாபிமான சேவையின் 75 ஆவது ஆண்டு நிறைவு

உலக செஞ்சிலுவை சங்க தினம் இன்று உலகமெங்கினும் கொண்டாடப்படுகிறது. 1863 இல் ஜீன் ஹென்றி டுனாற் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இலங்கையில் 1936 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1958 இல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட இச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மாணவர் பிரிவு யாழ்.பரியோவன் கல்லூரியும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியும் பல்வேறுபட்ட சமூக சேவையினை செய்து வந்தது. 1988 வரை யாழ். மாவட்டத்தில் செயற்பட்டு வந்த அச் செஞ்சிலுவைச் சங்கம் வட மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலும் செஞ்சிலுவைச் சங்க செயற்பாட்டினை யாழ்.மாவட்டமே செய்து வந்தது.

நடந்து முடிந்த யுத்தகாலத்தில் இடம்பெற்ற அனர்த்தங்களும் காணாமல்போதல் சம்பவங்கள் மற்றும் சுனாமி, நிஷா அனர்தங்களின்போது யாழ்.கிளை சர்வதேச செஞ்சிலுவைக் குழுவும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க தலைமையகமும் சேர்ந்து மக்களுக்கு மிக உன்னதமான உதவிகளை செய்து அதிகமானோரின் நலன்களை காப்பாறியிருந்தது. போர் காலத்திலும் தங்கள் சொந்த வீடு வாசல் ஆகியவற்றை இழந்த மக்களுக்கு அரிசி மா, சீனி, பருப்பு, உடை, மருந்து, சமையல் பாத்திரங்கள், கல்விக்கான உபகரணங்கள் ஆகியவற்றை கொடுத்துதவியது.

**நடமாடும் மருத்துவ சேவை**

மருந்து வசதி இல்லாத இடங்களுக்கு வடமாகாண சுகாதார பணிப்பாளர் பரிந்துரையை ஏற்று தீவுகளில் 05 இடங்களில் நடமாடும் மருத்துவ சேவை யாழ்.கிளையினால் நடத்தப்பட்டது.

இத்துடன் நலன்புரி நிலையங்களில் முதலுவியும் ஆரம்ப சுகாதார முறைமைகளையும் எயிட்ஸ் நோயினைத் தடுக்கும் வழி முறைகளையும் மக்கள் கூடியிருக்கும் நிலையில் செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளைத் தொண்டர்கள் மூலமாக விழிப்புணர்வு நடத்தப்பட்டது.

மேலும் இந்நிலையில் கொழும்புத் தலைமையகத்தில் கிளைக்கு அனுப்பப்பட்ட நிவாரணங்களை மக்களுக்கு பிரிவுகள் மூலமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுக்கப்பட்டன.

### சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தினம் இன்று

**யாழ்.கிளை மக்களுக்குச் செய்யும் தொண்டுகள்:-**

**நடமாடும் வைத்திய சேவை-** இடம் பெயர்ந்து மக்கள் பல இடங்களில் வாழும் போதும் நடமாடும் மருத்துவ சேவை நடத்தப்பட்டு வந்தன. இப்போதும் நடமாடும் மருத்துவ சேவை நடத்தப்பட்டு வருகிறது.

போரினாலும் சுனாமியினாலும் பாதிக்கப்பட்டவருக்கு வீட்டுத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வடமராட்சியில் 2 ஆயிரம் வீடுகளும் மற்றும் மருதங்கேணியில் 400 வீடுகளும் காரைநகரில் 75 வீடுகளும் கட்டப்பட்டு வருகின்றன்.

**மருத்துவ சேவை-** சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையிலும் வல்வெட்டித்துறை வைத்தியசாலையிலும் பல புதிய கட்டடங்கள் இதன் அனுசரணை மூலம் அமைக்கப்பட்டது.

**அம்புலன்ஸ் சேவை-** போர் காலத்தில் அவசரகால நிலையில் இரவு நேரத்தில் ஒரு வாகனமும் ஓடாத நிலையில் பொது மக்களுக்கு உதவி செய்யும் பொருட்டு இச் சேவை நடத்தப்பட்டு வந்தது. கொழும்பு வைத்தியசாலைக்கு நோயாளர்களை அம்புலன்ஸ் மூலமாகக் கொண்டு செல்லல், இறந்தவர்களின் உடலை உரிய இடங்களுக்குக் கொண்டு செல்லல் போன்றவற்றுக் கும் எமது சங்கம் உதவி செய்கின்றது.

**இடம்பெயர்ந்தோருக்கான சேவை-** அனர்த்தங்களின் போதும் இடம்பெயர்ந்த பொழுதும் எமது சங்கம் தனது சேவை யினை போர்ச் சூழலில் மேற்கொண்டது.

**முதலுதவிச் சேவை** இது தொடர்பில் அவுஸ்திரேலியாவின் Red Cross தொடக்கி வைத்து தொடர்ந்து செய்த சேவைகள் கணக்கில் அடங்காதவை. 15 பிரிவு களிலும் இரு தடவை 25 தொண்டர்களுக்கு பயிற்சி அளித்தமை, வேறு பல பயிற்சிகள் நடத்தியமை, ஆலய திருவிழாக்களில் நடத்தப்பட்ட விழா வின் போது வழங்கப்பட்ட சேவைகள் பலவாறாக நடத்தப் பட்டன.

**EMT- Technology** தொடர்பாக மக்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

**எயிட்ஸ் கிருமி தொற்று நோய்களைத் தடுத்தல், சிக்குன்குனியா** போன்றவற்றிக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தியது.

**ஆரம்ப சுகாதார சேவை** இது தீவுப் பகுதி களிலும் நலன்புரி நிலையங்களிலும் அதிகமாக மேற்கொள்ளப்பட்டன.

**குடி நீர்-** இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யுனிசெவ் நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளும் குடிநீர்த்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

**அங்கர் பால்மா, இரத்ததானம் வழங்கியமை, போதனா வைத்தியசாலையில் வர்ணம் தீட்டுதல்** போன்ற சேவை களையும் மேற்கொண்டது.

**காணாமற் போனவரைத் தேடிக் கண்டு பிடித்தல்-** போர்க்காலங்களிலும் சுனாமி காலத்திலும் காணாமல் போனவர்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து கண்டுபிடிக்கும் உன்னதமான செயற்பாட்டையும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை மேற்கொண்டு வருகின்றது.

**கு.பாலகிருஸ்ணன், J.P.,**
**கௌரவ செயலாளர்,**
**இ. செஞ்சிலுவைச் சங்கம்,**
**யாழ்.கிளை.**

## வைத்தியரிடம் பணம் கொள்ளையிட்ட மூன்று பொலிஸார் கைது செய்யப்பட்டனர்

(கொழும்பு)

வைத்தியர் ஒருவரிடம் பணம் கொள்ளையிட்ட மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மிரிஹான பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விசேட நிபுணத்துவ வைத்தியர் ஒருவரிடம் இவ்வாறு பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது. மோட்டார் காரில் வீடு நோக்கி பயணம் செய்து கொண்டிருந்த குறித்த வைத்தியரிடமிருந்து மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களும் 8 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்டுள்ளனர்.

குறித்த வைத்தியரையும் சக பயணியையும் கொலை செய்யப் போவதக அச்சுறுத்தி பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணத்தைக் கொள்ளையிட்டுள்ளனர். பொலநறுவை, ஆனமடுவ மற்றும் பலங்கொட ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்களே இவ்வாறு கொலை மிரட்டல் விடுத்து பணம் கொள்ளையிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் அடையாள அணி வகுப்பில் நிறுத்தப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்க விழா

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளை உலக செஞ்சிலுவை தின விழாவினை காலை, மாலை நிகழ்வுகள் என இரு பிரிவுகளாக இன்று செவ்வாய்க்கிழமை நடத்தவுள்ளதாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையின் தலைவர் வி.கே. கணேசலிங்கம் அறிவித்துள்ளார்.

சர்வதேச செஞ்சிலுவை, செம்பிறைச் சங்க இணையத்துடனும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறைப் பிரிவினருடனும் இணைந்து காலை நிகழ்வாக தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், தம்பசெட்டி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை, கற்கோவளம் மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை, பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் செஞ்சிலுவைத் தினம் தொடர்பான பரப்புரைகள் நடைபெறவுள்ளன.

அன்றைய மாலை நிகழ்வாக பருத்தித்துறை புனித தோமையர் ஆலய அரங்கில் உலக செஞ்சிலுவை தினம் 2012 தொடர்பான பொதுக்கூட்டமும் தொண்டர்களின் நாடகம், பாட்டு, பேச்சு என்பனவும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-9)

## அரசாங்கத்தின் பொருளாதார கொள்கைகள் மிக மோசமானவை

### சஜித் தெரிவிப்பு



அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள் மிகவும் மோசமானவை என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினை தொடர்ந்தும் ஏற்றுக்கொள்வதா அல்லது ஆட்சி மாற்றம் நோக்கி செல்வதா என்பதனை மக்கள் விரைவில் தீர்மானிக்க வேண்டும். வறிய மக்கள் தொடர்ச்சியாக வறுமையில் வாட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையே நாட்டில் காணப்படுகின்றது.

அரசாங்கம் பிரசாரம் செய்வதனைப் போன்று நாட்டில் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டிருந்தால் நாட்டு மக்கள் வறுமையில் வாட வேண்டிய அவசியமில்லை.

இலங்கையில் வரி அறவீட்டு முறைமையில் வெளிப்படைத் தன்மை கிடையாது. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் மக்கள் வாழ்வதனை விடவும் சாவதே மேல் என எண்ணத் தொடங்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## விசாரணைகள் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்திலும் யாழ்.நீதவான் நீதிமன்றத்திலும் நேற்று திங்கட்கிழமை நடைபெறவிருந்த வழக்குகள் யாவும் எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறும் என்பதனை யாழ். மாவட்ட நீதிமன்ற யாழ். நீதவான் நீதிமன்ற பதிவாளர்கள் அறிவித்துள்ளனர். (அ-4)

# பசுக்கன்றை காப்பாற்ற முற்பட்ட யுவதி கடுகதி புகையிரதத்தில் மோதுண்டு பலி

வவுனியாவிலிருந்து கொழும்புகோட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்த கடுகதி ரயில் மீது மோதி யுவதியொருவர் பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை மாலை 4.30 மணியளவில் பண்டாரபுளியங்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் 19 வயதுடைய தில்ஹானி மஹேசிகா எனப்படும் பண்டாரபுளியங்குளம் பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட யுவதியே உயிரிழந்துள்ளார்.

சம்பவ தினத்தன்று ரயில் வீதியில் நின்று கொண்டிருந்த பசுக்கன்று ஒன்றினை காப்பாற்றுவதற்கு முற்பட்ட வேளையிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# சீனாவை எதிர்க்கும் நோக்கில் இலங்கையை எதிர்க்கும் வல்லரசுகள்

(கொழும்பு)

அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து சீனாவை பழிவாங்கும் வகையில் இலங்கை விடயத்தில் தலையிடுகின்றன என பாரிசை தலைமையகமாகக் கொண்ட ஜனநாயக மற்றும் ஒத்துழைப்புக்கான கற்கை நிலை யத்தின் பணிப்பாளர் ஜோன்லால் லேண்ட் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த இரண்டு நாடுகளும் இலங்கையின் உள்நாட்டு விடயங்களில் தலையிடுவதாக கருத்தரங்கு ஒன்றின் போது அவர் குறிப்பிட் டுள்ளார்.

ஜெனீவாவில் இலங்கைக்கு எதி ராக மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் குறிப்பாக புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு மேலும் உற் சாகத்தை கொடுக்கும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கை போன்ற நாடுகளில் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரசன்னத்தை குறைக்க வேண்டும். இதுநாட்டுக்கு நன் மையை பயக்கும். குறிப்பாக சர்வதேச மன் னிப்புச் சபை கனேடிய தமிழர்களிடம் இரு ந்து நிதியை பெற்றுக் கொண் டது.

இதனையடுத்து அது ஜெனீவா வில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக கருத்துக் களை முன்வைக்கிறது. இதன்போது எவ்வாறு அரச சார்பற்ற நிறுவனங்களின் மீது நம்பிக்கை கொள்ள முடியும் என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (அ-2)

# ஈழத்தில் என்ன தீர்வு வேண்டும் என்பதை தமிழர்களே தீர்மானிக்க வேண்டும்

## தா.பண்டியன் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை நட்பு நாடா என்பதை இந்திய அரசு மறுபரிசீலணை செய்ய வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் தா. பாண்டியன் தெரிவித்துள்ளார்.

கம்யூனிஸ்ட் தியாகிகள் வாட்டாக்குடி இரணியன், ஜாம்புவானோடை சிவராமன், ஆம்பலாப்பட்டு ஆறுமுகம் ஆகியோரின் நினைவு தின பொதுக்கூட்டம் பட்டுக்கோட்டை தலைமை அஞ்சலகம் அருகில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் ,

மூன்று ஆண்டுகளாக முள்வேலி முகாம்களில் இருக்கும் தமிழர்களை சொந்த இடங்களுக்கு அனுப்ப இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்திய அரசு இலங்கை அரசை நட்புக்குரிய நாடா என்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஈழத்தில் எத்தகைய ஆட்சி வேண்டும் என்பதை ஈழ மக்கள் தான் முடிவு செய்ய வேண்டும்.

புதுக்கோட்டை இடைத்தேர்தலில் போட்டியிடுவது இல்லை என்று கட்சி முடிவு செய்திருக்கிறது. அ.தி.மு.கவில் இலவச ஆடு கொடுப்போம், மாடு கொடுப்போம் என்று சொல்லி வாக்கு கேட்கிறார்கள். அதுபோல் எங்களால் வாக்கு கேட்க முடியுமா? பயம் கருதி தேர்தலை புறக்கணிக்கவில்லை. அவமதிப்பிற்கு ஆளாக கூடாது என்று கருதித்தான் புறக்கணிக்கிறோம். தேர்தல் முறையில் மாற்றம் கொண்டு வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# உணவு ஒவ்வாமை; 40 பேருக்கு சுகவீனம்

(கொழும்பு)

மஹியங்கனை 18 வளைவு வீதி திறப்பு விழாவில் கலந்துகொண்டவர்களுக்கு வழங்கப்பட்ட உணவில் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக சுமார் 40 பேர் திடீர் சுகவீனமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உணவு ஒவ்வாமை காரணமாக இவர்களுக்கு வாந்தி, வயிற்றோட்டம், தலைவலி போன்ற அறிகுறிகள் காணப்பட்டதாக உடதும்பர பொது சுகாதார வைத்திய அதிகாரி ஏ.அபேசேகர தெரிவித்துள்ளார்.

உடதும்பர மற்றும் மெதமஹாநுவர வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களில் சுமார் 30 பேர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வின் போது கலந்து கொண்டவர்களுக்கு ஒப்பந்தக்காரர் ஒருவரால் பகல் வேளை உணவு விநியோகிக்கப்பட்டதாக உடதும்பர பொது சுகாதார வைத்திய அதிகாரி ஏ.அபேசேகர தெரிவித்தார். (அ-2)



ஜனாதிபதி அலுவலகமும் ஹுனுப்பிட்டிய கங்கராம விகாரையும் இணைந்து வருடம் தோறும் நடத்தும் ரஷ்மி தேசிய வெசாக் வலயம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க, அமைச்சர்கள் , நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பெருமளவானோர் கலந்துகொண்டுள்ளதை படத்தில் காணலாம்.

# வேலைதருவதாக கூறி பெண்களை தவறான வழியில் பயன்படுத்துவது கண்டிக்கத்தக்கது

## யோகேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

மட்டக்களப்பில் பெண்களை ஆடைத் தொழிற்சாலையில் வேலை தருவதாக கூறி அழைத்து செல்பவர்கள் தவறான வழிகளுக்கு பயன்படுத்தும் செயற்பாடுகள் வேதனையளிப்பதாக உள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி சமூக நல ன்புரி அமைப்பு நடத்திய லண்டன் கற்பக விநாயகர் ஆலயத்தின் மூலமாக ஆடைத் தொழிலகம் ஆரம்ப விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட கொடிய யுத்தம், சுனாமி போன்றவற்றால் தமது வாழ் வாதாரத்தை கட்டியெழுப்ப முடியாத நிலை யிலும் சவுதி போன்ற கீழைத்தேய நாடுகளில் வீட்டுப்பணி பெண்ணாகவும் எமது மாவட்டம் தவிர்ந்த வேறு மாவட்டங்களுக்கு ஆடைத் தொழிற்சாலைகளில் வேலைக்கும் செல்கின்றனர்.

அங்கு குறைந்த ஊதியம் வழங்கப்பட்டு கடுமையான வேலைகளுக்கு உட்படுத்தப் படுகின்றனர். அதுமட்டுமன்றி ஆடைத் தொழிற்சாலைகளில் வேலைதருவதாக சிலர் வறிய பிரதேசங்களில் இருந்து சிலரை அழைத்து சென்று எங்களது மகளிரை தவறான வழிகளுக்கு பயன்படுத்தும் சில செயற்பாடுகளும் எங்கள் கவனத்துக்கு வந்துள்ளது.

இச்செயற்பாடுகளை அனுமதிக்க முடி யாது. இவ்விடயமாக உடனடியாக நடவடி க்கை எடுக்க வேண்டிய கடமையில் உள்ளோம் .இந்த வகையில் இங்கு ஒரு ஆடைத் தொழிலகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றார். (அ-2)


மலேரியா அற்ற இலங்கை - 2014

மலேரியா விழிப்புணர்வு நடைப்பேரணி

11.05.2012 காலை 9.30 மணி

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்பாணம்.

செய்தி

காய்ச்சல் ஏற்பட்டால் மலேரியாவிற்கான குருதி
பரிசோதனை செய்து கொள்வோம்.

மலேரியா விழிப்புணர்வு கண்காட்சி

11.05.2012 காலை 10.30 மணி யா/இந்துக் கல்லூரி

எல்லாச் சமயங்களுக்கும் நோக்கம் ஒன்று தான். விலக்க முடியாததை ஏற்றுக் கொள்ளச் செய்வதே அந்த நோக்கம். -கதே

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# அந்தணச் சிவாச்சாரியர்களே நீசம் நீங்க பேரணி நடத்துங்கள்

மரியாதைக்குரிய அந்தணச் சிவாச்சாரியர்களுக்கு முதற்கண் தலை வணங்குகின்றோம்.

வர்ணாச்சிரம தர்மத்தின் வக்கிரங்கள் உங்களையும் மானிட சமூகத்தையும் பிரித்தே நிற்கின்றன.

நீங்கள் உண்பதை மற்றவர்கள் பார்ப்பது பாவம் என்று பட்டோலை எழுதிய பின், உங்களுடனான சமூக உறவு வலுவடையும் என்பது பற்றி எவரும் சிந்திக்க முடியாது என்பது நிஜமே.

இதுபற்றியெல்லாம் நாம் விவாதிக்க விரும்பவில்லை.

ஆனால் ஆலயங்களின் பிரதம சிவாச்சாரியர்களாக – இந்து சமயத்தின் தலைவர்களாக இருக்கக் கூடிய நீங்கள் ஆலயங்களில் நடைபெறும் திருட்டுக்கள் குறித்தோ வாகனங்களின் தலைகள் அறுக்கப்படுவது பற்றியோ இதுவரை எதுவும் பேசாதிருப்பது ஆச்சரியமான உண்மையே.

நாங்கள் வேதம் ஓதுபவர்கள். அதுவே எங்கள் பணி. ஆலயங்களில் நடைபெறும் திருட்டுக்கள், களவுகள், நாச காரியங்கள் அனைத்தையும் கண்டிப்பதும் தடுப்பதும் ஆலய அறங்காவலர்களின் கடமை என்று நீங்கள் கருதுகிறீர்களோ என்று கூட எண்ணத் தோன்றுகின்றது.

இந்த எண்ணம் உங்களிடம் இருக்குமாயின் அந்தணச் சிவாச்சாரியர்கள், அவர்களுக்கான மதிப்பு மரியாதைகள், ஆலய பூசைகள் என்பன நீண்டகாலத்திற்கு இந்த மண்ணில் நிலைபேறுடையாதென்பது நிறுதிட்டமான உண்மை.

இந்து சமயம் அர்த்தமுள்ள தெய்வீக சக்தி மிக்க சமயம் என்பதில் மாறுபட்ட கருத்திற்கிடமில்லை.

ஆனால் இன்று எத்தனையோ இந்து ஆலயங்களில் பெறுமதியான விக்கிரகங்கள் களவாடப்பட்டுள்ளன.

கடந்த சில மாதங்களுக்குள் இந்து ஆலயங்களில் உள்ள தேர்களில் இருக்கக் கூடிய குதிரை வாகனங்களின் தலைகள் அறுக்கப்பட்டுள்ளன.

இவையெல்லாம் வெறும் கற்பனைக் கதைகளோ சொப்பன நிகழ்வுகளோ இல்லை.

ஆனால் நீங்கள் இது பற்றி எதுவுமே பேசவில்லை.

ஆலயங்கள் என்பன எங்கள் பொருளாதார மடங்கள் என்று நீங்கள் நினைத்து அதன்படி நடந்து கொள்கிறீர்களோ என்று கூட எண்ணத் தோன்றுகின்றது.

ஆலயத் திருவிழாக்கள் முதல் மகா கும்பாபிஷேகங்கள் வரை கூடியிருந்து பேரம் பேசும் கொடுமை இருக்கும்வரை – கேட்ட கட்டணம் தந்தால் மட்டுமே கோபுரம் ஏறி கும்பநீர் ஊற்றுவோம் என்று அடம் பிடிக்கும் வரை இந்த மண்ணில் இந்து சமயம் உருப்படவே வாய்ப்பில்லை.

எதுவாயினும் உங்கள் பொருளாதார மடங்களாக விளங்கும் இந்து ஆலயங்கள் அழிக்கப்படும் இவ் வேளையிலாவது அந்தண சிவாச்சாரியர்கள் ஒன்றிணைந்து பேரணி நடத்துங்கள்.

இந்து சமயத்துக்கு நீசமானோர் நாசமாக வேதம் ஓதி யாகம் செய்யுங்கள்.

அப்போதுதான் உங்களுக்கான மதிப்பும் மரியாதையும் இங்கு ஓங்கும். இந்து சமயம் தழைக்கும். இது எங்கள் பணிவான கருத்து. ஏற்றிடுக.

# ஆட்சி மாற்றம் ஏற்படுவதால் தமிழர் உரிமை கிடைக்காது

## லெனின் கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவிப்பு

இன்றைய மகிந்த சிந்தனை ஆட்சி நீடிப்பதால் தமிழ், முஸ்லிம் , மலையகத்தமிழ் தேசிய இனங்களுக்கு விடிவு ஏற்படப்போவதில்லை. அதேபோன்று பெரும்பான்மையான சிங்கள உழைக்கும் மக்களுக்கும் எவ்வித பொருளாதார, அரசியல் விமோசனங்களும் கிடைக்கமாட்டாது. அதேவேளை ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் ஆட்கள் மாறுவார்களே தவிர இன்றைய பேரினவாத தரகு முதலாளித்துவ ஆட்சி அமைப்பே நீடித்துச் செல்லும் என புதிய ஜனநாயக மாக்சிச, லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் யாழ்.நகரில் கட்சியும் அதன் வெகுஜன அமைப்புக்களும் நடத்திய புரட்சிகர மேதினக் கூட்டத்தில் உரையாற்றும்போதே தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய இலங்கையின் பொருளாதார, அரசியல், சமூக நெருக்கடிகளுக்கு ஆட்சிமாற்றம் வந்துவிட்டால் யாவும் தீர்ந்துவிடும் என்ற பாராளுமன்ற வழிபாட்டுக்கருத்துக்கள் பரப்பப்படுகின்றன. அந்த ஆட்சி மாற்றம் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் மூலம் ஏற்பட வேண்டும் என்றும் கூறப்படுகிறது. அதன் அடிப்படையிலேயே யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை அழைத்து கூட்டு மேதினம் நடத்துகிறார்கள்.

தமிழ்த் தலைமைகள் எவ்வித கூச்சமும் வெட்கமும் இன்றி யாழ். நகரத்தையும் பொது நூலகத்தையும் எரித்து பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களைத் தமது பதினேழு வருட ஆட்சிக் காலத்தில் கொன்றழித்த ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து மேதினம் நடத்துகிறார்கள்.

முன்பும் இதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமையானது இறுதி யுத்தத்தை நடத்தி தமிழ் மக்களை அழித்த தளபதி சரத் பொன்சேகாவிற்கு வாக்களிக்கும்படி தமிழ் மக்களை கேட்டவர்கள். இவர்களது கூட்டு உழைக்கும் தமிழ், சிங்கள மக்களுக்கான ஐக்கியத்தை முன்வைத்த கூட்டு அல்ல. முற்றுமுழுதான தமிழ், சிங்கள மேட்டுக்குடி, உயர்வர்க்க, அந்நிய, ஏகாதிபத்திய சக்திகளுக்கான கூட்டேயாகும். இதனை நம்பித் தமிழ் மக்கள் ஏமாறுவார்களேயானால் மீண்டும் அழிவுகளையும் நாசங்களையும் தேடிக் கொள்ளவே முடியும்.

எனவே இன, மத, மொழி, பிரதேச உணர்வுகளைத் தூண்டி வெறித்தனமாக்கிக் கொள்வதன் மூலம் ஆளும் வர்க்கத்தினரும் அந்தந்த தேசிய இனம் மத்தியிலான ஆதிக்கப் பிற்போக்கு அரசியல் சக்திகளும் வாக்குப்பெட்டி பாராளுமன்ற சுகபோக அரசியலை இலகுவாகவே செய்து கொள்கிறார்கள்.

இவற்றை நாட்டின் அனைத்து தொழிலாளர்களும் விவசாயிகளும் உழைக்கும் வர்க்க மக்களும் உரியவாறு உணர்ந்து புதிய திசையில் வெகுஜன அரசியல் பாதையில் பயணிக்க முன்வரல் வேண்டும். இதுவே எமது கட்சியின் இன்றைய புரட்சிகர மேதின செய்தியாகும் என்றார். (அ-2)

# திருக்கேதீஸ்வரத்தில் புத்தர் சிலை இந்து சமயத்தை நோகடிக்கும் செயல்

## கலாநிதி ஆறு திருமுருகன் ஆதங்கம்

(யாழ்ப்பாணம்)

பத்தாயிரம் ஆண்டுகள் பழமையான திருக்கேதீஸ்வரத்தில் புத்தர் சிலையை நிறுவி ஒரு சமூகத்தின் வரலாற்றை அழிக்க நினைப்பது மிகப் பெரும் பாவச் செயல் என கலாநிதி ஆறு திருமுருகன் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் இந்து ஆலயங்களும் இந்து நிறுவனங்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகள், இடையூறுகள் தொடர்பாக ஆராயும் அவசர மாநாடு நேற்று அகில இலங்கை இந்து மாமன்றத்தின் இந்து ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் இந்து மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான திருக்கேதீஸ்வரத்தில் புத்தர் சிலையை அமைத்து இந்து மக்கள் மத்தியில் அச்ச நிலையை ஏற்படுத்தியுள்ளனர்.

இலங்கையில் உள்ள வரலாற்றுப் பெருமை கொண்ட பஞ்ச ஈஸ்வரங்கள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியவை.

கடந்த 30 ஆண்டுகாலமாக நகுலேஸ்வரத்தில் திருவிழா இடம்பெற்றதில்லை. இவ்வாறு பல இந்து ஆலயங்கள் இந்த நாட்டில் முடக்கப்பட்டுள்ளன. அத்தோடு இந்து ஆலயங்களை மையப்படுத்திய திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

வரலாற்றுப் பெருமை கொண்ட இந்து ஆலயங்களில் தெய்வ விக்கிரகங்கள், தங்க ஆபரணங்கள, பித்தளை, வெள்ளிப் பாத்திரங்கள் மற்றும் ஆபரணங்கள், தெய்வங்களை வைத்து சுமந்து செல்லும் வாகனங்கள், தேர்களில் உள்ள சிற்பங்கள் என வரலாற்றுப் பெருமை கொண்ட மதிப்பிட முடியாத பெறுமதி கொண்ட ஆலய சொத்துக்கள் திருடப்பட்டுள்ளன.

இந்து ஆலயங்களில் இடம்பெறும் திருட்டுக்களைத் தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். யுத்தம் காரணமாக உயர் பாதுகாப்பு வலயங்களாக மாற்றப்பட்ட பகுதிகளில் உள்ள இந்து ஆலயங்களின் சொத்துக்கள் முழுமையாக சூறையாடப்பட்டு வெறும் கட்டிடங்கள் மட்டுமே உள்ளன.

மாவிட்டபுரம், பலாலி, வன்னியில் பல கோவில்கள் என பட்டியல்படுத்திக் கொண்டே போகலாம். இது இவ்வாறு இருக்கையில் வன்னி பெருநிலப்பரப்பிலும், யாழ்ப்பாணத்திலும் இந்து ஆலயங்களை ஆக்கிரமித்து புத்தர் சிலைகள் நிறுவப்பட்டு வருகின்றன. இவற்றைத் தடுக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

யுத்தத்தால் வன்னி பெருநிலப்பரப்பில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்து ஆலயங்கள் அழிந்து போயின. அந்த ஆலயங்களை மீளவும் புனரமைப்புச் செய்வதற்கு எந்தவித நஷ்டஈடுகளும் வழங்கப்படவில்லை. ஆனால் இந்து ஆலயங்கள் இருந்த இடங்களை அண்மித்த பகுதிகளில் புதிதாக பௌத்த விகாரைகளையும் புத்தர் சிலைகளையும் நிறுவி வருகின்றனர்.

இந்து மக்கள் பிற சமயங்களுக்கு எதிரானவர்கள் அல்ல என்பதையும் ஒரு சமூகத்தின் வரலாற்றை அழிக்க நினைப்பது மிகவும் பாவமான செயல் என்பதையும் இந்த இடத்தில் கூற விரும்புகின்றேன்.

யுத்த காலத்தில் மிகவும் பிரமாண்டமாக கோணேஸ்வரர் ஆலயச் சூழலில் புத்த விகாரை அமைக்கப்பட்டுள்ளது. அத்தோடு கோணேஸ்வரர் மடத்தையும் கடற்படையே தொடர்ந்து ஆக்கிரமித்து வருகின்றது.

இவ்வாறு இந்து மதம் தொடர்ந்து ஆக்கிரமிக்கப்பட்டு வருவது தொடர்பாக அகில இலங்கை இந்து மாமன்றம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என யாழ். மாவட்ட இந்து மக்கள் சார்பாக வேண்டுகோள் விடுக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## உள்ளம் சொல்வதைக்கேள்



கடவுளை அவருடைய அருளால் பார்க்கமுடியும். கடவுள் நமக்கு அருகில் இருந்தாலும் தேடினால் மட்டுமே காணக்கூடியவராக இருக்கிறார்.

உயர்ந்த மனநிலைக்கு ஒருவனை அழைத்துச் செல்வது அறிவாற்றலே. அப்போது இதயம் தெய்வீக நிலையை அடைகிறது.

பண்புடையவர்களிடம் நம்பிக்கை, நேர்மை, பக்தி ஆகிய குணங்கள் தானாகவே வந்துவிடும். இந்தக்குணங்கள் உள்ளவர்களுக்கு எந்த ஆபத்தும் நிகழ்வதில்லை.

உண்மை,தூய்மை, சுயநலமின்மை ஆகிய மூன்றையும் பெற்றுள்ள ஒருவனை உலகமே எதிர்த்து நின்றாலும் அதை எதிர்த்து நிற்கக்கூடிய ஆற்றல் அவனுக்கு உண்டு. அவன் எதிலும் வெற்றி பெறுவான்.

அறிவு, உள்ளம் இவ்விரண்டில் எதைப்பின்பற்றுவது என மனதில் போராட்டம் எழும்போது உள்ளம் சொல்வதையே பின்பற்றுங்கள். உள்ளமே மனிதனின் கண்ணாடியாக இருக்கிறது.

# ஒபாமாவுக்கு குடும்பக் கஷ்டம் தெரியும் அவரை மீண்டும் ஜனாதிபதியாக்குங்கள்



## பிரசாரத்தில் இறங்கினார் மிச்செல்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் போட்டியிடும் பராக் ஒபாமா முறைப்படி தனது தேர்தல் பிரசாரத்தை நேற்று முன்தினம் ஆரம்பித்தார். அமெரிக்காவில் கடந்த 2008 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிட்டு ஜனாதிபதியானார் பராக் ஒபாமா. இவரது பதவிக்காலம் முடிவதை அடுத்து வரும் நவம்பர் 6 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடக்கிறது.

கடந்த 2008 ஆம் ஆண்டு நடந்த தேர்தலின் போது நம்மால் முடியும் என்ற ஸ்லோகத்தின் அடிப்படையில் பிரசாரம் செய்து இளைஞர்களை கவர்ந்தவர் ஒபாமா. ஆனால் இப்போது அமெரிக்கா கடும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து வருகிறது. வேலை வாய்ப்புக்கள் இல்லாமல் இளைஞர்கள் தவிக்கின்றனர். இதனால் ஒபாமாவின் செல்வாக்கு சரிந்துள்ளது என்று அரசியல் வல்லுநர்கள் கூறியுள்ளனர்.

இந்தச் சூழ்நிலையில் முன்னேறு என்ற ஸ்லோகத்துடன் ஓகியோவில் பிரசாரத்தை தொடங்கினார் ஒபாமா. அப்போது அவர் பேசுகையில், கடும் பொருளாதார சிக்கலில் அமெரிக்கா இருந்த போது நான் ஜனாதிபதி பதவி ஏற்றேன். பல பிரச்சினைகள் எழுந்தாலும் எங்கும் நான் ஓடிவிடவில்லை. எதிர்க் கட்சி வேட்பாளர் ரோம்னி தவறான யோசனைகளை கூறி பிரசாரம் செய்கிறார். நடுத்தர வர்க்கத்தினரை பற்றி அவர் கவலைப்படவில்லை. பணக்கார்ர்களுக்கு சாதகமான திட்டங்களை கூறி பிரசாரம் செய்கிறார். அவற்றை நம்பாதீர்கள்.

அமெரிக்காவுக்கு இது வெறும் தேர்தல் அல்ல. நாட்டின் பொருளாதாரம். மக்களின் முன்னேற்றம் பற்றிய விடயம். எனவே ரோம்னிக்கு வாய்ப்பு கொடுத்த விடாதீர்கள் என்றார். ஒபாமாவின் மனைவி மிச்செல்லும் பிரசாரம் செய்தார். அப்போது அவர் பேசுகையில்,

சாதாரண குடும்பத்தில் இருந்து வந்தவர் ஒபாமா. அவருக்கு குடும்ப கஷ்டம் தெரியும். அவர் யார் என்பது நம் எல்லோருக்கும் தெரியும். அவருக்கு மீண்டும் வாய்ப்பு கொடுங்கள் என்றார்.


ஒபாமா மீண்டும் ஜனாதிபதியாவதற்கு 85 சதவீத அமெரிக்க இந்தியர்கள் ஆதரவு தெரிவித்துள்ளதாகவும் எதிர்க்கட்சியை சேர்ந்த மிட் ரோம்னிக்கு எட்டு சதவீதம் மட்டுமே இந்தியர்கள் ஆதரவு தெரிவித்துள்ளதாக கருத்துக்கணிப்பு ஒன்று தெரிவித்துள்ளது. இதே போல் 68 சதவீதம் அமெரிக்க வாழ் சீனர்கள் ஒபாமாவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளதாகவும் பிலிப்பைன்ஸ் நாட்டை சேர்ந்த அமெரிக்கர்கள்தான் மிட் ரோம்னிக்கு அதிக பட்சமாக 57 சதவீத ஆதரவு தெரிவித்துள்ளனர் என இந்த கருத்துக்கணிப்பில் கூறப்பட்டுள்ளது. (அ-2)






டர்பனில் உள்ள ஆபிரிக்கா தேசிய காங்கிரஸ் முதல் ஜனாதிபதியான லூடியுப் இல்லத்தில் உள்ள அவரது சிலையை கண்டார். இந்திய குடியரசுத் தலைவர் பிரதீபா பட்டேல் பார்வையிட்டார்.

## மூன்றாவது தடவையாக பதவி ஏற்கிறார் விளாடிமிர் புடின்



(மொஸ்கோ)

ரஷ்ய ஜனாதிபதி தேர்தலில் அபார வெற்றியைப் பெற்ற விளாடிமிர் புடின் நேற்றைய தினம் ரஷ்ய ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார். ரஷ்ய ஜனாதிபதியாக மூன்றாவது முறை யாக பொறுப்பேற்கவுள்ள அவர் அப்பத வியில் 6 ஆண்டுகள் நீடிப்பார் எனத் தெரிவி க்கப்பட்டுள்ளது.

அதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று முன் தினம் எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தின. இதில் சுமார் 10 இலட்சம் பேர் திரண்டனர். தலைநகர் மொஸ்கோவில் நடந்த பேரணிக்கு எதிர்க்கட்சி தலைவர்கள் அலெக்ஸ்சி நவால்னி, போரிஸ் நெம்ட்சோவ், செர்ஜி உபால்ட் சோவ் ஆகியோர் தலைமை தாங்கினர்.

முன்னதாக நடந்த பேரணியின் போது கிரம்ளின் மாளிகைக்கு செல்லும் மொஸ்கோ ஆற்று பாலத்தில் பொலிஸாருக்கும் எதிர்க்கட்சியினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

இதுவே பின்னர் கலவரமாக மாறியது. இதை தொடர்ந்து போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தி கலைத்தனர். இதன்போது நூற்றுக்கணக்கானோர் கைதாகினர். (அ-2)

## பிரான்சின் புதிய தலைவரை அழைக்கிறார் பராக் ஒபாமா

பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற பிராங்கோஸ் ஹாலண்ட்டிற்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அழைப்பு விடுத்துள்ளார். இது குறித்து அமெரிக்க வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜேய்கார்னே கூறியதாவது, பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற ஹாலண்ட்டிற்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா டெலிபோனில் வாழ்த்துத் தெரிவித்தார்.

மேலும் பேசுகையில், பிரான்ஸ்-அமெரிக்கா இரு நாடுகளுக்கிடையே பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு சவால்களில் இணைந்து செயல்பாடு குறித்துப் பேசியதாக அவர் தெரிவித்தார். (அ-2)

## பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தலில் ஹாலண்டே வெற்றி பெற்றார்

பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தலில் சோஷலிசக் கட்சி வேட்பாளர் பிராங்காய்ஸ் ஹாலண்ட் வெற்றி பெற்றுள்ளார். இப்போதைய ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோஸி தோல்வியடைந்தார். நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இரண்டாம் சுற்று வாக்குப் பதிவு முடிந்ததும் தேர்தல் முடிபுகள் வெளியாகத் தொடங்கின. இதில் ஹாலண்டேவுக்கு சுமார் 52 சதவீதமும் சர்கோஸிக்கு சுமார் 48 சதவீதமும் வாக்குகள் பதிவானதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

1995 இற்குப் பின்னர் சோஷலிச தலைவர் ஒருவர் பிரான்ஸ் ஜனாதிபதியாக தேர்வாவது இதுவே முதல் முறையாகும். இதையடுத்துத் தங்கள் வெற்றியைக் கொண்டாடும் வழக்கமான இடமான தலைநகர் பாரீஸில் உள்ள லா பாஸ்டைல் பகுதியில் இடதுசாரி தொண்டர்கள் குவியத் தொடங்கினர். பிரான்ஸ் தேசத்தின் பொருளாதார நெருக்கடிகளையும், சர்கோஸி மீதான அதிருப்தியையும் தனக்குச் சாதகமாக தேர்தலில் பயன்படுத்திக் கொண்டார் ஹாலண்டே. இந்தத் தேர்தலின் தாக்கம் ஐரோப்பா முழுவதும் எதிரொலிக்கும் என்று அரசியல் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

ஐரோப்பிய யூனியனின் பொருளாதார திட்டங்களை மறு ஆய்வு செய்யப்போவதாக ஏற்கனவே ஹாலண்டே தெரிவித்துள்ளார். பெரு நிறுவனங்களுக்கும், ஆண்டுக்கு 10 இலட்சம் மில்லியன் யூரோவுக்கு அதிகமாக சம்பாதிப்போருக்கும் அதிக வரி விதிக்கப்படும் என்று ஏற்கனவே அவர் கூறியுள்ளார்.

பதவியிலிருக்கும் ஜனாதிபதி ஒருவர் அடுத்த தேர்தலில் தோற்றுப்போவது 1958-வது ஆண்டுக்குப் பின்னர் இது இரண்டாவது முறையாகும். இதற்கு முன்பு வலேரி கிஸ்கார்ட் டி எஸ்டெய்ங் என்ற ஜனாதிபதி 1981இல் நடைபெற்ற தேர்தலில் சோஷலிச வேட்பாளர் பிராங்காய்ஸ் மிட்டர்ரன்ட் என்பவரால் தோற்கடிக்கப்பட்டார். (அ-2)

# டில்லியை 6 விக்கெட்டுக்களால் வீழ்த்தியது கொல்கத்தா

ஐ.பி.எல்.போட்டித் தொடரின் 51ஆவது லீக் ஆட்டம் நேற்றிரவு டில்லியில் நடைபெற்றது.

சேவாக் தலைமையிலான டில்லி டேர்டேவில்ஸ் அணியும் கவுதம் காம்பீர் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதின. டில்லி அணியில் கடந்த போட்டியில் விளையாடிய கெவின் பீற்றர்சன் , பவன் நேகி ஆகியோர் நீக்கப்பட்டு டேவிட் வோர்னர், வருண் ஆரோன் சேர்க்கப்பட்டிருந்தனர்.

கொல்கத்தா அணியில் கடந்த போட்டியில் விளையாடிய இக்பால் அப்துல்லா மர்ச்சன்ட் டி லாங்கே ஆகியோர் நீக்கப்பட்டு , பிரதீப் சங்வான், பிரெட் லீ ஆகியோர் சேர்க்கப்பட்டிருந்தனர்.

நாணயச் சுழற்சியில் வென்ற டில்லி அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

இதனையடுத்து டில்லி அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக வீரேந்திர சேவாக்கும், டேவிட் வோர்னரும் களமிறங்கினர்.

முதல் ஓமிரை பிரெட் லீ வீச, டேவிட் வோர்னர் எதிர் கொண்டார்.

சிறப்பாகப் பந்து வீசிய பிரெட்லீ, முதல் ஓவரை மெடின் ஓவராக வீசினார்.

இரண்டாவது ஓவரில் ஷேவாக் தனது அதிரடியைக் காட்டினார்.

2 மற்றும் 3-வது ஓவர்களில் அதிகமான ஓட்டங்கள் போனதால் 4-வது ஓவரை ஜக் கலிஸிற்கு கொடுத்தார் காம்பீர்.

கலிஸின் சிறப்பான பந்து வீச்சால் அதிரடியாய் ஆடிக் கொண்டிருந்த சேவாக் 9 பந்துகளில் 23 ஓட்டங்கள் எடுத்திருந்த போது கலிஸ் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இவரையடுத்து ஜெயவர்த்தனவுடன் ரோஸ் ரெய்லர் ஜோடி சேர்ந்தார்.

ஆனால் வோர்னரும் 21, ஜெயவர்த்தன 30 ஓட்டங்கள் என ஆட்டமிழக்க டில்லியின் ஓட்ட எண்ணிக்கை சரியத் தொடங்கியது.

அடுத்து ரெய்லர் 16, நாயர் 10, பதான் 36 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்க,

டில்லி அணி 20 ஓவர்கள் முடிபில் 9விக்கெட்டுகளை இழந்து 153 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

இதனையடுத்து 154 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலெடுத்தாடக் களமிறங்கியது கொல்கத்தா.

காம்பீர்-மக்குலம் ஜோடி ஆரம்பத்தில் அதிரடி காட்டினாலும், காம்பீர் 36 ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

அடுத்து வந்த கலிஸ் 30 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

மக்குலமும் 56 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தாலும், கொல்கத்தா அணி 18.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக கொல்கத்தா அணியின் ஜக் கலிஸ் தேர்வானார்.

# சென்னையை வீழ்த்துவோம் என்ற நம்பிக்கை இருந்தது-ஸ்மித்

ஐ.பி.எல் போட்டியில் நேற்று முன்தினம் மும்பை இந்தியன்ஸ் அணி நடப்பு சம்பியனான சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை கடைசி பந்தில் வென்றது.

முதலில் விளையாடிய சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 8 விக்கெட் இழப்புக்கு 173 ஓட்டங்கள் எடுத்தது. பின்னர் விளையாடிய மும்பை இந்தியன்ஸ் 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 174 ஓட்டங்கள் எடுத்து 2 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

கடைசி 3 பந்தில் மும்பை அணியின் வெற்றிக்கு 14 ஓட்டங்கள் தேவைப்பட்டது. இதை எடுப்பது கஷ்டம். சென்னை அணி வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஸ்மித் அதிரடியாக விளையாடி மும்பையை வெற்றி பெற வைத்தார்.

ஆட்டநாயகன் விருது பெற்ற ஸ்மித் இந்த வெற்றி குறித்து கூறியதாவது,

என்னால் அதிரடியாக விளையாடி அணியை வெற்றி பெறவைக்க முடியும் என்ற நம்பிக்கை இருந்தது. இதனால் தான் ஆர்.பி. சிங்கிடம் ஒரு ஓட்டம் எடுத்துவிட்டு வாருங்கள் நான் பார்த்துக் கொள்கிறேன் என்று நம்பிக்கையுடன் தெரிவித்தேன்.

நான் களத்தில் இறங்கும் முன்பு டெண்டுல்கர் என்னிடம் ஆடுகளம் துடுப்பாட்டத்திற்கு ஏதுவாக சிறப்பாக உள்ளது என்று கூறினார்.

நான் முதல் பந்தை எதிர்கொண்டவுடன் நம்மால் அதிரடியாக ஆட முடியும் என்பதை புரிந்து கொண்டேன். கடைசி நேரத்தில் ஐ.பி.எல். போட்டியில் மும்பை அணியில் இடம் பெற்றது மகிழ்ச்சி அளிக்கிறது என்று கூறினார்.

தோல்வி குறித்து சென்னை சூப்பர் கிங்ஸ் பயிற்சியாளர் பிளமிங் கூறியதாவது, நான் பார்த்த போட்டிகளில் இந்த போட்டி மிகவும் சிறந்தது. ஆனால் முடிபு எங்களுக்கு சாதகமாக அமையவில்லை.

ஸ்மித்தின் ஆட்டம் மிகவும் அபாரமாக இருந்தது. இருபது-20 போட்டியில் தனி ஒரு மனிதரால் ஆட்டத்தை வெற்றி பெற வைக்கவும் முடியும், தோல்வியை அடைய செய்யவும் முடியும் என்பதை இந்த ஆட்டத்தின் மூலம் பார்த்தேன்.

டெண்டுல்கரின் ஆட்டம் சிறப்பாக இருந்தது. அவரும், ரோகித் சர்மாவும் இணைந்து ஆடிய ஆட்டம் முக்கியமானது. இனிவரும் 4 ஆட்டங்களில் மூன்றில் வெல்வது கட்டாயமாகும் என்று தெரிவித்தார்.

**இன்றைய ஐ.பி.எல். போட்டிகள்:**

மாலை 4 மணிக்கு புனேயில் நடைபெறும் போட்டியில் புனே வாரியர்ஸ் அணி எதிர் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும், இரவு 8 மணிக்கு ஐதராபாத்தில் நடைபெறும் போட்டியில் கிங்ஸ் லெவின் பஞ்சாப் எதிர் டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் மோதுகின்றன.

## புள்ளிப் பட்டியல்

நேற்றுவரை நடைபெற்ற 51 லீக் போட்டிகளின் முடிபில் ஐ.பி.எல்.சீசன் 5இன் அணிகளின் நிலை. 72 லீக் போட்டிகளின் முடிபில் முதல் 4 அணிகளே அரையிறுதிக்கு தகுதி பெறும்.

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | ஓட்ட விகிதம் |
|---|---|---|---|---|---|---|---|
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 12 | 8 | 3 | 0 | 1 | 17 | +0.600 |
| டில்லி டேர்டேவில்ஸ் | 11 | 8 | 3 | 0 | 0 | 16 | +0.880 |
| மும்பை இந்தியன்ஸ் | 11 | 7 | 4 | 0 | 0 | 14 | –0.143 |
| சென்னை சுப்பர் கிங்ஸ் | 12 | 5 | 6 | 0 | 1 | 11 | +0.013 |
| றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு | 11 | 5 | 5 | 0 | 1 | 11 | –0.333 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 11 | 5 | 6 | 0 | 0 | 10 | +0.144 |
| கிங்ஸ் லெவின் பஞ்சாப் | 11 | 5 | 6 | 0 | 0 | 10 | –0.453 |
| புனே வாரியர்ஸ் | 12 | 4 | 8 | 0 | 0 | 8 | –0.134 |
| டெக்கான் சார்ஜர்ஸ் | 11 | 2 | 8 | 0 | 1 | 5 | –0.557 |

# சிறிலங்கா பிறிமியர் லீக் ஜூலை 19இல் ஆரம்பம்

கடந்த ஆண்டு நடத்தப்பட தீர்மானிக்கப்பட்டிருந்த சிறிலங்கா பிறிமியர் லீக் எதிர் வரும் ஜூலை 19ஆம் திகதி முதல் ஓகஸ்ட்4 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

கடந்த ஆண்டு இடம்பெறவிருந்த இத் தொடர் இந்திய கிரிக்கெட் சபையின் போதிய ஆதரவின்மை மற்றும் தொடரை நடத்தவிருந்த தனியார் அமைப்புடன் ஏற்படுத்தப்பட்டிருந்த ஒப்பந்தத்தில் எழுந்த சர்ச்சைகள் ஆகியன காரணமாக பிற்போடப்பட்டிருந்தது.




இந்தியாவின் இந்தியன் பிறிமியர் லீக் போட்டிகள் போன்று வெளிநாட்டு வீரர்களை உள்ளடக்கிய இருபது-20 தொடரொன்றை நடத்த இலங்கைக் கிரிக்கெட் சபை தீர்மானித்திருந்தது. இதன்படி சிங்கப்பூரை மையமாக்க் கொண்ட சமர்செட் பொழுதுபோக்கு நிறுவனத்துடன் இது தொடர்பான ஒப்பந்தத்தை இலங்கைக் கிரிக்கெட் சபை மேற்கொண்டிருந்தது.

கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து அது தொடர்பாக ஆராய்வதற்காக விளையாட்டுத்துறை அமைச்சரால் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. அதன்படி கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட 5 வருட கால ஒப்பந்தம் ரத்துச்செய்யப்பட்டு புதிய திருத்தப்பட்ட ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

மாகாணங்களை அடிப்படையாக் கொண்ட 7 அணிகளைக் கொண்டு இத் தொடர் இடம் பெற ஏற்பாடாகியிருந்தது. மேல் மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு பஸ்னாகிர பியர்ஸ்,

மத்திய மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு கந்துரட்ட கைற்ஸ்,

கிழக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு நாகேந்திர நாகாஸ்,

தென் மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு றுகுண றைனோஸ்,

வடக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு உத்தர ஓரிசைன்ஸ்,

ஊவா மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு ஊவா யுனிக்கோர்ண்ஸ் மற்றும் வட மேல் மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு வயம்ப வோல்வ்ஸ் ஆகிய அணிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தன.

# 3-வது போட்டியிலும் இலங்கை தோல்வி

மேற்கிந்திய தீவுகளுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை பெண்கள் கிரிக்கெட் அணிக்கும் மேற்கிந்திய தீவுகள் பெண்கள் கிரிக்கெட் அணிக்குமிடையிலான மூன்றாவது இருபது-20 போட்டியிலும் மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றிபெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் பெண்கள் அணி 3 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

குயீன்ஸ் பார்க் ஓவல் மைதானத்தில் இடம் பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை பெண்கள் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. மழை காரணமாக தாமதிக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட இப் போட்டி 16 ஓவர்கள் கொண்ட போட்டியாக இடம்பெற்றது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை பெண்கள் அணி 16 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 77 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் இலங்கை பெண்கள் அணி சார்பாக தீபிகா ரசசிங்க 25 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களையும், பிரசாதனி வீரக்கொடி 15 ஓட்டங்களையும் பெற்றனர்.

16 ஓவர்களில் 78 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற நிலையில் பதிலெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி ஆரம்பத்திலிருந்து விக்கெட்டுக்களை இழந்த போதிலும், அதன் பின்னர் மீண்டு வெற்றி இலக்கை 15.1 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களையிழந்து அடைந்தது.

ஒரு கட்டத்தில் 38 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களையிழந்திருந்த போதிலும், பின்னரே வெற்றி இலக்கை அடைந்தது.

பந்து வீச்சில் இலங்கை பெண்கள் அணி சார்பாக ஶ்ரீபாலி வீரக்கொடி 4 ஓவர்களில் 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், சமானி செனவிரத்ன 3 ஓவர்களில் 8 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், ஷஷிகலா சிரிவர்தன மற்றும் சன்டிம குணரத்ன ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர். இப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக ஷெமெய்ன் கம்ப்பெல்லிதெரிவு செய்யப்பட்டார்.

# எல்லே போட்டியில் யாழ்.பல்கலை சம்பியன்

நல்லூர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றங்களுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான எல்லே போட்டியில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தேசிய இளைஞர் சங்க விளையாட்டுக் கழகம் பிரதேச செயலக சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் பல்கலைக்கழக தேசிய இளைஞர் மன்ற விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாண ஜொனியன்ஸ் தேசிய இளைஞர் மன்ற விளையாட்டுக்கழகமும் மோதின.

40 பந்துகளுக்கு மட்டுப்படுத்திய போட்டியாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம் 40 பந்துகளில் அனைவரும் ஆட்டமிழந்து 02 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

03 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கி விளையாடிய பல்கலைக்கழக அணி 24 பந்துகளில் 03 ஓட்டங்களை 06 பேர் ஆட்டமிழந்த நிலையில் பெற்று நல்லூர் பிரதேச செயலக தேசிய இளைஞர்கழகத்தின் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

## இந்திய-அமெரிக்க அழுத்தங்களால்
# தமிழர்களுக்கான தீர்வை அரசு தரும்;ஆனால் தராது!
## குற்றம் சாட்டுகிறார் கருணாரட்ண



(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்குவோமென இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் உறுதியளிக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, மறுபுறம் சிங்கள தேசாபிமான அமைப்புக்களை தூண்டிவிட்டு உரிமைகள் வழங்குவதை தடுக்கும் சதித் திட்டத்தையும் மேற்கொள்கிறார் என நவ சமசமாஜக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக நவ சமசமாஜக் கட்சியின் தலைவரும் தெஹிவளை -கல்கிசை மாநகர சபையின் உறுப்பினருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவின் அழுத்தம் காரணமாகவே ஐ.தே.கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்த கூட்டு மே தினம் யாழப்பாணத்தில் நடைபெற்றது.

அரசாங்கத் தரப்பு, படைத்தரப்பு என யாழ்ப்பாணத்தில் மே தினத்தை நடத்துவதை தடுப்பதற்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. முட்டுக்கட்டைகள் போடப்பட்டன. இவையனைத்தையும் தகர்த்தெறிந்து மே தினம் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. 15ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்ட னர்.

இதன் பின்னணியில் இந்தியா இருந்திருக்கலாம். ஆனால் மக்களுக்கு வெற்றி கிடைத்துள்ளது. இம் மே தினத்தால் அரசாங்கத்தின் மத்தியில் தற்போது அச்சம் குடி கொண்டுள்ளது.

அத்தோடு இந் நிலைமையை பயன்படுத்தி தமிழ் மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கலுடன் உரிமைகளை வழங்க வேண்டுமென்ற இந்தியாவின் அழுத்தம் அதிகரித்துள்ளது.

நாளுக்கு நாள் அமெரிக்காவினதும் இந்தியாவினதும் அழுத்தங்கள் ஜனாதிபதி மகிந்த மீது அதிகரித்து வருகின்றன. இதனால் தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்க வேண்டிய கட்டாயம் ஜனாதிபதிக்கு உருவாகியுள்ளது.

தமிழ் மக்களுக்கு அதிகாரத்தை பரவலாக்கி உரிமைகள் வழங்குவதை ஜனாதிபதி ஒருபோதும் விரும்பவில்லை. இதற்கு எதிரான கொள்கையையே கொண்டுள்ளார். ஆனால் வெளிநாடுகளின் அழுத்தம் காரணமாக உரிமைகளை வழங்க வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளார். வழங்குவோம்; ஆனால் வழங்க மாட்டோம் என்பதே ஜனாதிபதியின் கொள்கையாகும்.

இதனால் நாட்டிலுள்ள சிஹல உறுமய, ஜே.வி.பி., தேசிய சுதந்திர முன்னணி மற்றும் சிங்கள பேரினவாதிகளின் தேசாபிமான அமைப்புக்களை தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்குவதற்கு எதிராக தூண்டிவிடும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின் றன.

இவ் எதிர்ப்பை பயன்படுத்தி தமிழ் மக்களை அடிமைகளாக வாழ வைப்பதே ஜனாதிபதியின் திட்டமாகும் என விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்தார். (ந-8)

### தீர்வுக்கான தெரிவுக்குழு...

ஜெனிவாவுக்கு செல்வதை தவிர்த்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, கடந்த மே தினத்தன்று எதிர்க் கட்சிகளுடன் கூட்டாக இணைந்து யாழ்ப்பாணத்தில் மே தின நிகழ்வை நடத்தியதுடன் ரணிலுடன் இணைந்து தேசியக் கொடியை சம்பந்தன் ஏந்தியிருந்தார்.

சம்பந்தன் தேசியக் கொடியை ஏந்தியமை ஒரு புரட்சிகர மாற்றம்.. இதனை அரசு நல்லமுறையில் பயன்படுத்த வேண்டும் என அமைச்சர் திஸ்ஸ விதாரன கருத்து வெளியிட்டிருந்த நிலையில்,

தெரிவுக்குழுவில் பங்கேற்பது என்ற முடிவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை எடுத்திருப்பதாகத் தெரிய வருகின்றது. (ந-8)

### கடற்படை வீரா...

தெரிவித்தார்.

கடற்படையும், பொலிஸாரும் இது தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித் துள்ளனர். இதுபோன்ற உள்மோதல்கள் படையினர் மத்தியில் அதிகரித்து வருகின்றது.

கடந்த மாதம் சாவகச்சேரியில் இராணுவச் சிப்பாய்கள் மூவரும், கடந்த வாரம் யாழ். நகரில் இராணுவச் சிப்பாய்கள் இருவரும் இவ்வாறான உள்முரண்பாட்டினால் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-8)

### யாழில் மீள்குடிய...

காப்பு வலயமாக இருந்து பின்னர் மீள் குடியமர்வுக்கு அனுமதி வழங்கப்பட்ட பகுதிகளில் இடம்பெயர்ந்திருந்தவர்களில் பலர் ஏற்கெனவே மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

வலிகாமம் பிரதேசத்திலுள்ள சில பகுதிகளில் இன்னும் மீள்குடியமர்வுக்கான அனுமதி வழங்கப்படவில்லை என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கூறியுள்ளார். (ந-8)

### அமைச்சரவை மாற்ற...

இதற்கு முன்னர் பல தடவை அமைச்சரவையில் மாற்றம் செய்ய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முயற்சி மேற்கொண்டபோதிலும் குடும்பத்திற்குள் ஏற்பட்டுள்ள உட்தரப்பு மோதல், சோதிட ஆலோசனைகள் ஆகிய காரணங்களால் அந்தத் தீர்மானம் ஒத்தி வைக்கப்பட்டது.

இம்முறை அமைச்சரவை மாற்றத்தின் ஊடாக மாவட்ட அபிவிருத்திகளைக் கண்காணிக்கும் வகையில் அமைச்சுப் பதவியொன்றை உருவாக்கி அதனை நாமல் ராஜபக்ஷவிற்கு வழங்க ஜனாதிபதி தீர்மானித்திருந்த போதிலும், அமைச்சரவையில் மாற்றம் ஏற்படுத்துவதற்கான தீர்மானம் இம்முறை ஏன் ஒத்திவைக்கப்பட்டது என்பது குறித்த தகவல்கள் வெளியாகவில்லை. (ந-2)

# இலங்கை-ஜோர்தான் பேச்சு முற்றாக ரத்து!

(கொழும்பு)

இலங்கை மற்றும் ஜோர்தான் உயர்மட்டப் பிரதிநிதிகளுக்கு இடையில் இவ்வாரம் இடம் பெறவிருந்த இரு தரப்புப் பேச்சுவார்த்தை திடீரென இரத்துச் செய்யப்பட்டுள்ளது. ஜோர்தான் பிரதமர் அவ்ன் கசாவ்னே திடீர் பதவி விலகியதை அடுத்து இந்த முடிபு எடுக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் தற்போது நிலவும் அரசியல் நெருக்கடிகள் காரணமாக குறித்த பேச்சுவார்த்தை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் டி.எம்.ஜயரத்னவின் இணைப்புச் செயலாளர் சிசிர விஜேசிங்க வெளிநாட்டுச் செய்திச் சேவை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

ஜோர்தானின் பிரதமரும் பாதுகாப்பு அமைச்சருமான அவ்ன் கசாவ்னே, ஜோர்தானின் வர்த்தகத் துறை அமைச்சர், வெளிவிவகார அமைச்சர், பெருந்தோட்ட ஒத்துழைப்பு அமைச்சர், பொது வேலைகள் மற்றும் சுகாதார அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் 7 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை இலங்கைக்கு விஜயம் செய்ய திட்டமிட்டிருந்தனர்.

இந்தநிலையில், அரசியல் நெருக்கடிகளால் ஜோர்தான் பிரதமர் பதவி விலகியதை அடுத்து குறித்த விஜயம் முற்றாக இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் இலங்கைப் பணியாளர்கள் அதிகம் பணிபுரியும் நாடாக ஜோர்தான் விளங்குவதோடு, தற்போது அங்கு 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட இலங்கையர்கள் பல துறைகளில் பணிபுரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-8)

# சூரியத் தட்டு வழியே வெள்ளி யூன் 6 இல் நகரும் அதிசயம்
## வெற்றுக் கண்ணால் பார்க்க வேண்டாமாம்

(சென்னை)

எதிர்வரும் யூன் மாதம் 6ம் திகதி வெள்ளிக் கிரகம், சூரிய தட்டு வழியே கடக்கும் அபூர்வ நிகழ்வு நடக்கிறது. அப்போது எவரும் வெறும் கண்ணால் சூரியனை பார்க்கக் கூடாது என விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வெள்ளிக் கோளானது சூரியத் தட்டின் வழியே ஒரு புள்ளி போன்று நகர்ந்து செல்லும். இந் நிகழ்வு வரும் யூன் 6-ம் திகதி வானில் நிகழ்கிறது.

இதனை காலை 5.30 மணி முதல் 10 மணி வரை தொலைநோக்கிகள் மூலம் காணலாம். இது ஒரு அற்புத நிகழ்வு. வெறும் கண்ணால் பார்க்கக் கூடாது.

பாதுகாப்பான முறையில் இந்த அரிய நிகழ்வைக் காண வேண்டும். இதுபோல் 1641 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை 7 முறை மட்டுமே தெரிந்துள்ளது.

இதன் பின் டிசம்பர் 2017ன் பின்னர் தான் நிகழும் என்றும் தமிழ்நாட்டு விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (ந-8)

### கிழக்கு மாகாண...

கிழக்கு மாகாணமுதலமைச்சர் சந்திரகாந்தன் சில நிபந்தனைகளுடன் இணக்கம் தெரிவித்ததாகவும் தெரியவருகின்றது. இந்நிபந்தனைகள் குறித்து பரிசீலிப்பதாக மகிந்த ராஜபக்ஷ உத்தரவாதமளித்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனிடையே இத்தேர்தலை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி நடத்துவதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே.

அதேவேளை சப்ரகமுவ, ஊவா மற்றும் கிழக்கு மாகாண சபைகளை முன்கூட்டியே கலைக்குமாறு அம்மாகாண சபைகளின் முதலமைச்சர்கள் மகிந்த ராஜபக்ஷவுக்கு எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் மீதான மக்கள் நம்பிக்கை இன்னும் குறையவில்லை என்பதை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்தும் வகையிலே இத் தேர்தல்களை முன் கூட்டியே நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-8)

### நிலையான பொருளாதா...

கூடிய தன்மையாக இருந்தது. அதேபோன்று மக்கள் மீது வரிச்சுமைகளை சுமத்தி, திட்டமிடாத கொள்கைகளையே அரசு முன்னெடுத்து வருகின்றது என்றார். (ந-8)

### ஜெனிவாத் தீர்மானம்

வரையறைகளை மீறி நவநீதம்பிள்ளை செயற்பட்டுள்ளதாக அரசாங்கத்தின் தரப்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நவநீதம் பிள்ளைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அரசாங்கத்தினால் உத்தியோகபூர்வமாக கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்படவுள்ளது.

இதனடிப்படையில் இக் கடிதத்தை எழுதும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கை அரசாங்கத்தின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-8)


**முதியோர் ஆறுதலின் ஆனந்த இல்லம்**

முதியோர் இல்லத்தில் சேர விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய இல.

**077 0204905**

தொடர்பு கொள்ள வேண்டிய நேரம் ஒவ்வொரு நாளும் மாலை 4 - 8 மணிவரை

(8416)



**அறிவித்தல்**

**தகவல் தொழில்நுட்ப பட்டக்கற்கை நெறி கொழும்பு பல்கலைக்கழகம்.**

கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பக்கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். க.பொ.த உயர்தரத்தில் சித்தியடையத் தவறியோர் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகவல் தொழில்நுட்ப கற்கைநெறியில் சித்தியடைவதன் மூலம் மேற்படி பட்டப்படிப்பை தொடரலாம். மேலதிக விபரங்களை இல. 324. பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

-இணைப்பாளர், BIT கற்கை நெறி
MCS தகவல் தொழில் நுட்ப வளாகம்

BIT சிறந்த பெறுபேற்றுக்காக கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து சிறப்பு விருதினை பெற்றுக்கொண்ட நிறுவனம்.

Supported by United Nation Development Programme / Jaffna Rehabilitation & Resettlement Projects.



**A/L பொருளியல் வினா - விடை**

பரீட்சை எதிர்பார்ப்புடன் கூடிய முற்றிலும் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட கட்டமைப்பு மற்றும் MCQ வினாக்கள் - விடைகள் அடங்கிய நூல்.

விலை : ரூபா 60.00

ஆசிரியர்: வே. கருணாகரன்

(8418)

பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை



பாரம்பரிய பட்டுக்களின் பரந்த சோலை



**காவேரி சில்க்ஸ்**

இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாரம்பரிய பட்டுக்கள், புத்தம் புதிய நவீனரக சல்வார்கள், பஞ்சாபிகள் மற்றும் அனைத்து தரப்பினருக்குமான ஆடை வகைகளும் நியாயமான விலைகளில் கிடைக்கும் ஒரே இடம்.

48, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-021 222 2333

திருமணப்பட்டுப் புடவைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.